KALKI 28.6.92 ரூ. 3.00
பொன்விழா ஆண்டு

கல்கி



ஜெ. ஆட்சியின் ஓராண்டுச் சா(வே)தனை!


சேஸாரி
மிகச்சிறந்த உல் மற்றும் நேர்த்தியான பாலியஸ்டர் மிடுக்குடன் இணைந்த சூட்டிங்ஸ் கச்சிதமான ஃபால்,
ஃபினிஷ் மற்றும் அணியும் உணர்வு அனைத்தும் ஒருங்கிணைந்த ஒரு அற்புத படைப்பு !
பாம்பே டையிங்
ஸ்தாபிதம் 1879

சிசேரியன்:

“வேண்டாத கொடுமையே!” “வரப்பிரசாதமே!”

பணத்திற்காகவும் நேரத்தை மிச்சம் பிடிப்பதற்காகவும் சிசேரியன் பண்ணும் கொடுமையை விளக்கி எழுதிய கட்டுரை அருமை. சிசேரியனுக்குப் பின்னால் விளையும் தீமைகளைப் பற்றிக் கொஞ்சம்...

1. முதல் குழந்தைக்குச் சிசேரியன் செய்யப்பட்டால் இரண்டாவது குழந்தை வயிற்றில் இருக்கும் போது அழுத்தம் தாங்காமல் கருப்பை கிழிந்து விடும் அபாயம் 90% உண்டு.

2. சிசேரியன் செய்யப்பட்ட தழும்பு பெரியதாய் இருந்தால் அதன் மீது SCAR ENDOMETRIOSIS எனப்படும் புற்றுநோய் வரும் வாய்ப்புகள் அதிகம்.

3. முதல் குழந்தை சிசேரியன் செய்யப்பட்ட எத்தனையோ பெண்கள் இரண்டாவது குழந்தைக்குத் தாயாக முடியாமல் (மலடாக) போய் இருக்கின்றனர். (PRIME INFERTILITY)

4. அபூர்வமான ஆனால் முக்கியமான அபாயம் பவுத்திரம் (FISTULA) எனப்படும் நோய். கருப்பைக்கும், வயிற்றிற்கும் இடையே நிரந்தரமாய் ஓர் ஓட்டை விழுந்து விடும்.

5. சிசேரியன், ஒரு மாத அளவை ஓய்வு என்ற பெயரில் விழுங்கி விடும். அதன் பிறகு, மூன்று மாத காலம் கனமான வேலைகள் எதுவும் செய்யக் கூடாது.

- டாக்டர். மஞ்களா ரவிச்சந்திரன்,
மதுரை - 20.

“**சு**கப்பிரசவம் இருக்க சிசேரியன் எதற்கு'' என்னும் கட்டுரையைப் படித்து அதிர்ச்சி அடைந்தேன். தனியார் மருத்துவமனைகள் எப்படியானாலும் அரசு மருத்துவமனைகளைக் கவனித்தால் சிசேரியன் குறைவு என்பது தெரியும். பத்து ஆண்டுகளுக்கு முன் 8 - 10% இருந்தது. இன்று 15% மட்டுமே. இப்பொழுது சிறிது ஏறி இருப்பதற்கான காரணங்களில் முக்கியமானது, கருவுற்றிருக்கும் தாய்க்கும் கருப்பையின் உள்ளே இருக்கும் குழந்தைக்கும் ''சுகப் பிரசவம்'' ஏற்படப் போதிய தகுதி இருக்கிறதா இல்லையா என்று முன்கூட்டியே கண்டுபிடிப்பதற்கான வசதிகள் பெருகி உள்ளதுதான். இதனால் குழந்தை இறப்பு விகிதம் மிகவும் குறைந்துள்ளது. ஒரு பெண்ணுக்கு சிசேரியன் செய்ய முடிவெடுப்பதற்கு முன் ஆழ்ந்து யோசித்தே மருத்துவர்கள் செயல்படுகிறார்கள்.

- டாக்டர். அ. லோகாம்பாள், மதுரை.

“**எ**ந்தக் காரணங்களுக்காக சிசேரியன் செய்யப்படலாம் என்பதை FAGO எனப்படும் அமெரிக்க மகப்பேறு மருத்துவர் சங்கம் வரையறுத்துக் கூறியுள்ளது. அவை தவிர இதர காரணங்களுக்காக சிசேரியன் செய்யக் கூடாது என்றும், மீறிச் செய்பவர்கள் (நுகர்வோர் கோர்ட்டில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டால்) எதனால் செய்தார்கள் என்பதைச் சரியான ஆதாரங்களுடன் விளக்க வேண்டும் என்றும் நிபந்தனை விதிக்கப்பட்டுள்ளது. அந்த அமைப்பு கூறியுள்ளது உலகின் அத்தனை பேருக்கும் பொருந்தும் என்று (WHO) உலக சுகாதார நிறுவனம் திட்டவட்டமாய் அறிவித்துள்ளது. அந்தக் காரணங்கள் :

1. குழந்தை சுகப்பிரசவமாய் வெளிவர முடியாத சிறிய இடுப்பெலும்பு உள்ளவர்கள்.

2. போலியோ நோய் தாக்குதலுக்கு இலக்கான பெண்கள், தண்டுவட காச நோயினால் பாதிக்கப்பட்ட பெண்கள், சரவாங்கி நோயின் பாதிப்புக்கு ஆளான பெண்கள்.

3. கருப்பையின் தசைகள் சரிவரச் சுருங்கி விரியாத தன்மையால் ஏற்படும் சிக்கல்கள்.

4. குழந்தை வயிற்றில் இருக்கும் நிலை இயற்கைக்கு மாறானதாய் அமையும் போது சிசேரியன் அவசியம்.

5. மாலை சுற்றிப் பிறப்பது என்று கூறப்படும் நிலை.

6. பிரசவ கால ரத்தப்போக்கு, பிரசவ கால இரண்டாம் நிலை ஜன்னி, நீரிழிவு நோயோடு கருத்தரித்த பெண்கள், இதய நோய்களோடு கருத்தரித்த பெண்கள், 35 வயதுக்கு மேல் முதல் முறையாய்க் கருத்தரிக்கும் பெண்கள்.


7. இரட்டைக் குழந்தைகள் (ஸ்கேன் ரிப்போர்ட் சிசேரியன் என்று குறிப்பிட்டால் மட்டும்)

8. சிற்சில சமயங்களில் கருப்பை கிழிந்து விடும் சிக்கலான நிலைகள்.

9. இவை தவிர, குழந்தை வயிற்றுக்குள் இறந்து விட்டால் கட்டாயம் சிசேரியன்.

10. தலை மிகப் பெரியதாய் இருக்கும் குழந்தை வயிற்றில் இருந்தாலும் சிசேரியன் அவசியம்.

டாக்டர். இரா. ரவிச் சந்திரன், மதுரை - 20.



விளம்பரப் பிரியை!

ஜெ. ஆட்சியின் ஓராண்டுச் சா(வே)தனை!



ஜெயலலிதா, திறமையான, ஊழலற்ற, சிறந்த ஆட்சியைக் கொடுப்பார் என்ற நம்பிக்கை தமிழ் நாட்டு மக்களுக்கு (குறைந்தபட்சம் அவருக்கு வாக்களித்தவர்களுக்கு) இருந்தது. ஆனால் இந்த ஒரு வருடக் கணக்கை எடுத்துப் பார்த்தால், ஏமாற்றமே மிஞ்சுகிறது. ''இந்த ஒரு வருட காலத்தில், தாய்மார்கள், மாணவர்கள், விவசாயிகள், அரசு ஊழியர்கள் என்று சமுதாயத்தின் அனைத்துத் தரப்பினர் மாத்திரமல்ல; மடாதிபதிகள் கூட இந்த ஆட்சியின் மீது அதிருப்தி கொண்டிருக்கின்றனர்'' என்று சொல்கிறார் பண்ருட்டி ராமச்சந்திரன்.

விண்ணைத் தொடும் விலைவாசி


பொது மக்களை மிகவும் கவலைக்குள்ளாக்கி இருப்பது விலைவாசி ஏற்றம்தான். ஜெ. ஆட்சியில் மின்கட்டணம், பால் விலை, பஸ் கட்டணம் உயர்த்தப்பட்டது. இதெல்லாம் போதாது என்று, ரேஷனில் இருபது கிலோ கொடுத்துக் கொண்டிருந்த அரிசியையும் பன்னிரண்டு கிலோவாகக் குறைத்து விட்டார்கள். வெளிமார்க்கெட்டில் வாங்கலாம் என்றால், விலை பயமுறுத்துகிறது. இத்தனைக்கும் ஜெ. ஆட்சியில் இயற்கையின் கருணையால் நல்ல விளைச்சல். அப்படியிருந்தும் இந்த நிலை! பாம் ஆயில் என்பது தீபாவளி, பொங்கல் சமயங்களில் மட்டும் கொடுக்கப்படுகிற ஓர் அபூர்வப் பொருளாகி விட்டது. அதையே ஒரு பெரிய சாதனை போல் சொல்லிக் கொள்கிறார்கள். இந்த நிலையில் ரேஷனில் போடப்படும் அரிசி விலையைத் திடீரென்று உயர்த்தியும் ரேஷன் அரிசி பெறுவதற்கான வருமான வரம்பைக் குறைத்தும் அரசு அறிக்கை வெளியிட்டது. இதற்கு பலத்த எதிர்ப்பு வரும் சூழ்நிலை உருவாகவே, 24 மணி நேரத்திலேயே இந்த அறிவிப்புகள் வாபஸ் பெறப்பட்டன. சரியாக யோசித்துச் செயல்படாத அரசு என்று நிரூபணம் ஆயிற்று.

தலிவுற்ற தொழில் வளர்ச்சி

அ. இ. அ. தி. மு. க.தேர்தல் அறிக்கையில் 'தொழில் துவங்க முன் வருவோருக்கு ஊக்கம் அளிக்கப்படும். அரசு இயந்திரமும் நடைமுறை விதிகளும் தடையாக இருக்காது' என்று சொல்லப்பட்டிருந்தன. ஆனால் நடப்பது என்ன? ஒன்பது



ரேஷனில் விலையேற்றம்



☛ மகா(ஜெயா)மகம்...

மாதங்களில் ஐந்து முறை தொழில் துறைச் செயலாளரை மாற்றியது இந்த அரசு! ஜெயங்கொண்டம் பகுதியில் மூன்றாவது நிலக்கரிச் சுரங்கமும், மின் நிலையமும், தனியார் கூட்டுறவோடு வரும் என்று ஜெ. அறிவித்திருக்கிறாரே தவிர வேறு எந்த முன்னேற்றமும் இல்லை.

'ஆரோமெடிக்ஸ்' தொழிற்சாலையைப் பற்றி ஜெ. பெருமைபட்டுக் கொள்ள முடியாது. காரணம், அதற்கு வி. பி. சிங் காலத்திலேயே, பச்சைக் கொடி காண்பிக்கப் பட்டு விட்டது. ஐந்து வருடங்களில் 'ஒரு லட்சம் சிறு தொழிற்சாலைகள் அமைக்கப் படும்' என்றார் சட்டமன்றத்தில் ஜெ. அந்தக் கணக்குப்படி இந்த ஒரு வருடத்தில் 20,000 சிறு தொழில்கள் துவங்கப்பட்டதா? மூடிக் கிடந்த பின்னி ஆலையையும், ஸ்டாண்டர்ட் மோட்டார் தொழிற்சாலையையும் திறந்தது சாதனையில்லையா? என்று கேட்கிறார்கள் அ. தி. மு. க. வினர். ''தொழிலாளர்களைக் குறைத்து விட்டு, நலிவுற்ற ஆலைகளைத் திறப்பது ஒன்றும் சாதனையல்ல. ஜெ. ஆட்சியில், புதிதாக எத்தனை ஆலைகள் திறக்கப்பட்டன, வேலை வாய்ப்பு அதிகரித்ததா இதுதான் கேள்வி!'' என்கிறார் பண்ருட்டி.

தொழிலதிபர்களை விரட்டும் தமிழ்நாடு

சில குறிப்பிட்ட தொழிலதிபர்கள் தான் முதலமைச்சரை நெருங்க முடிகிறதே தவிர, புதிதாகத் தொழில் துவங்கும் ஆசையில் வரும் பலரும் 'யாரை அணுகுவது?' என்று புரியாமல் பின்வாங்குகிறார்கள். சகல அதிகாரங்களும், தம்மிடமே இருக்க வேண்டும் என்று ஜெ. கருதுவதால் அதிகாரிகள், தொழிலதிபர்களிடம் பேசுவதற்கே யோசிக்கிறார்கள். 'முதல்வரைச் சந்திக்கலாமே' என்றால் அதுவும் குதிரைக் கொம்பாக இருக்கிறது.

ராணாக் சிங் என்பவர் நைட்ரோ கிளிசரின் தொழிற்சாலையைத் தமிழகத்தில் ஆரம்பிக்க விரும்பினார். சரியான ஒத்துழைப்பு இல்லாததால் கர்நாடகத்துக்குச் சென்று விட்டார். இந்துஜா நிறுவனத்தினர் ஆயிரம் மெகாவாட் மின்நிலையம் தொடங்க தமிழ்நாட்டுக்கு வந்தார்கள். சாதகமான சூழ்நிலை இல்லாததால், ஆந்திராவுக்குப் பறந்து விட்டார்கள். சிங்கப்பூரைச் சேர்ந்த பெரிய தொழிலதிபர் ஒருவர் பல நாட்கள் இங்கே தங்கியும் யாரையும் சந்திக்க முடியாமல் திரும்பிச் சென்று விட்டார். ஜெ. ஆட்சியில் தொழில் வளர்ச்சி நிலைமை இப்படியிருக்கிறது!

தள்ளாடும் மதுவிலக்கு!

''மதுவிலக்கு கொள்கையைக் கண்டிப்பாக அறிமுகப்படுத்துவோம். சகல வழிகளிலும் பூரண மதுவிலக்கு அமுல்படுத்தப்படும்'' - இது ஜெ. தேர்தலின் போது கொடுத்த வாக்குறுதி. தெருவுக்குத் தெரு மலிவு விலைச் சாராயக் கடைகளைப் பார்த்து வெறுப்புற்ற தாய்க்குலம், ஜெ. வந்தால் கண்டிப்பாக மதுவை ஒழித்துக் கட்டுவார் என்று நம்பியது. அந்த நம்பிக்கையைக் காப்பாற்றும் வகையில் முதலில் மலிவு விலை சாராயக் கடைகளை மூடினார் ஜெ. சரி, அடுத்த கட்டமாக விஸ்கி, பிராந்திக் கடைகளையும் மூடுவார் என்று எதிர்

பார்க்கப்பட்டது. ஆனால் இப்போது நடந்திருப்பது என்ன? மேல்நாட்டு மதுபானக் கடைகள் மூடப்படாதது மட்டுமல்ல; பாண்டிச்சேரிக்குப் பழக்கமான 'பார்' கலாசாரம் தமிழகத்தில் அறிமுகப்படுத்தப்பட்டிருக்கிறது. இதன் மூலம் புதிய வரலாற்றைப் படைத்திருக்கிறார் ஜெ.


இது மட்டுமல்லாமல் உள்நாட்டில் தயாரிக்கப்படும் வெளிநாட்டு மது வகைகளுக்கு ஆயத் தீர்வையைக் குறைத்து, பாட்டில் விலையையும் குறைத்திருக்கிறார். தாய்க்குலம் இப்போது கண்ணீர் வடிக்கிறது. இந்த நிலையில் பீர் தொழிற்சாலையைத் தனியாருக்கே மீண்டும் விற்றது பற்றியும் அதில் காண்பிக்கப்பட்ட சலுகைகள் குறித்தும் சர்ச்சை எழுந்திருக்கிறது.

டான்சி ராணி

பீர் ஆலை விற்பனையை விட டான்சி நிலத்தை வாங்கிய விவகாரம்தான் பூதாகரமாக வெடித்திருக்கிறது. 54 ஏக்கர் நிலம். இன்றைய மார்க்கெட் மதிப்பு ஏக்கருக்கு ஏழு லட்சம். ஆக டான்சி அதை விற்பதாக இருந்தால் 3.78 கோடி ரூபாய்க்கும், அதிகமாக டெண்டர் கேட்டிருப்பவர்களுக்குத்தான் விற்க வேண்டும். ஆனால் ஜெ. பங்குதாரராக உள்ள ஜெயா பப்ளிகேஷன்ஸ் நிறுவனத்துக்கு 1.82 கோடிக்கு விற்பனை செய்யப்பட்டிருக்கிறது. அரசு பொறுப்பில் இருப்போர் அரசு நிலத்தை வாங்கவும் கூடாது. அரசுக்கு நிலத்தை விற்கவும் கூடாது என்று அரசு ஆணை இருந்தும் அது மீறப்பட்டுள்ளது. நிலைமை இப்படி இருக்க ''சட்டத்துக்கு உட்பட்டுத்தான் வாங்கினேன்; தவறேதும் இல்லை'' என்று சொல்லியிருக்கிறார் ஜெ. வேடிக்கைதான்!

முடக்கப்பட்ட டிட்கோ

நஷ்டத்தில் ஓடிக் கொண்டிருக்கும் தொழிற்சாலைகளைத் தனியாரிடம் கொடுப்பதை ஒப்புக் கொள்ளலாம். ஆனால் லாபத்தில் இயங்கிக் கொண்டிருக்கும் ஒரு நிறுவனத்தில் பாகஸ்தராக உள்ள அரசு, தனது பிடியைத் தனியாருக்கு விட்டுக் கொடுக்குமா? டிட்கோ - ஸ்பிக் விஷயத்தில் இதுதான் நடந்திருப்பதாகக் கூறப்படுகிறது. ''டிட்கோ பங்குகள் தனியாருக்கு விற்கப்படவில்லை'' என்று ஜெ. அறிக்கை விட்டிருப்பதில் பாதிதான் உண்மை. ''ஸ்பிக் நிறுவனத்தின் விரிவாக்கத் திட்டத்தில் பங்கு பெற்று, டிட்கோவின் நிதியை முடக்க வேண்டாம் என்ற அதன் நிர்வாகக் குழு முடிவின்படி, உரிய பங்கு விலையில் 112



Glacto®

இப்போது இரண்டு ஃபார்முலாக்களில்!



500 கிராம்
ரூ. 51/-



க்ளாக்டோ 1 - பிறந்த குழந்தைக்கான ஃபார்முலா, பிறந்ததிலிருந்து 6-மாதம் வரை

க்ளாக்டோ 2- தொடர் ஃபார்முலா, 6-ம் மாதம் முதல்

முக்கிய அறிவிப்பு

தாய்ப்பால் உங்கள் குழந்தைக்குச் சிறந்தது.

நுகர்வோர் நலனைக் கருதி வெளியிடப்பட்டது.

Gx.652.92.Tm

சதவீதம் பெற்றுக் கொண்டுதான் அதில் (விரிவாக்கத்தில்) புதிய பங்குகள் வாங்கும் உரிமையை டிட்கோ விட்டுக் கொடுத்துள்ளது'' என்றும் முதல்வர் கூறியிருப்பதைக் கவனிக்க வேண்டும். இதன் மூலம் புரிய வருகிற விஷயம் என்னவென்றால், ஸ்பிக்கும், சென்னை எண்ணெய்ச் சுத்திகரிப்பு நிறுவனமும் கூட்டாகத் துவங்க இருக்கும் 2,000 கோடி 'ஆரோமடிக்ஸ்' தொழிற்சாலையில் (ஸ்பிக் விரிவாக்கத் திட்டத்தில் இதுவும் ஒன்று) டிட்கோவின் (தமிழக அரசின்) பங்கு பெருமளவில் இருக்காது; ஆனால் ஸ்பிக்கில் பாகஸ்தர்களாக இருக்கும் தனியாரின் பங்கு அதிகமாக இருக்கும். ஆக, அரசு தனியார் ஒருவருக்கு வளைந்து கொடுத்திருப்பது ஏன் என்பதுதான் கேள்வி!

வசதியே! வா! வா!

இப்படி ஒரு பக்கம் தனியார் தொழிலதிபர்களுக்கு வசதி செய்து தரும் ஜெ., தமது வசதியையும், தோழி சசிகலா குடும்பத்தின் வசதியையும் பெருக்கிக் கொள்ளவும் தவறவில்லை. ஹைதராபாத்தில் பதினெட்டு ஏக்கரில் திராட்சைத் தோட்டம், அதன் நடுவில் பிரம்மாண்ட பங்களா, சென்னை கிண்டியில் ஒரு வாரப் பத்திரிகைக்குச் சொந்தமான இடத்தை வாங்கியது என்று பட்டியல் தொடர்கிறது. சசிகலாவின் அண்ணன் டாக்டர் விநோதன் 37 லட்சம் செலவில் தஞ்சையில் ஒரு தனியார் ஆஸ்பத்திரி துவங்கியிருக்கிறார். திருத்துறைப் பூண்டியில் ஒரு கோடி செலவில் திருமண மண்டபம் கட்டுகிறார் சசிகலா. தஞ்சை மாவட்டத்தின் பல பகுதிகளில் நிலங்கள், பங்களாக்கள் என்று வாங்கிக் குவிக்கப் படுகின்றன. ''இன்னும் சில நாட்களில், மாவட்டம் மொத்தமும் சசிகலா குடும்பத்துக்குச் சொந்தமாகி விடும் போலிருக்கிறது'' என்றார் ஒரு தஞ்சைவாசி.

சொன்னதைச் செய்தார்

ஜெ. தமது தேர்தல் அறிக்கையில் சொல்லிச் செய்தது 'கோவில் நல வாரியம்' ஒன்றுதான். ஆனால் இதிலும் பல பிரச்னைகள். மாவட்டங்களில் இந்த வாரியத் தலைவர்களாக ஆளும் கட்சிப் பிரமுகர்கள்தான் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். இதைக் குறிப்பிட்டு 'வாரியம் சுயமாக இயங்க முடியாதே' என்று சொன்னார் ஜெயேந்திரர். அவருக்குப் பதில் சொல்லும் போது, ஆளும் கட்சிப் பிரமுகர்கள் நியமனம் பற்றி ஒரு வார்த்தை சொல்லாமல், 'தவறான தகவல்களைத் தருகிறார் ஜெயேந்திரர்' என்று அவரைச் சாடினார் ஜெ. இந்த ஒரு வருட காலத்தில் ஆத்திக அன்பர்கள் புண்படும்படி பல நிகழ்ச்சிகள். குறிப்பாக மகாமகம். பன்னிரண்டு வருடத்துக்கு ஒருமுறை வரும் இந்த விழாவை, ஜெயாமகமாக நடத்திக் காட்ட முனைந்ததன் விளைவாக, 48 உயிர்கள் (அரசுக்கணக்கில்) பலியாயின. கும்பகோணம் வரலாற்றில் அழிக்க முடியாத கரும் புள்ளியாகப் பதிந்து விட்டது இந்த மகாமகம். உயிர்ப் பலி ஒரு பக்கம் இருக்க, மாநிலத்தின் பல இடங்களில் (குறிப்பாக நெல்லை மாவட்டத்தில்) கோவில்களில் உள்ள மூலவர் சிலைகள் உடைக்கப்பட்டிருக்கின்றன. நகைகள் திருடப்பட்டுள்ளன. குற்றவாளிகளைப் பிடிக்க இயலாமல் போலீஸ் திண்டாடுகிறது.

நசுக்கப்படும் கருத்துச் சுதந்திரம்

"அரசின் செயல்பாடுகள் இப்படி விமர்சிக்கத்தக்க அளவில் இருப்பதால் தானோ என்னவோ, மாற்றுக் கருத்துக் கொண்டவர்களை, தமது அதிகாரத்தால் மிரட்டுகிறார் ஜெ'' என்கிறார் பண்ருட்டி. பத்திரிகைகள் பயமுறுத்தப்படுகின்றன. சட்டமன்றத்தில், உள்ளேயும் வெளியேயும் எதிர்க்கட்சிகளின் பணி முடக்கப்படுகிறது. உரிமைப் பிரச்னை என்று சொல்லி பத்திரிகையாளர்களுக்குக் கூண்டு தயாரிக்கப்படுகிறது.

காவிரி விஷயத்தில் தமது மாறுபட்ட அபிப்ராயத்தைத் தெரிவித்த மத்திய அமைச்சர் சிதம்பரத்துக்குக் கறுப்புக் கொடி காட்டியது மட்டுமல்ல, அவரையும் தாக்கினார்கள் அ. தி. மு. க.வினர். அவர்கள் மேல் எந்த நடவடிக்கையும் இல்லை. தி. மு. க. கூட்டத்தில் கலாட்டா செய்த முசிறி அ. தி. மு. க. எம். எல். ஏ. மீது நடவடிக்கை எடுத்த போலீஸ் அதிகாரிகள் மாற்றப்பட்டார்கள்! தி. மு. க. பேச்சாளர்களான வெற்றி கொண்டான், நன்னிலம் நடராசன் ஆகியோர் மீது வழக்கு, தீப்பொறி ஆறுமுகம் தாக்கப் பட்டது என்று தொடர் நிகழ்ச்சிகள். ஆனால் அதே சமயத்தில் தரகல் நடையில் ஆபாசமாகப் பேசும் அ. தி. மு. க. ஆண், பெண் பேச்சாளர்கள் மேல், எந்த நட வடிக்கையும் கிடையாது. இதுதான் ஜெ. யின் பாரபட்சமற்ற ஆட்சி!

மேடையில் பேசுபவர்களின் நிலை இது என்றால், சட்டமன்றத்தின் உள்ளேயும் எதிர்க்கட்சியினர் சரியாகச் செயல்பட முடியவில்லை. மகாமகம் விபத்து பற்றி எதிர்க்கட்சிகளுக்குப் போதிய அளவு பேச அனுமதி மறுப்பு; அதே நேரத்தில் முதல்வருக்கு விளக்கமளிக்க வாய்ப்புக் கொடுத்ததோடு, 'என்னைக் குறை சொல்பவர்களுக்கு ஆண்டவன் கூலி கொடுப்பான்' என்று சாபமிடவும் சந்தர்ப்பம்! 'தகவில்

சேலம் நகர மக்களே கவனியுங்கள்!

சேலம் நகரம் -

கல்கியின் 'மாதம் ஒரு நகரம்' என்ற திட்டத்தின் கீழ் ஒன்பதாவது நகரமாகச் சேலம் நகரைத்தான் தேர்ந்தெடுத்திருக்கிறோம். குறைகளையும் நிறைகளையும் நேரில் வந்து பார்த்து அலசப் போகிறோம்.

எனவே, சேலம் நகரிலுள்ள அனைவரும் தங்கள் நகரின் குறைகளையும் நிறைகளையும் எங்களுக்கு எழுதியனுப்ப வேண்டுகிறோம். கூடவே குறைகளைக் களைவதற்காக அரசு மேற்கொண்டுள்ள முயற்சிகள் அல்லது மெத்தனங்கள் தவிர, தனிமனிதச் சாதனைகளையும் இளைஞர் மற்றும் சமூகநல அமைப்புகளின் சாதனைகளையும் சுருக்கமாக எழுதியனுப்ப வேண்டுகிறோம்.



சேலம் நகரவாசிகளான உங்கள் கடிதங்கள் கல்கி அலுவலகத்துக்கு வந்து சேர வேண்டிய கடைசித் தேதி : 2.7.93

குறுகிய கால அவகாசமே இருப்பதால் உடனடியாக எழுதியனுப்புங்கள். உறையின் மேல் 'மாதம் ஒரு நகரம் - சேலம்' என்பதை மறவாமல் குறிப்பிட்டு அனுப்புங்கள்.

- ஆசிரியர்

குப்பைகள் அதிகமாக இருக்கின்றன' என்று எல்லோரும் அறிந்த உண்மையைச் சொல்லப் போய் எட்டு அமைச்சர்களின் கூட்டுத் தாக்குதலில் மாட்டிக் கொண்டு திண்டாடினார் மூப்பனார் கோஷ்டியைச் சேர்ந்த எம். எல். ஏ. செல்லகுமார். பரிதிக்கு நேர்ந்த அவமானத்தையும் பண்ருட்டியார் முதுகு தட்டப்பட்டதையும் எளிதில் மறக்க முடியாது. கூடவே, 89-ம் ஆண்டின் சபைக் குறிப்பை மாற்றி மோசமான ஒரு முன்னுதாரணத்தை ஏற்படுத்தியதோடு, தமது சட்டமன்ற உரையின் போது முதல்வரை 'மாண்புமிகு முதல்வர்' என்று கவர்னர் குறிப்பிடுகிற மரபையும் மாற்றிப் 'புரட்சித் தலைவி' என்றுதான் குறிப்பிட வேண்டும் என்கிற நிர்ப்பந்தத்தையும் கவர்னருக்கு ஏற்படுத்தியது ஜெ. ஆட்சிதான்!

வெறுப்பைக் கிளப்பும் விளம்பர அறிப்பு

திரும்பின பக்கமெல்லாம் ஒரு சுவர் பாக்கியின்றி ஜெவின் பிரும்மாண்ட போஸ்டர்கள் என்ற விளம்பர அறிப்பு மக்களை வெறுப்புறச் செய்திருக்கிறது. எந்த அரசாங்கத் திட்டமானாலும் அது ஜெ. பெயரில்தான் இருக்க வேண்டும் என்று தீர்மானமாகி விட்டது. புரட்சித் தலைவி மருத்துவத் திட்டம், 'ஜெ' மாதிரி பள்ளிகள், 'ஜெ' நகரங்கள், ஜெ. ஜெ. 92 நெல் என்று எதையெடுத்தாலும் 'ஜெ'தான். அதே சமயத்தில், விவசாயக் கல்லூரிக்கு வைக்கப்பட்டிருந்த அன்பில் தர்மலிங்கத்தின் பெயரை நீக்கினார். பாஞ்சாலங்குறிச்சியில் கருணாநிதி பெயரில் இருந்த தோரண வாயிலின் பெயர் மாற்றப்பட்டது. பெண்கள் திருமண உதவி திட்டத்திற்கு வைக்கப்பட்டிருந்த கலைஞரின் அன்னை அஞ்சுகத்தின் பெயர் நீக்கப்பட்டது. சாலையில் வாகன விபத்துக்கள் ஏற்கெனவே ஏகமாக இருக்க, அறுபதடி உயரத்தில் வைக்கப்பட்டிருந்த ஜெ. கட்-அவுட்கள் விழுந்து அடிபட்டவர்களின் கதையும் உண்டு. 'பாதுகாப்பு' என்ற பெயரில், போக்குவரத்து நிறுத்தம், நகர நடுத்தர மக்களுக்கு எரிச்சலூட்டுகிறது.

காப்பாற்றும் ஒரு விஷயம்

இவ்வளவு குறைகள், பிரச்னைகள், விமர்சனங்கள் இந்த ஆட்சியில் இருந்தாலும் 'புலிகள்' விஷயத்தில் மட்டும் மக்கள் பாராட்டும் நிலையில் இருக்கிறார் ஜெ. புலிகளின் நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்தி, இயக்கத்துக்குத் தடை ஏற்படுத்தியது மக்களால் வரவேற்கப்படுகிறது என்பதை மறுப்பதற்கில்லை. ஆனால் அதே சமயத்தில் 'தடா' சட்டத்தைப் பயன்படுத்தி அரசியல் எதிரிகளை முடக்கப் பார்க்கிறார் என்ற குற்றச்சாட்டுகள் சொல்லப்படுகின்றன.

''இந்த ஆட்சியின் அவலங்கள் எல்லாவற்றையும், புலிகள் பிரச்னை ஒன்றுதான் மறைத்துக் காப்பாற்றிக் கொண்டிருக்கிறது. ஆனால் இந்த நிலையும் அதிக நாட்கள் நீடிக்காது'' என்று சில நடுநிலையாளர்களே அபிப்ராயப்படுகிறார்கள்.

- ப்ரியன்

அட்டை வண்ணப்படம் :
டி. ராமமூர்த்தி
படங்கள் : சுபா

சில சந்தோஷங்கள்; பல சங்கடங்கள்

மாதவரம் நெடுஞ்சாலையில் 22 ஆம் எண் வீடு சற்றே வித்தியாசமானது. இதில் வசிப்பவர் திருமதி எலிசபெத் தாமஸ். செயின்ட் மேரி பள்ளிகள், மற்றும் கல்லூரி நிர்வாகி. வீட்டின் வலப்புறத்தில் காருண்ய சந்தானகிருஷ்ணனுக்கு ஆலயம். இடப்புறத்தில் கருணைக் கடவுளான கர்த்தருக்கு ஆலயம்.

கோவிலில் நித்திய பூஜை உண்டு. சமீபத்தில், அதாவது சென்ற வருடத்தில்தான் கும்பாபிஷேகம் செய்தாராம்.

''அன்றைக்குச் சொற்பொழிவின் போது பெரிய மழை பிடித்துக் கொண்டது. முன் மண்டபத்தில் அமர்ந்திருந்தவர்கள் மழையில் நனையாமல் இருப்பதற்காக, கிருஷ்ணன் பற்றிய சொற்பொழிவைச் சர்ச்சில் அப்படியே தொடர்ந்து நடத்தினோம்!'' என்கிறார் எலிசபெத் தாமஸ். ''எனக்குக் கண்ணனும் கர்த்தரும் ஒருவரே. ஒருவர் சொல்லியது கீதை; மற்றவர் சொன்னது பைபிள். இரண்டும் இரண்டு கண்கள் மாதிரி!''

◄ திருமதி எலிசபெத் தாமஸ்



பிரம்மாண்டமான கல்வி நிறுவனங்களை நடத்தி வரும் எலிசபெத் தாமஸ் அம்மையார், விளம்பரமின்றிப் பல சமூக சேவைகளும் செய்து வருகிறார். மத ஒற்றுமையைக் காப்பதே மிகப் பெரிய சேவை ஆயிற்றே!

மத்திய சென்னையா இது?

தொழிற்சாலைகளில் பணி புரியும் தொழிலாளர்களுக்காகக் கட்டப்பட்ட ஐநூறு சிறு சிறு வீடுகள் கொண்டது திரு.வி.க. நகர். இதைத் திறந்து வைத்தவர் பெருந்தலைவர் காமராஜர். ''அன்றைக்கு, அதாவது, 35 வருஷத்துக்கு முன், போடப்பட்ட தார்ச்சாலைதான். பாருங்கள், எப்படி இருக்கிறது!'' என்று காண்பித்தார் வசந்தராவ். ஒட்டக முதுகுகூடத் தேவலாம் போலக் குண்டும் குழியுமாய் இருந்தது ரோடு. குடி நீர், பாதாள சாக்கடை, மழை நீர் போக வசதி - ஊஹூம்; ஒன்றும் இடையாது.

''தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தின் பராமரிப்பில் இந்த வீடுகள் இருக்கின்றன. அவர்களைக் கேட்டால் 'எங்களால் எந்த வசதியும் செய்து தர முடியாது; நிதி வசதி இடையாது!' என்கிறார்கள். நாங்கள் அகதிகள் மாதிரி!''

பஸ் ஸ்டாண்டு இடம் பரிதாபம். ஒதுங்கக் கூட நிழல் குடைகள் இல்லை!

திரு.வி.க.வோ பெரியவர்; காம

◄ ஸ்ரீராமுலு







கண்ணன் ஒருபுறம்; கர்த்தர் ஒருபுறம்

ராஜரோ பெருந்தலைவர். இவர்கள் சம்பந்தப்பட்ட குடியிருப்பில் வசிப்பவர்கள், ஆஃப்டர் ஆல் அடித்தட்டு மக்கள் தானே, என்று ஆட்சியாளர்கள் நினைத்திருக்கலாம்!

பூங்கா எங்கே?

அரும்பாக்கத்தில் எம்.எம்.டி.ஏ. காலனிக்குள் நுழையும் போது, 'ஆகா மரங்கள் சூழ்ந்த அவென்யூ மாதிரி நிழலாக இருக்கிறதே!' என்று சந்தோஷப்பட்டோம். அந்த அற்ப சந்தோஷத்தையும் துடைத்து விட்டார் குணசேகரன்.

''நிழல் மட்டும் இருந்து என்ன பிரயோசனம்? இங்கேயுள்ள விளையாட்டு மைதானம் சரிவரப் பராமரிக்கப்படாமல், கவனிப்பாரற்று சில சமூக விரோத சக்திகளின் நிழலான செயல்களுக்குப் புகலிடமாக இருக்கிறதே!'' என்கிறார்.

ஆரம்ப சுகாதார மருத்துமனை ஒன்று இருக்கிறது. ஆனால் மருத்துவ வசதிகள் கிடையாது!


''பஸ் வசதி போதுமான அளவு இல்லை. நுங்கம்பாக்கம் ஸ்டேஷன் போவதற்கு அமைந்தகரை அல்லது என்.எஸ்.கே. நகர் போய்த்தான் போகணும். இது அரசாங்க ஊழியர்கள் அதிகம் வசிக்கும் இடம். 27-B பஸ்ஸுக்கு ஸ்டாண்ட் கண்டக்டர் போட்டால் நல்லது. தபாலாபீசுக்கு என்று தனி இடம் ஒதுக்கியும், கட்டடம் கட்டாமல், ஒரு சிறிய இடத்தில், பெயருக்கு ஒரு கிளை அஞ்சலகம் மட்டும்தான் இயங்குகிறது. இந்தக் குடியிருப்புப் பகுதிக்கென்று திட்டத்தில் ஒதுக்கப்பட்ட பூங்கா எங்கே இருக்கிறது என்றே தெரியவில்லை!'' என்றார் குணசேகரன்.

பாராட்டும்படி ஒன்றுமே இல்லையா?

''இருக்கிறது. வீட்டு வசதிவாரியப் பொறுப்பிலிருந்த கம்யூனிட்டி ஹாலை, தன் பொறுப்பில் எடுத்துக் கொண்டு காலனியே பராமரிக்கிறது-மிகச் சிறப்பாக!''

வீடுகளுக்கு நடுவே ஒரு தொழிற்சாலை!

கூசப்பேட்டைக்கும், ரியோ டி ஜெனிரோவுக்கும் என்ன சம்பந்தம் இருக்கிறது என்று கேட்கலாம். இருக்கிறது. சுற்றுச் சூழல் கேடு பற்றிய பிரச்னைதான். இங்கே வெங்கடாத்திரி நாயக்கன் தெருவில் உள்ள ஒரு பிளாஸ்டிக் தொழிற்சாலையில், காலையிலிருந்து மாலை வரை இடைவிடாமல் எழும் அரவை இயந்திர இரைச்சலும்; பழைய பிளாஸ்டிக் பொருள்களோடு சில கச்சாப் பொருள்களையும் சேர்த்து எரித்து



சண்முகசுந்தரம்



குணசேகரன்

வருவதால் எழும் மூச்சை அடைக்கிற விநோதமான புகையும், துர்நாற்றமும், 'பொல்யூஷன்' என்ற வார்த்தைக்கு மிகச் சரியான எடுத்துக் காட்டுகள்.

''சென்னை மாநகராட்சி சுகாதார அதிகாரி, ஸ்பெஷல் ஆபீசர், கமிஷனர், பொல்யூஷன் கன்ட்ரோல் போர்டு - எல்லாருக்கும் எழுதிப் பார்த்து விட்டேன். இதுவரை விமோசனம் பிறக்கவில்லை'' என்கிறார் ஸ்ரீராமுலு.

''இங்கே இருக்கிற பிரமுகர் வேணு நாய்க்கரிடம் எடுத்துச் சொன்னதில், சம்பந்தப்பட்டவர்கள் இரண்டு மாதங்களில் இடத்தைக் காலி பண்ணிவிடுவதாக வேணு நாய்க்கரிடம் உறுதி அளித்திருக்கிறார்கள். அதாவது ஜூலை 5 ஆம் தேதி. எங்களுக்குக் காத்திருப்பதைத் தவிர வேறு வழியில்லை!''

இத்தனை குடியிருப்புகளுக்கு நடுவே இப்படி ஒரு தொழிற்சாலைக்கு எப்படி லைசன்ஸ் வழங்கினார்கள் அதிகாரிகள் என்பதே புதிராக இருக்கிறது!

'என்ன மாமி, ஆட்டோ வேண்டாமா?'

இதை எல்லாம் பார்த்துவிட்டு, மகாலிங்கபுரம் பரவாயில்லை போலிருக்கிறது. முப்பது வருடத்துக்கு முன்னால் உருவான காலனி ஆனாலும், கண்ணை உறுத்துகிற ப.ரதிரி எதுவும் இல்லை என்று நினைத்தோம். தவறு என்று புரிந்தது.

மகாலிங்கபுரம் வாசிகளின் சங்கத்தைச் சேர்ந்த கல்யாண்கிருஷ்ணன், கல்யாணராமன் திருமதி வி. காமாட்சி ஆகியோரைச் சந்தித்த போது (திருமதி காமாட்சி, திருச்சி சீதாலட்சுமி ராமசாமி கல்லூரி முதல்வரா

பன்றிகள் விளையாடுமிடத்தில் சத்துணவுக் கூடம்



யிருந்து ஓய்வு பெற்றவர்.) குறைகளைச் சொன்னார்கள்.

''இங்கே ஆட்டோ ரிக்ஷாக்காரர்கள் கேட்பதே மினிமம் பத்து ரூபாய்தான்... இது போதாதென்று இளம் பெண்கள், கல்லூரி மாணவிகள், குடும்பத் தலைவிகள் - யார் வழியிலே போனாலும் டீஸிங் வேறு! சும்மா நடந்து போனால் கூட, 'என்ன மாமி, ஆட்டோ வேண்டாமா?' என்று கேலியாக ஒரு கேள்வி....'' என்றார் காமாட்சி.

''பஸ் ரூட் 17 ஒன்றுதான். 9-B எப்போதாவதுதான் வரும். மயிலாப்பூருக்கு இங்கிருந்து நேரடியாக ஒரு பஸ் விட்டால் எல்லாருக்குமே பெரிய உதவியாக இருக்கும்'' என்றார் கல்யாண கிருஷ்ணன்.

''மின்சாரம் சீராக இல்லாமல் அவ்வப்போது கூடியும் குறைந்தும் சில சமயம் பாடுபடுத்தும். இதனால் மின் சாதனங்கள் பாழாகின்றன. இதைக் கவனித்தால் நல்லது!'' என்றார் கல்யாணராமன்.

'மழை வந்தால் என்ன செய்வது!'

சென்னை நகரமே மழை எப்போது வரும், குடி நீர்த்தட்டுப்பாடு எப்போது நீங்கும் என்று காத்திருக்கிறது - ஆவலோடு. ஆனால் அரும்பாக்கத்தை ஒட்டிய விநாயகபுரம் இரண்டாம் தெரு வாசிகளுக்கோ எங்கே மழை வந்துவிடப் போகிறதோ என்று பயம். அவர்களைச் சொல்லிக் குற்றமில்லை. மழை வந்தால் குடியிருப்பில் உள்ள எல்லாப் பகுதிகளிலும் முழங்கால் அளவு தண்ணீர்தான்! கிழக்குத் திசையில் நூறடி உள்வட்டச் சாலை அமைந்த பிறகு, மேற்குத் திசையில் இருந்து வரும் மழை நீர் வெளியேற முடியாமல் எல்லா வழிகளும் அடைபட்டு விட்டன. நெடுஞ்சாலைத் துறை, கண்காணிப்புப் பொறியாளர், தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சித் திட்டம் என்று புகார்கள் அனுப்பியும் இதுவரை பயனில்லையாம்.

பாதாளச் சாக்கடை அமைக்க, குடிநீர் வடிகால் வாரியக் கடிதம் (9.4.92 தேதியிட்டது) வந்திருப்பதால், சர்வேயும் முடிந்து விட்ட நிலையில், ''இது நிச்சயம் வந்து விடும்'' என்று நம்பிக்கை தெரிவிக்கிறார், விநாயகபுரம் வளர்ச்சிக் குழுவின்

செயலர் சுப்பிரமணி.

''ஆனால் இது சாத்தியமாக, வழியில் தடையாக இருந்த நமது 900 சதுர அடி இருப்பிடத்தை, பொது நலன் கருதி விட்டுக் கொடுத்த க. பரமானந்தம், மாற்று இடம் அல்லது ஈட்டுத் தொகை கேட்டு விண்ணப் பித்திருக்கிறார். இதையும் அரசு கவனிக்க வேண்டும்'' என்கிறார் சுப்பிரமணி.

'வெட்கித் தலை குனிய வேண்டும்!'

பன்றிகளால் மூளைக் காய்ச்சல் வந்து பலர் இறந்தாலும் முதலமைச்சர் சத்துணவுக் கூடத்தைச் சுற்றி எத்தனை அசுத்தம் நிறைந்து, பன்றிகள் படுத்து உறங்கிக் கொண்டிருந்தாலும் இதை எல்லாம் பார்த்து, கண்ணை இறுக மூடிக் கொண்டிருக்கின்றனவே மாநகராட்சியின் சுகாதாரத் துறையும், காவல் துறையும்! இப்பகுதி வாழ் மக்கள் புகார் செய்தும் கவனிக்க வில்லையே!

நந்தனம் சத்தியமூர்த்தி நகரில் அன்பு காலனி குடியிருப்போர் நல உரிமைச் சங்கத்தைச் சேர்ந்த பெருமாள் நாயுடு, இஸ்மாயில் ஆகியோர் கண்ணீர் விடாத குறைதான்.

''இங்கே நிவசாரி நடக்கிற பன்றி இறைச்சி வியாபாரம், ஞாயிற்றுக் கிழமை களில் படு மும்முரமாக நடக்கும். திறந்த வெளியில், காலனிக்கு வந்து போகிறவர் களுக்கு இடைஞ்சலாக, நாலாபுறமும் இறைச்சி சிதறி, வெட்டி வெட்டி வியா பாரம் செய்வது கோரமான காட்சி. இதைப் பார்க்கிற எவரும் வெட்கித் தலை குனிய வேண்டும்!'' என்கிறார்கள் இவர்கள்.

நுழைகிற வழியிலேயே, பன்றிகளுக்கு ஆகாரமாக, ஓட்டல்களிலிருந்து தருவிக்கப் படும் கழிவுகளை வைத்துக் கொண்டு இருந் ததைச் சுட்டிக் காட்டினார் இஸ்மாயில். நாற்றம் குடலைப் பிடுங்கியது.

''இவர்கள் ஜோகித் தோட்டப் பகுதியைச் சேர்ந்தவர்கள். இதோடு மாட்டுப் பண்ணையும் இங்கேயே நடத்துகிறார்கள்!''

பின்னால் திறந்த வெளிச் சாக்கடை. சாணத்தின் சாம்ராஜ்யம்; எருமை மாடுகளின் அணிவகுப்பு!

அன்பு நகர் குடியிருப்புப் பகுதியையே நரகமாக்கி விட்ட சூழ்நிலையில், அவர்கள் எப்படி தொடர்ந்து அங்கே இருக்க முடிகிறது என்ற வியப்பே ஏற்படுகிறது.

''எங்கள் வீடுகளுக்கு யாரும் விருந் தாளிகளே வரப் பயப்படுகிறார்கள் - குறிப் பாக இந்தப் பன்றி இறைச்சி வியாபாரத் தைப் பார்த்துவிட்டு!'' என்றார் உமா ராஜாமணி.

''சுகாதாரக் கேட்டுக்கு இதைவிட ஒரு நல்ல உதாரணம் இருக்க முடியாது!'' என்று வெறுத்துப் போய்ச் சொன்னார், எழுத்தாளர் சங்கத் தலைவர் வாசவன். பதினெட்டு வருடங்களாக இந்தக் குடியிருப்பில் வசித்து வருகிறார் வாசவன்.

மின்சார வாரியத்தின் டிரான்ஸ்ஃபார்மர் ஒன்று இவர்களுக்குக் கொஞ்சம் நம்பிக்கை தருகிறது. அது இப்போது இருக்கிற இடத்திலிருந்து மாற்றப்பட்டு, சற்றுத் தள்ளி நிறுவுகிற பட்சத்தில், அந்தப் பகுதிவரை சுவர் எழுப்பி, அல்லது வேலி போட்டுத் தடுத்து விட முடியும். அப்புறம் இந்தக் கோரத்தை அன்பு காலனி வாசிகள் அனுபவிக்க வேண்டாம்!

கல்விக்குத் தடை போடும் பொதுப்பணித் துறை

கீற்றுக் கொட்டகை வகுப்புகள் போய், நிலையான கட்டடங்கள் உருவாக்கி, பள்ளியின் மாணவிகள் எண்ணிக்கை கூடியது போலவே, ரிசல்ட்டும் கூடியது. சூளைமேடு அரசினர் மகளிர் மேநிலைப் பள்ளியில். ஆனால் பொதுப் பணித்துறையும், கல்வித் துறையும் மட்டும் இந்தப் பள்ளிக்கு ஏனோ ஒத்துழைப்புத் தராமல் பல விவகாரங்களில் முட்டுக் கட்டை போட்டு வருகின்றன.

பள்ளிக்குள் நுழைய வழி இருக்கிறது. ஆனால் 'கேட்' கிடையாது! கேட் விஷயம் கோர்ட்டில் இருக்கிறது.

பெற்றோர் - ஆசிரியர் கழகச் செலவில், பள்ளியின் வெள்ளிவிழாக் கொண்டாட்டத்தின் போது கட்டப்பட்ட கட்டடத்தின் ஒரு பகுதி கம்பீரமாகக் காட்சியளிக்கிறது. இன்னொரு பகுதி? பொதுப்பணித்துறை 'கைங்கரியத்தில்' பாதியிலேயே நிற்கிறது! கழகம்தான் மறுபடி, 17,000 ரூபாய் செலவில் ஆழ்குழாய்க் கிணறு போட்டுத் தண்ணீர் வசதி செய்து கொடுத்திருக்கிறது.

மத்திய சென்னையில் இருக்கிற இத்தனை நல்ல பள்ளிக்கு உதவி செய்ய என்ன தடை என்று நமக்குப் புரியவில்லை!

வித்தியாசமான ஆசிரியர்!

மற்ற கார்ப்பரேஷன் பள்ளிகளுக்கும், நுங்கம்பாக்கம் இராம நாய்க்கன் நகராட்சி நடுநிலைப் பள்ளிக்கும் நிறைய வித்தியாசம் இருக்கிறது. காரணம்; அதன் தலைமை ஆசிரியர் சண்முகசுந்தரம். சுவர்களில் ஆபாசச் சுவரொட்டி இருக்காது; அழகான திருக்குறள் வாசகங்கள்தாம் இருக்கும். குப்பை கூளங்கள் இருக்காது. வண்ண மயமான பூச்செடிகள்தாம் இருக்கும். இந்தச் சுற்றுப்புறச் சூழல் தூய்மையோடு சண்முகசுந்தரம் நின்று விடவில்லை. உயர்நிலைப் பள்ளிகள், கல்லூரிகளிலிருந்து வந்த வாய்ப்புக்களை ஒதுக்கிவிட்டு, இந்த மாநகராட்சிப் பள்ளியின் தலைமை ஆசிரியர் பணியை மேற்கொண்டவர். 86 - ல் மாநில நல்லாசிரியர் விருதும், 89 - ல் தேசிய நல்லாசிரியர் விருதும், 90 - ல் தமிழ்நாடு பெற்றோர்-ஆசிரியர் சங்க வெள்ளிவிழா விருதையும் பெற்றவர்.

சமீபத்தில் இவரது பள்ளிக்கு விஜயம் செய்த பஞ்சாப் கல்வித்துறை அமைச்சர் ஹர்நாம் சிங், ஓகோ என்று புகழ்ந்திருக்கிறார் சண்முகசுந்தரத்தை!

– நமது நிருபர்

பொன்விழா ஆண்டு :: தங்க நகைப் பரிசுத் திட்டம் - 25


வாழ்த்துச் சொல்லுங்கள்!

பொன் விழா ஆண்டு முடிவை நெருங்க இன்னும் ஒரு மாதகாலமே பாக்கியிருக்க, இதோ இந்தப் போட்டியும் கிட்டத்தட்ட நிறைவை அடைந்து விட்டது. இன்னும் ஒரே ஒரு போட்டிதான் - 26 - பாக்கி. இருக்கட்டும், இப்போது பொன்விழா கண்ட கல்கிக்கு ஒரு வாழ்த்துச் சொல்லுங்கள் பார்க்கலாம்! பத்து வரிகளுக்குக் கவிதையாகவோ கவிதா ரசத்துடன் உரை நடையாகவோ அமையலாம். சிறந்த வாழ்த்துக்கு பாலு ஜுவல்லர்ஸ் வழங்கும் ஒரு சவரன் பெறுமானமுள்ள பொன் நகை பரிசு. பிரசுரமாகும் இதர வாழ்த்துக்களுக்குச் சன்மானம். ''வாழ்த்துச் சொல்லுகிறேன்'' என்று தலைப்புத் தந்து தபால் கார்டில் மட்டுமே எழுதக் கடைசி தேதி ஜூலை 6. ''கல்கி காரியாலயம், சென்னை - 600 032'' என்ற விலாசத்துக்கு மட்டுமே எழுதவும்.



இப்பொழுது உங்கள் குழந்தைக்கு சாதாரண
அரிசி தானியத்தைவிட மேலான உணவை கொடுங்கள்.
அறிமுகப்படுத்துகிறோம்
ஃபாரெக்ஸ்-ரைஸ்
பால் அடங்கியது
சுவையும் ஊட்டச்சத்தும் கொண்டது.
சாதாரண அரிசி தானியத்தைக் கொடுத்து குழந்தையின் திட உணவைத் தொடங்குவதைவிட ஃபாரெக்ஸ் – ரைஸ் அளியுங்கள்.
ஃபாரெக்ஸ் – ரைஸ் பாலின் ஊட்டமும், வைட்டமின்களும், தாதுப்பொருட்களும் கொண்டது. எளிதில் ஜீரணிக்கக் கூடியது.
தேவையான ஊட்டச்சத்தை சுவையான வழியில் உங்கள் குழந்தைக்கு கொடுக்க ஒரே வழி. ஃபாரெக்ஸ் – ரைஸ் நீருடன் கலந்து அளித்தால் போதுமானது.
நான்கு மாதங்கள் முதல்
ஃபாரெக்ஸ்-ரைஸ்
சுவையுடன் வளரும் வழி.
Farex-rice

Gx 646.92 Tm



சட்டத்தின் செயல்பாடு
என்னப்பா ரகுமான்... நீ என்னமோ ஒரு ஆளை க்ளோஸ் பண்ணிட்டதா பெரிசா பண்றாங்களே? என்னைப் பாரு, ஒரே ஷாட்ல மூணு பேரைத் தீர்த்துக் கட்டிப்புட்டேன்!
சே! கண்ணாபின்னான்னு போஸ்டர் ஒட்டி சென்னை நகரோட அழகையே கெடுத்திட்டாங்க... சட்டம் கொண்டாரணும்!
ஆமாமா... உங்க போஸ்டர் தவிர வேறெந்த போஸ்டர் ஒட்டினாலும் அழகு கெட்டுத் தானே போகும்? அதுக்குத் தாப்புல சட்டம் போட்டுடுங்க!
மறுப்பு அறிக்கை
ஊழல் குற்றச் சாட்டுக்கள்
கறையை அழிச்சுட்டேன்... என் பேர்ல ஒரு சொட்டுத் தண்ணீர் கூட படலை!



கல்கி



1992
ஜூன் 28
மலர் : 50
இதழ் : 48
ஆங்கீரச
ஆனி 14

திறமைக்குத் தண்டனை!

ஏற்கெனவே இருக்கிற ஜாதிகள், அவற்றுக்கான இட ஒதுக்கீடுகள், இவற்றின் விளைவான மனக் கசப்புகள் இவை போதாது என்று, தமிழக அரசு புதிதாக "ஸி. பி. எஸ். ஈ. ஜாதி" என்பதாக ஒன்றை உருவாக்கி, அதற்குக் கோட்டா நிர்ணயித்தும் விட்டது! கல்லூரிகளில் - தொழில் கல்லூரியோ கலைக் கல்லூரியோ எதுவானாலும் சரி - இந்த ஜாதிக்கு இரண்டு சதத்துக்கு மேல் இடம் கிடையாது! இப்படி ஓர் உத்தரவைத் தமிழக அரசு பிறப்பித்திருக்கிறது!

மாநில அரசின் கல்வித் திட்டம் தவிர, சென்ட்ரல் போர்டு என்பதாகவும் ஒரு கல்வித் திட்டம் உள்ளது அனைவரும் அறிந்ததே. இதற்கேற்பப் பள்ளிகளும் இருக்கின்றன. இவை உருவாக முக்கிய காரணம், அதிகாரிகள் ஒரு மாநிலத்தி லிருந்து இன்னொரு மாநிலத்துக்கு மாற்றப்பட்டாலும் பிள்ளைகளுக்குச் சிரமம் ஏற்படாமல் இந்தியா முழுவதும் ஒரே மாதிரியான பாடத் திட்டத்துடன் கல்வி கிடைக்கும் என்பதற்காகத்தான். இந்த நோக்கத்தில் அமைந்த சென்ட்ரல் போர்டு கல்வி நிலையங்கள் பெரும்பாலும் தனியார்வசம் இருப்பதால், போட்டா போட்டி ஏற்பட்டு, மாணவர்களிடம் கூடுதல் கவனம் செலுத்தி சிறந்த கல்வி அறிவு பெறச் செய்கிறார்கள். இதனால் இந்தக் கல்வி நிலையங்களுக்கு மவுசு அதிகரித்து, மாற்றல் உத்தரவு ஏதும் எதிர்பாராத பெற்றோர்களும் கூடத் தங்கள் குழந்தைகளை இந்தப் பள்ளிகளில் சேர்த்தார்கள்.

பார்க்கப் போனால் மாநிலக் கல்வித் திட்டத்தின் கீழ்தான் படிப்பது மாணவர்களுக்குச் சுலபம். அதனால் அதிக மார்க்குகள் கிடைக்கும்; எனவே கல்லூரி அட்மிஷனும் எளிது! இதனால் பல மாணவர்கள், பத்தாவது வரை சென்ட்ரல் போர்டில் படித்து விட்டு, பிளஸ் டூவுக்கு ஸ்டேட் போர்டு பள்ளியில் இடம் பிடிக்க முயற்சி செய்வார்கள்!

இந்த ஆண்டு திடுதிப்பென்று நமது கல்வி அமைச்சருக்கு எதனாலோ சென்ட்ரல் போர்டு மீது கோபம் வந்து விட்டது! மார்க்குகள் தாராளமாகப் போடப்பட்டிருப்பதாகவும் ஏதோ கோல்மால் என்றும் பேச ஆரம்பித்தார். சென்ட்ரல் போர்டு நிர்வாகம் இதனைப் பலமாக ஆட்சேபித்தது. நல்ல கல்வி வழங்கப்படுவதால் நல்ல மார்க்குகள் கிடைக்கிறதேயன்றி, மார்க்குகள் போட்டுத் தரப்படுவதில்லை என்றது. மத்திய அமைச்சர் அர்ஜுன் சிங் இங்கே வந்திருந்த போது, அவர் கூட, மாநிலக் கல்வி அமைச்சரின் இந்தக் குற்றச்சாட்டுக்கு ஆதாரமில்லை என்றுதான் கருத்துத் தெரிவித்தார்.

இதெல்லாம் சேர்ந்து கல்வி அமைச்சரை மேலும் கோபப்படுத்தி விட்டது போலும்! இப்போது சென்ட்ரல் போர்டில் படித்து விட்டு வந்த பிள்ளைகளுக்கு இரண்டு சதத்துக்கு மேல் எந்தக் கல்லூரியிலும் இடம் கிடையாது என்று உத்தரவு போட்டு விட்டார்! சென்ட்ரல் போர்டு பள்ளிகளில் படித்த மாணவ மாணவியரும் அவர்களின் பெற்றோரும் இடிந்து போய் உட்கார்ந்திருக்கிறார்கள்.

இந்த உத்தரவு ரொம்ப அநீதியானது என்பதை உணரப் பூதக் கண்ணாடி தேவையில்லை. பாடங்களை நன்றாகப் படிப்பதுடன் பொது அறிவும் பெற்று, குணநலன்களுடன் விளங்கும் சிறந்த மாணவர்களை அவர்களுடைய திறமைக் காகவே தண்டிப்பது போன்ற செயல்தான் இந்த உத்தரவு. ஏற்கெனவே ஐ.ஏ.எஸ். தேர்வு போன்ற அம்சங்களில் தமிழகம் சோபிப்பதில்லை; உயர் அதிகாரிகளில் தமிழர்களின் சதவிகிதம் குறைந்து கொண்டே வருகிறது. இந் நிலையில், இப்படி மேலும் மேலும் திறமைக்குத் தடைவிதித்துக் கொண்டிருந்தால் என்ன ஆகும், தமிழகம்?

இந்த உத்தரவை எதிர்த்துப் பெற்றோரில் சிலர் நீதிமன்றம் போகக்கூடும். ஆனால், நீதிமன்றத் தீர்ப்புக்குக் காத்திராமல் அரசே உத்தரவை வாபஸ் பெறுவது நல்லது. 'நேற்று உத்தரவு போட்டு இன்று வாபஸ் பெறுகிறார்' என்று முதல்வரைச் சிலர் கிண்டல் செய்யக்கூடும். ஆனால் ஓர் அநீதி நிலைப்பதை விட, ஒரு நையாண்டியைச் சகிப்பது மேலானது.

கல்கி கிருஷ்ணமூர்த்தி அறக்கட்டளை ஏழைமாணவர்களுக்கு உதவி ரூ.35,000



அமரர் கல்கி அவர்கள் பெயரில் நிறுவப்பட்டுள்ள அறக்கட்டளை ஆண்டுதோறும் ஏழை மாணவர்களுக்கு உதவி வருகிறது. சென்ற ஆண்டை விட இந்தக் கல்வி ஆண்டுக்கு ('92-93) ரூ 5000/- அதிகரித்து மொத்தம் ரூ 35,000/- உதவித் தொகை வழங்கப்படவிருக்கிறது. இத் தொகை பின்வருமாறு விநியோகிக்கப்படும் :

●● பட்டமேற்படிப்பை அல்லது ஆராய்ச்சியை மேற்கொண்டிருக்கிற மாணவர்கள் இருவருக்குத் தலா ரூ 1500 வீதம் ரூ 3000/-

●● இசை அல்லது நாட்டியம் பயிலும் இருவருக்குத் தலா ரூ 1000/- வீதம் ரூ 2000/-

●● பதினைந்து கல்லூரி மாணவர்களுக்குத் தலா ரூ 1000 வீதம் ரூ 15,000/-

●● முப்பது பள்ளி மாணவர்களுக்குத் தலா ரூ 500/- வீதம் 15,000/-

இவற்றுள் அமரர் கல்கி படித்த மூன்று பள்ளிக்கூடங்களில் மூன்று மாணவர்களுக்கு மூன்று உதவித் தொகைகள் ஒதுக்கப்படுகின்றன. மீதமுள்ள உதவித் தொகைகளைப் பெற, தமிழகமெங்கும் உள்ள கல்வி நிலையங்களில் படிக்கும் மாணவர்களிடமிருந்து அவர்கள் தங்கள் கைப்பட எழுதிய விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

உதவித் தொகைகளைப் பெற, மாணவ மாணவியர் படிப்பில் சிறந்தவர்களாகவும் அதே சமயம் கல்வியைப் பெற்றோர் உதவியுடன் மட்டும் தொடர முடியாத நிலையில் பொருளாதாரத்தில் பின்தங்கியவர்களாகவும் இருக்க வேண்டும். இந்த இரண்டையும் உறுதிப்படுத்தக் கல்லூரி அல்லது பள்ளி முதல்வரின் சான்றிதழுடன் விண்ணப்பிக்க வேண்டும். சென்ற கல்வி ஆண்டின் இறுதித் தேர்வில் பெற்ற மதிப்பெண்களின் நகலை முதல்வரின் கையொப்பத்துடன் இணைப்பது அவசியம்.

விண்ணப்பங்களை ஆராய்ந்து உதவித் தொகை பெறத் தகுதியுள்ள மாணவ மாணவியரை அறங்காவலர்கள் தேர்ந்தெடுப்பார்கள். அறங்காவலர்களின் முடிவே இறுதியானது.

விண்ணப்பங்கள் வந்து சேரக் கடைசி தேதி : ஜூலை 31, 1992

விலாசம் :
நிர்வாக அறங்காவலர்,
கல்கி கிருஷ்ணமூர்த்தி அறக்கட்டளை,
நெ. 1, ஐந்தாவது தெரு, ஏரி வட்டம்,
நுங்கம்பாக்கம்,
சென்னை - 600 034.

பம்பாய்க் கடிதம் :

அரசியல்வாதிகளுக்குச் சில கேள்விகள்!

பம்பாய்வாழ் அறிஞர்களில் லோக்ஞ்சவாராஜ் ஆந்தோலனின் தலைவர், மது மேத்தா குறிப்பிடத்தக்கவர். இவர் பொது மக்களின் நலன் கருதி அவ்வப்போது சில பெரும் பிரச்னைகளை வெளிச்சமிட்டுக் காட்டி, அவற்றுக்குச் சட்டங்கள் மூலம் நிவாரணங்கள் தேடுபவர். ''இனி நாட்டில் ஆங்காங்கே பல இடங்களில் இடைத் தேர்தல்கள் நடத்தவண்ணம் இருக்கும். வோட்டுக்கள் கேட்டு வரும் வேட்பாளர்களிடம் சில அவசியமான கேள்விகளைக் கேட்க வேண்டும்'' என்கிறார் இவர். இவர் எழுப்பும் எட்டு முக்கிய கேள்விகள் :

1. நம் கல்வி முறை மக்களுக்கு விடிவு காலம் காட்டும் வகையில் அமைய வில்லை. கல்வி முறையைப் பயன் உள்ளதாக மாற்றியமைக்க உங்களிடம் திட்டம் உள்ளதா?

2. ஒருசிலருக்கு உயர் கல்வி கொடுக்க வேண்டி, அரசு அதிகப் பணம் செலவழித்து விட்டு, கிராமப்புறக் குழந்தைகளுக்கு வேண்டிய அடிப்படைக் கல்விக்குப் போதுமான பணம் ஒதுக்குவதில்லை. இதற்கு நீங்கள் கூறும் நிவாரணம் என்ன?

3. கல்வியில் அரசியல் கலப்பு அதிகரித்து விட்டது. பள்ளிகளில், கல்லூரிகளில் அரசியலும், அரசியல்வாதிகளும் நுழைவதைத் தடைசெய்யப் போராடுவீர்களா?

4. இதுநாள்வரை குடும்பக் கட்டுப்பாடு முழுமையாக வெற்றி பெறவில்லை. கட்டாய முறையுடன் இதை நிறைவேற்ற நீங்களும் உங்கள் கட்சியினரும் ஒத்துழைப்பீர்களா?

மதுமேத்தா



5. மத வேறுபாடின்றி எல்லா இந்தியருக்கும் ஒரே சட்டம் இயற்ற உடன்படுவீர்களா?

6. ஜனநாயக முறையில் நடக்காத கட்சிகளோ, திரட்டிய பணத்திற்குச் சரிவரக் கணக்குக் காட்டாத கட்சிகளோ, பிரிவினை வாதம் பேசும் கட்சிகளோ தேர்தல் களத்தில் நுழைய இடமில்லை என்று சட்டம் கொண்டு வரப் பாடுபடுவீர்களா?

7. கட்சிகள் தேர்தல் அறிக்கைகள்படி நடந்து கொண்டவா என மக்களுக்கு அவ்வப்போது தெரிவிக்கக் கட்டாயப்படுத்துவீர்களா?

8. குற்றங்கள் புரிந்து விட்டுச் சிறைத் தண்டனை பெற்றவர்கள், தேர்தலில் போட்டியிடக் கூடாது என்று ஆணையிட ஒப்புக் கொள்வீர்களா?

மது மேத்தா, செல்லும் இடங்களிலெல்லாம் இத்தகைய கேள்விகளை எழுப்பி, மக்களின் சிந்தனையைத் தூண்டி வருகிறார். இவற்றிற்குச் சற்றேனும் பின் விளைவுகள் இருக்காமலா போய் விடும்!

தபால்காரர்களின் வேலை நிறுத்தம்

ஜூன் முதல் தேதி முதல் நான்காம் தேதி வரை நான்கு நாட்கள் பம்பாயில் தபால்காரர்கள் அனைவரும் வேலை நிறுத்தம் செய்தனர். பம்பாயில் ஒரு நாளைக்கு 25 லட்சம் கடிதங்கள் பட்டுவாடாவுக்கு வருகின்றன. இந்த நான்கு நாட்களில் ஒரு கோடி கடிதங்கள், பார்சல்கள், மணி ஆர்டர்கள் முதலியன தேங்கி விட்டன. பம்பாயில் சாதாரணக் கடிதங்களுக்கு, ரெஜிஸ்தர் கடிதங்களுக்கு, மணி ஆர்டர்களுக்கு, பார்சல்களுக்கு எனத் தனித் தனித் தபால்காரர்கள்! சிலவற்றில், முக்கியமாக மணி ஆர்டர், பார்சல் பிரிவுகளில் வேலையளவு குறைந்து விட்டதால் இவற்றை இணைக்கத் திட்டமிட்டது நிர்வாகம். 'ஆட்குறைப்புக்குத்தான் அரசு வித்திடுகிறது' என்பது யூனியனின் வாதம். 'வேலை குறைந்த பகுதிகளிலிருந்து, வேலை அதிகமான பகுதிகளுக்குச் சிலரை மாற்றிச் சீர்படுத்தவே இந்த நடவடிக்கை' என்றது நிர்வாகம். நான்கு நாட்களின் வேலை நிறுத்தத்திற்குப் பிறகு, பேச்சு வார்த்தைகள் நடந்ததில் சில பகுதிகளின் வேலைகளை இணைக்க யூனியன் சம்மதம் அளித்தது. வேலை நிறுத்தம் வாபஸ் வாங்கப்பட்டது. இதனால் வங்கிகள் மத்திய, மாநில அலுவலகங்கள், தனியார் நிறுவனங்கள் யாவும் பெரிதும் பாதிக்கப்பட்டன. ஆனால் அது பற்றி யாருக்குக் கவலை?

– ராஜீவி நரசிம்மன்



மிருதுவான போஷாக்கு

உங்கள் குழந்தைக்கு 4 மாதங்களாகும் சமயத்தில் அவனது இயற்கை உணவான பாலுடன் எளிதில் ஜீரணிக்க உகந்த போஷாக்கு உணவான நெஸ்டத்தையும் கொடுங்கள்.

பாலுடன் கலந்து தயாரிக்கப்பட்ட நெஸ்டம் உங்கள் குழந்தையின் மிருதுவான முதல் திட உணவாகும். ஏனெனில் இதில் குழந்தை ஆரோக்கியமாய் வளர்வதற்குரிய எல்லா போஷாக்குகளும் சமச்சீர் அளவில் அடங்கியுள்ளன. உங்கள் குழந்தையின் உணவில் வெவ்வேறு சுவையைக் கூட்ட விரும்பினால், அவ்வகை உணவுடன் நெஸ்டத்தை கலந்து கொடுங்கள். உதாரணமாய் வேக வைத்த பழங்கள், வேகவைத்து மசிய வைத்த காய்கறிகள் மற்றும் பருப்பு வகைகள்.

அரிசி சேர்த்த நெஸ்டம் போஷாக்கு நிறைந்த ஸீரியல் ஆகும். உங்கள் குழந்தை இதை எளிதில் ஜீரணிக்கும். உங்கள் குழந்தையின் வளர்ச்சிக்கு மருத்துவர்கள் சிபாரிசு செய்யும் எல்லாவித போஷாக்கும் இதில் உள்ளன. உறுதியான எலும்புகளுக்கும் பற்களுக்கும் தேவையான கால்ஷியம், ஆரோக்கியமான ரத்தத்திற்கு தேவையான இரும்பு சத்து, பட்டு போல பளபளக்கும் சருமத்திற்கும், ஒளிமிகும் கண்களுக்கும், நோய் எதிர்ப்பு சக்திக்கும் தேவையான வைட்டமின்களும் இதில் அடங்கியுள்ளன.

உங்கள் செல்லக் குழந்தை நெஸ்டத்துடன் சேர்ந்து வளர்வதை கவனியுங்கள்.

எளிதில் ஜீரணிக்க வல்ல பேபி ஸீரியல்.

நெஸ்டம்

முக்கிய அறிவிப்பு: உங்கள் குழந்தைக்கு தாய்ப் பால்தான் மிகவும் சிறந்தது. உங்கள் குழந்தைக்கு 4 மாதங்கள் ஆனதில் இருந்து தாய்ப்பாலுடன் குழந்தைத் தானிய உணவும் கொடுங்கள்.

தேவ மயக்கம்

சுபா

12

கல்யாணியின் கடிதம் தான் அது. நந்தினிக்கு வியர்த்தது. எதிரில் அருண் குமார் வேறு. அவள் பதிலை எதிர்பார்த்து ஒரு புதிர்ப் புன்னகையுடன் அமர்ந்திருந்தான்.

''என்ன நந்தினி? என்ன முடிவு பண்ணே?'' என்று கேட்டுக் கொண்டே தேவராஜ் உள்ளே வந்தான். கையில் இருந்த கடிதத்தை நந்தினியிடம் நீட்டி னான். பரபரப்பே காட்டாமல் அதை வாங்க வேண்டும் என்று எவ்வளவோ முயற்சி செய்தும் கூட, கடிதத்தை வாங்க அவள் எழுந்ததில், கை நீட்டியதில் கொஞ் சம் பதற்றம் வெளிப்படத்தான் செய்தது.

தேவராஜ், அருண்குமார் பக்கம் திரும்பியிருந்தான். பதற்றம் அவளைக் காட்டிக் கொடுக்கவில்லை. க டி த ம் கல்யாணியிடம் இருந்துதான் வந்திருக்கது. தேவராஜ் உறை பிரிக்கவில்லை. அடுத் தவர் கடிதத்தைப் பிரிக்கக் கூடாது என்ற நாகரிகம் கருதிப் பிரிக்காமல் விட்டானா, இல்லை அருண்குமார் எதிரில் பிரிப்பது மரியாதையில்லை என்று நினைத்து அவ ளிடம் கடிதத்தைக் கொடுத்தானா என்று நந்தினிக்குப் புரியவில்லை. இருந்தாலும் இந்தச் சந்தர்ப்பத்தில் இப்படி நடந்து கொண்ட அவனை ஒரு பிரமிப்புடன் பார்த் தாள். முட்தோல் மறைத்த பலாச்சுளையா?

தேவராஜ் பெங்களூர் வந்தபின் நிறை யத்தான் மாறியிருக்கிறான் இல்லை? அருண்குமாருக்கு காஸ்ட்யூம் டிசைன் பண்ண வேண்டாம் என்று அவள் தீர்மா னித்தது அவனை வைத்துத்தான். ஒரு முறைக்கு நான்கு முறை அவளும் அருண் குமாரும் சந்தித்துப் பேச வேண்டி யிருக்கும். என்னதான், இல்லை, இல்லை யென்று தலையை அசைத்து மறுத்துக் கொண்டாலுங்கூட, அ வ ள் மனத்தில் அருண்குமாரும், அருண்குமார் மனத்தில் அவளும் சலன அலைகளை ஏற்படுத் தக்கூடும். தேங்கிப் படிந்த வண்டலைக் கையால் ஒருமுறை அளைந்து பார்க்கத் தோன்றும். தேவராஜின் கண்கள் வேறு ஒரு கண்ணாடி அணிந்து பார்வையை மாற்றிக் கொண்டால், அனாவசியப் பிரச்னைகள். அதனால் வேண்டாம் என்று தீர்மானித்த பின் இதென்ன?

''என்ன நந்தினி? பதில் சொல்லவில் லைன்னா எப்படி? சார் வெயிட் பண்றா ரில்ல? ஒனக்குன்னு ஒரு திறமை இருக்கு. இங்க ஒனக்கு வேற வேலையும் இல்ல. சார் பெங்களூர் வந்து டிசைனை வாங் கிட்டுப் போறேன்னு சொல்றாரு. ஏன் ஒன் னோட திறமையை நீ துருப்பிடிக்க விட ணும்?''

''சரி, செய்றேன்.''

''தாங்க்யூ மேடம். ரொம்ப, ரொம்ப தாங்க்ஸ்'' என்றான் அருண்குமார் பூரிப் பாக.

மூன்று மாதங்களில் அருண்குமார் ஐந்தாறு தடவையாவது பெங்களூர் வந்து போயிருப்பான். நந்தினியின் டிசைன்கள் படு திருப்தி. ஒவ்வொரு டிசைனிலும் அவன் உடை தைத்துப் படத்தில் நடிக்கும் நடிக நடிகையருக்கு உடுத்தி, போட்டோ எடுத்துக் கொண்டு வந்து காண்பித்தான். இன்றைக்கும் அப்படித்தான். அவன் கொண்டு வந்த ஃபோட் டோக்களில் குடும்பமே மூழ்கிப் போயிருந்தது.

தேவராஜும், நந்தினியும், பாட்டியும், அம்மாவும் டைனிங் டேபிள் மேல் கவிழ்ந்து அந்த ஃபோட்டோக்களைப் பார்த்து சந்தோஷப்பட் டார்கள். வெறும் அட் டையில் ம ரு ம க ள் கோடு கோடுகளாய் இழுத்துக் கொ டு த் த தெல்லாம் வ ண் ண வண்ணமாய், பளபளப் பாய், சிவந்த உடல் களில் எடுப்பான ஆடைகளாய் மின்னிய தைப் பார்க்க, பாட்டிக்கும் அம்மாவுக்கும் அதிசயமாய் இருந்தது. பாட்டி, நந்தினிக்கு, கைவிரல்கள் மடக்கித் திருஷ்டி கழித்தாள். நந்தினி பெருமிதமாய் வெட்கப்பட்டாள்.

தேவராஜ் நந்தினியை மரியாதையுடன் பார்த்தான். அவன் அறிந்த வரை பெண்கள் நாடகைகள், கைகேயிகள், கூனிகள். அடுக் களையில் பொருந்துபவர்கள். அழகாகக் கா ட் சி ய ளி க் கத் தெ ரி ந் த வர்கள். பின்புத் திக்காரர்கள். நந்தினி அப்படி



இல்லை போலிருக்கிறதே! அவள் கை விரல்களில் இவ்வளவு நுணுக்கமான கலை ஒளிந்திருக்கிறதா?

நந்தினிக்கு அவளுடைய டிசைன்களை உடைகளாகப் பார்ப்பது அப்படி ஒன்றும் புதுமையான விஷயம் இல்லை என்றாலும், அருண்குமாருக்காக அவள் தனிக் கவனம் செலுத்திச் செய்த டிசைன்களை உடைகளாகப் பார்க்கும் போது சந்தோஷமாகத்தான் இருந்தது.

''ரொம்ப நல்லா இருக்கு நந்தினி'' என்று தேவராஜ் மனதாரப் பாராட்டினான். அவனுடைய சிரித்த முகம் நந்தினிக்கு மேலும் ஓர் ஆச்சரியம்.

அருண்குமார் ஹாலின் கதவருகே இருந்த சோஃபாவில் உட்கார்ந்து கொண்டு, நந்தினியின் குடும்பம் ரசித்துக் கொண்டிருந்ததை ரசித்தான்.

அழைப்பு மணி அழைத்தது. தேவராஜ் திரும்பிப் பார்த்தான்.

''நான் வேணா கதவைத் திறக்கட்டுமா?'' என்று அருண்குமார் எழுந்து கொண்டே கேட்டான்.

''ஒங்களுக்கு எதுவும் சிரமம் இல்லேன்னா...'' என்ற தேவராஜின் உபசார வாக்கியத்தை, ''சேச்சே'' என்று இயல்பாக்கி அருண்குமார் கதவைத் திறந்தான்.

வாசலில் புவனா நின்றிருந்தாள். கையில் சூட்கேஸ். கலைந்த தலைமுடி. பிளாஸ்டிக் முத்து மாலைக் கழுத்து.

''புவனா!'' என்றான் தேவராஜ்.

புவனாவால் அதற்கு மேல் தாங்க முடியவில்லை போலும். அழுகை வெடித்தது. சூட்கேஸை இருந்த இடத்திலேயே போட்டு விட்டு தேவராஜை நோக்கி ஓடி வந்தாள்.

''என்ன ஆச்சு?'' என்று கேட்டான் தேவராஜ். மார்பின் குறுக்கே கைகளைக் கட்டியிருந்தான். முகம் இறுக்கமாக இருந்தது. மனத்தில் ஓடிய எண்ணங்களுக்கு அவனது கல்முகம் ஒரு முகமூடியாகப் பயன்பட்டது.

புவனா அந்த விசாரணை மண்டபத்தின் ஓர் ஓரத்தில் குறுகிப் போய் உட்கார்ந்திருந்தாள். முதல் நாள் சூடி, காற்றில் ஆடி, கை பட்டு வாடித் தூக்கி எறியப்பட்ட பூச்சரக் குவியலாக இருந்தாள்.

போட்டோவிற்குப் போஸ் கொடுப்பது போல் தாத்தா நாற்காலியில் அமர்ந்தும், பாட்டி பக்கத்தில் நின்றும், கவலைச் சுருக்கங்களுடன் அவளைப் பார்த்தனர். அம்மா, நெஞ்சில் நெருப்பைத் தாங்கியவள் போல் நின்றாள். நந்தினி விறைத்துப் போய் இருந்தாள்.

என்னவோ நடக்கக் கூடாதது நடந்திருக்கிறது. புவனா குனிந்த தலை நிமிரவில்லை. உடல் குலுங்கியது. காதில் போட்டிருந்த ஒரு பிளாஸ்டிக் தோடு, அவளின் உடல் குலுக்கலுக்குப் பதம் பிடித்து நடனமாடியது.

''அந்த ஷ்யாம் சுந்தர் நீ நம்புன அளவுக்கு நல்லவன் இல்லே... அப்படித்தானே?''



"டிரைவருக்குப் பின் சீட்டில் உட்கார்ந்திருந்தவர் திடீர்னு இறங்கித் தலைதெறிக்க ஓடறாரே, ஏன்?"

"ஒன்றுமில்லை. டிரைவர் அவரிடம் பஸ் மெட்ராஸ் போனதும் என்னை எழுப்பி விடுன்னு சொன்னாராம், அதான்!"

— சி. எஸ். ராஜ்

புவனா நிமிர்ந்து பார்த்தாள். தேவராஜ் மென்மையாகத்தான் கேட்டான்.

''ஒன் நகையெல்லாம் போய்ட்டது. கொண்டு போன பணமும் கரைஞ்சி போய்டிச்சி. ஓம் மனசும் கெட்டுப் போச்சி. மானமும் கெட்டுப் போச்சி.''

''அண்ணா...'' என்று தீனமாக அழுதாள் புவனா.

''அவன் இப்ப எங்க போனான்னே தெரியலையா புவனா?''

''ஆமாண்ணா. எனக்கு வேற வழி தெரியலை. அதான்... அதான்''

''நான் எக்ஸிபிஷன்ல கைநீட்டி அடிச்சேனே. ஏன்னு இப்பவாவது புரிஞ்சுதாம்மா? நீ வெண்ணெயும், சுண்ணாம்புந் தெரியாத பொண்ணுன்னு எனக்குத் தெரியும். கண்டிச்சேன். கேக்கலியே புவனா.''

''தப்புத்தாண்ணா. நான் நெனைக்கறதுதான் சரி. நான் பண்றதுதான் கரெக்டுன்னு மண்டைத் திமிரோட அலைஞ்சேன். அடிபட்டுட்டேன். என்னை எல்லாரும் மன்னிச்சிடுங்க. நீங்க பர்மிஷன் குடுத்தா இந்த வீட்ல இருக்கேன்.''

''இல்லேன்னா?''

''ஏதாவது ஒரு அபய இல்லத்தில சேர்ந்துடறேன்.''

''இன்னொரு தரம் கைநீட்டி அடிக்கக் கூடாதுன்னு முடிவு பண்ணதாலத்தான் இப்ப அடிக்கல. அம்மா, அண்ணன், அண்ணி எல்லாம் இருக்காங்கன்னுதானே இங்க வந்தே? அபய இல்லத்துல சேர்றதுன்னா இங்க வராம அப்படியே போயிருக்கறதுதானே? புத்திசாலித்தனமாப் பேசறதா நெனைப்போ? அபய இல்லத்துக்குப் போறாளாம், அபய இல்லத்துக்கு. நான் கோவத்தையெல்லாம் கொறைச்சிக்கணும்னு நெனைச்சிட்டிருக்கேன். அனாவசியத்துக்கு ஆத்திரப்பட வைக்காதே. எங்க இஷ்டத்துக்கு இருக்கறதா இருந்தா இந்த வீட்ல இரு. இனி மேலயும் ஒன் இஷ்டத்துக்குத்தான் இருப்பேன்னா போய்டு! இங்க இருக்காதே.''

''தேவு, என்னடா இது? நீ சொல்றதெல்லாம் கேட்டுட்டுச் சும்மாவே இருக்காளே. அப்படின்னா மாப்பிள்ளை நெஜமாவே புவனாவை வுட்டுட்டு ஓடிப் போய்ட்டாரா?''

''மாப்பிள்ளை. வெங்காயம். அவன் ஒரு அயோக்யன். அவன் அயோக்யத்தனம் இருச்சி முழுக்க நாறுது.''

''ஐய்யய்யோ. அப்படின்னா எம் பொண்ணு கதி.''

''ஒண்ணும் ஆய்டலைம்மா. சும்மா பதறாதே. நீ கத்திக் கத்தியே, ஓம் பொண்ணுக்கு இப்படி ஆயிரிச்சின்னு எட்டு ஊருக்குச் சொல்லிடுவே போல இருக்கு.''

''புவனா... சொல்லித் தொலை வேண்டி.''

''அது ஒண்ணுதான் கொறைச்சல்'' என்று சொல்லி விட்டு தேவராஜ் வீட்டை விட்டு வெளியேறினான்.

கொஞ்ச நேரமாவது வெப்பமற்ற வெளிக்காற்றில் நனைந்து உலவி விட்டு வந்தால்தான் அவனுடைய தலைபாரம் குறையும் போல் இருந்தது அவனுக்கு.

அன்றிரவு. நந்தினி தேவராஜுக்குப் பக்கத்தில் கட்டிலில் படுத்திருந்தாள். தேவராஜ் அவளுக்கு முதுகு காட்டி ஒருக்களித்திருந்தான். நந்தினி மல்லாந்து படுத்திருந்தாள். விட்டம் வெறித்தாள். சுவரின் முட்டை விளக்கு அவளைப் பரிகசிப்பது போல் இருந்தது.

புவனாவையும், ஷ்யாம்சுந்தரையும் ஒன்று சேர்த்து புவனா வாழ்க்கை முழுக்கச் சந்தோஷமாக இருக்கத் தான் காரணமாக இருக்கப் போவதாக நினைத்திருந்ததில் எவ்வளவு பெரிய இடி! அந்தப் பையன் ஏதுமறியாப் பூனை மாதிரி இருந்தானே. கபடமே தெரியவில்லையே அந்த முகத்தில். புவனா மட்டுமல்லாமல் தான் கூட ஏமாந்து போய், ஊமை கண்ட கனவாய், வெளியில் சொல்ல முடியா அவஸ்தையாய் மாறி விட்டதே. புவனா இன்றைக்கு இப்படி இருப்பதற்கு நானும் கூட ஒரு காரணமாகிப் போய் விட்டேனே. அவள் இரு கண்களிலும் நீர் பொங்கிக் காது மடலைச் சூடாய் நனைத்துத் தலையணையில் இறங்கியது.

''அழறியா நந்தினி?'' என்று அவளுக்கு வெகு அண்மையில் தேவராஜின் குரல் கேட்டது. அவள் திடுக்கிட்டுத் திரும்பினாள்.

தேவராஜ் அவளை உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தான். சன்ன விளக்கொளியில் அவன் விழிகள் பளபளத்துக் கொண் டிருந்தன.

''ம்.''

''ஏம்மா?''

''புவனாவுக்கு இப்படி ஆய்டிச்சேன்னு நெனைச்சேன்.''

''அப்படியா?'' என்று கேட்ட அவன் குரலில் அவநம்பிக்கை தெரிந்தது. நந்தினி கண்களைத் துடைத்துக் கொண்டாள். அவன் கண்களை நேருக்கு நேர் சந்திக்கத் துணிவின்றி இமைகளைத் தாழ்த்திக் கொண்டாள்.

''ஸாரிங்க.''

''எதுக்கு ஸாரி.''

''ஏற்கெனவே நீங்க கவலைப் பட்டுட்டு இருக்கீங்க. உங்களுக்கு ரெண்டு வார்த்தை ஆறுதலாச் சொல்லாம....'' என்று அவன் கை விரல்களைப் பற்றி, அடைக்கலம் அளிப்பது போல் பொத்திக் கொண்டாள்.

தேவராஜ் கையை உருவிக் கொண் டான். ''என்னது இது? சினிமா மாதிரில் லாம் வசனம் பேசிக்கிட்டு. புவனா என்ன சொல்றா?''

''எதுக்கு?''

''நம்ம இஷ்டத்துக்கு இருக்கறா ளாமா?''

''நீங்க என்ன சொன்னாலும் கேட்டுக் கறேன்னு சொல்லு அண்ணின்னு சொன்னா.''

''கல்யாணம் பண்ணிக்குவாளா?''

''இன்னொரு கல்யாணமா?''

''அவளை வீட்ல வெச்சிருந்தா ஊர்ல இருக்கறவங்க என்னை இல்ல காரித் துப்பு வாங்க.''

''அதுக்கில்ல...''

''பின்னே? எதுக்குக் கேக்கறே? ஏற்கெ னவே அவ வீட்டை விட்டு ஓடிப் போய்ட்டா. லவ்வு! அவளோட லவ்வர் அவளை ஏமாத்திட்டான்னு சொல்லாம எப்படி கல்யாணம் பண்றதுன்னு யோசிக் கறியா?''

''ம்.''

''ஆயிரம் பொய்ல ஒரு பொய். எந்தக் கல்யாணம் ஒரு பொய் கூட இல்லாம நடக்குதுன்னு சொல்லேன்.''

நந்தினிக்குத் திக்கென்றது. நேரே போய்க் கொண்டிருந்த நரி, திடீரென்று மேலே விழுந்து பிடுங்கப் பார்க்கிற மாதிரி என்ன ஒரு கேள்வி இது? ஏதாவது தெரிந்து விட்டதா? நந்தினிக்கு உடல் முழுக்க உள்ளுக்குள் நடுங்கியது.

''என்ன பேச்சே காணும்? அவ கல்யா ணம் பண்ணிக்குவா இல்லை?''

''பண்ணிக்குவா.''

''சரி. எந் நேரமும் அவளைப் பொண்ணு பாக்க வருவாங்க. தயாரா இருக்கச் சொல்லு. நான் நாலு பேர்கிட்டே சொல்லி ஜாதகமெல்லாம் குடுத்திருக் கேன். என்ன?''

''ம்.''

''வீட்ல ரொம்பப் பேச வேணாம்னு சொல்லு. அவ எங்க போனா, என்ன பண்ணாங்கறதெல்லாம் வேணாம். தாத்தா, பாட்டி கேப்பாங்க. நமக்கு வேண்டாத நேரத்திலே வேண்டாத மாதிரிப் பேசிடு வாங்க. என்ன?''

''ம்.''

''இப்பத் தூங்கு. கண்டதை நெனைச் சிக் கொழம்பிட்டிருக்காதே.''


அந்த வாரக் கடைசியில் ஒரு சனிக் கிழமையின் பிற்பகலில் புவனா என்னும் புவனேஸ்வரிக்கு அலங்காரம் நடந்தது. ஒரு பட்டுச் சேலை. ஒரு தாழம்பூ பின்னல்.

சொர்க்கமும் நரகமும்!

சொர்க்கத்திற்கு மலர்கள் தூவிய பாதை இருக்கிறது! ஆனால் அதில் யாரும் நடப்பதேயில்லை. நரகத்திற்கு வாசலே இல்லை. ஆனால் அதில் எல்லோரும் சுவரேறிக் குதித்துக் கொண்டிருக்கிறார்கள்!

- சீனப் பழமொழி

தகவல் : ஆர்.ஆர். பூபதி



மையிட்டு, திலகமிட்டு, பவுடர் தீற்றி, கொலுசு ஒலிக்க, குனிந்து நடந்து வந்து அவளைப் பெண் பார்க்க வந்த குடும்பத் தின் முன்நின்றாள்.

''என்னம்மா வெக்கம்? கொஞ்சம் நிமிர்ந்துதான் பாரேன்'' என்று வரும் நாட் களில் அவளுடைய மாமியாராகப் போகும் தகுதியுடைய பையனின் அம்மா பரிவுடன் சொன்னாள்.

புவனேஸ்வரி மெல்ல நிமிர்ந்தாள்.

அவளைப் பெண் பார்க்க வந்திருந்த மாப்பிள்ளையின் முகத்தில் அதிர்ச்சி துல்லியமாகத் தெரிந்தது.

''கோடி ரூபா கொடுத்தாலும் இந்தப் பொண்ணு வேண்டாம்மா'' என்றான், சோடா புட்டி கண்ணாடி அணிந்த மாப் பிள்ளைப் பையன்.

(தொடரும்)



☛ மூங்கில் பாலம்

தேர்தலுக்குத் தேர்தல் அடிபடும் மூங்கில் பாலம்!

அமைந்தகரையில், மேத்தா நகருக்குள் நுழைந்து, இரண்டு தெருக்கள் இடப்புறமாகத் தாண்டினால், நெல்சன் மாணிக்கம் சாலையையும், பூந்தமல்லி நெடுஞ்சாலையையும் இணைக்கும் ஒரு குறுக்குப் பாதை இருக்கிறது.

பாதையை இணைப்பது ஒரு மூங்கில் பாலம். அபாயகரமான மூங்கில் பாலம். இதோ, இப்போது இற்று விழுந்து விடும் என்று தோன்றியது. அதில்தான் பொது மக்கள் உயிரைக் கையில் பிடித்துக் கொண்டு (கீழே ஓடுவது சாக்கடை என்பதால் இன்னொரு கையால் மூக்கைப் பிடித்துக் கொள்ள வேண்டும்!) நடக்கிறார்கள்.

''இதில் எத்தனையோ பேர் பொத்துப் பொத்தென்று விழுந்ததும் உண்டு'' என்கிறார் வாசகர் அசோக்குமார்.

''ஒவ்வொரு தேர்தலின் போதும் இங்கே நல்ல பாலம் ஒன்று அமைத்துத் தருவதாக வாக்குறுதி மட்டும் அளிப்பார்கள். அத்தோடு சரி. மூங்கில் பாலம், மூச்சைப் பிடித்துக் கொண்டு அப்படியே தான் இருக்கும்!'' என்றார் அந்தப் பகுதியைச் சேர்ந்த இளைஞர் ரவி.

''உங்கள் எம். எல். ஏ. இங்கே வந்து பார்க்கவில்லையா?''

''எம். எல். ஏ. செல்லக்குமார் ஒரே ஒரு தடவை வந்தார். அது எலக்ஷன் டயத்துல. அதுக்கப்புறம் வந்ததாத் தெரியலே!'' என்றார் அந்த வட்டாரத்தில் குடியிருக்கும் ஒருவர்.

''இருபத்து மூணு லட்ச ரூபாய்த் திட்டம் கூடப் போடப்பட்டதாகச் சொன்னாங்க...'' என்றார் ரவி.

''யார் காலத்தில்?''

''அது தி. மு. க. காலத்திலா, அ. தி. மு. க. காலத்திலா என்று தெரியலே... அடிக்கல் கூட நாட்டினாங்க...'' என்று சொல்லி விட்டு அப்படியும் இப்படியுமாகத் திரும்பித் திரும்பிப் பார்த்துத் தேடினார்.

அடிக்கல்லாவது ஒன்றாவது!

அது இருந்தால்தானே மக்களுக்குப் பாலம் நினைவு வரும் என்று நினைத்து விட்டார்களோ என்னவோ!

''மழைக் காலத்தில் என்ன செய்வீர்கள்?''

''இங்கே இருக்கிற நூறு வீடுகளிலிருந்தும் தலைக்குப் பத்து ரூபாய் வசூல் பண்ணி மறுபடி பாலத்தை ரிப்பேர் செய்வோம். வேற வழி?''

அதுவும் சரிதான்; வரி வேலை செய்யாத போது வேறு வழி இல்லைதான்.

– நம்பி

அண்ணன் வீட்டுச் சம்பந்தம்

கா.சு. வேலாயுதன்

கன்னியம்மாளுக்கு ஒரே யோசனையாய் இருந்தது....!

தன் ஒரே மகள் பூஞ்சோலையை அண்ணனின் கடைசிப் பையனுக்குக் கட்டி வைத்து விட்டால் என்ன...?

பூஞ்சோலையைக் கூட்டிக் கொண்டு அண்ணன் வீட்டுக்குப் பஸ்ஸில் போகும் போது இந்த நினைவு வந்து பாடாய்ப் படுத்தியது.

மூத்தவனுக்கு முப்பது வயசு இருக்குமா...? கூடவே இருக்கும். அடுத்தவனுக்கே முப்பது வயசு இருக்கும். அவர்கள் இரண்டு பேருக்குமே பஞ்சு மில்லில் வேலை என்று அண்ணன் எப்போதோ சொன்னதாக ஞாபகம். கடைசிப் பையனை ரொம்பப் பொடியனாக இருக்கும் போது பார்த்தது. 'அத்தை, அத்தை....' என்று வாய் நிறையக் கூப்பிட்டுட்டு அரை நிஜாருடன் தன்னையே அவன் சுற்றிச் சுற்றி வந்தது நினைவுக்கு வந்தது. இப்போது அவனையும் 'பீர்க்கன் வளர்த்தியாய்' வளர்ந்து நிற்கும் பூஞ்சோலையையும் இணைத்துப் பார்த்த கன்னியம்மாளுக்குச் சிரிப்புத்தான் வந்தது.

அடுத்த கணமே -

'அடச்சீ... இது என்ன, அண்ணனுக்கும் நமக்கும் ஏணி வச்சாலும் எட்டுமா...? பத்துப் பதினஞ்சு கறவை மாடும், கண்ணைப் பறிக்கிற பங்களாவுமா டவுனுப் புறத்துல அண்ணன் இருக்கிற இருப்பு என்ன...? நம்ம இந்தப் பாழும் புஞ்சை மண்ணுல அடிக்கடி வானம் பார்த்துட்டு மஞ்சள் கிழங்கைச் சுமந்து, மண்ணோட மண்ணாக்கருகிற ரோதனைதான் என்ன...?'

உள்ளுக்குள்ளேயே உடைந்து ஒடுங்கிக் கொள்ளத் துடித்தது மனசு. அதனையும் மீறிக் கட்டவிழ்ந்த காட்டாற்று வெள்ளம் போல் பொங்கி எழுந்தது ஆசை...!

'நம்மதான் இந்த 'இழவு' வாழ்வுல ரோதனைப் பட்டுப் பட்டு இடுப்பொடிஞ்சு போயிட்டோம். அதுக்காக நம்ம பார்த்துப் பூக்க வச்ச இந்தப் பூவும் பாழாகிக் கருகணுமா..? அடுத்தவன்கிட்டே போய்க் கேட்கிறதுக்குத்தான் பயம். மானம், ரோஷம், வெட்கம்ன்னு ரொம்ப யோசிக்க வேணும். கூடப் பொறந்த அண்ணன்கிட்டே கேட்கறதுல என்ன வெட்கம் வேண்டிக் கிடக்கு...? இதைக் கேட்கிறதுக்கு எல்லாத்துக்கும் மீறி இரத்த சம்பந்தம்ன்னு ஒண்ணு இருக்கே...! அண்ணன் பசங்க மூணு பேரையும் இந்தத் தோளிலேயும், மாரிலேயும் போட்டு வளர்த்தோமே... இதைக் கேட்கிறதுக்குக் கூட அருகதையில்லையா...? நம்மதான் குடிகாரனைக் கட்டிக்கிட்டு வக்கத்துப் போயிட்டோம். நம்ம பெத்த பொண்ணாவது அண்ணன் வீட்ல வாழ்க்கைப்பட்டுச் சந்தோஷமா இருக்கட்டுமே...!'

அண்ணன் வீட்டிற்குக் கடைசி கடைசியாக அண்ணனின் முதல் பையன் கல்யாணத்திற்குப் போனது. அவனுக்குப் பத்தொன்பது வயசிலேயே கல்யாணம். பெண்ணின் அப்பா தனக்கு வாரிசாக மாப்பிள்ளையையே வேலைக்குச் சேர்த்து விட்டதால் அமைந்த கல்யாணம்.

அந்தக் கல்யாணத்திற்குப் போய், சேர்ந்த மாதிரி அண்ணன் வீட்டில் நாலு நாள் தங்கி அண்ணியிடம் இவள் பட்டபாடு இருக்கிறதே... அப்பப்பா... அவள் என்ன பொம்பளையா...? பூஞ்சோலை அப்போது சிறு பெண். குழந்தை ஏதோ 'குங்குமப் பொட்டை' எடுத்துக் கீழே கொட்டி விட்டாளென்று பத்ரகாளி போல் ஆடினாளே...

அதைத் தாங்க முடியாமல் தான் குழந்தையைத் தூக்கிக் கொண்டு கல்யாணம் என்று கூடப் பார்க்காமல் இரயிலேறி விட்டாள்!

'...ம்... எனக்குன்னு யார் இருக்கா...? அண்ணனா, தம்பியா...? கட்டினவன் என்னடான்னா 'குடி குடி'ன்னு குடிச்சே கட்டினதை அறுத்துட்டு வயித்துல ஒரு குழந்தையையும் கொடுத்திட்டுப் போய்ச் சேர்ந்துட்டான். கூடப் பொறந்தது அண்ணன் மட்டும்தான். அதுவும் பாசம் காட்டவே பயந்து ஒடுங்கிப் பொண்டாட்டி பின்னால போய் ஒளிஞ்சுக்குதே...!' என்று மனசுக்குள்ளேயே குமைந்து, இவள் கோபித்துக் கொண்டு போவதைப்

பார்த்து யாருக்கும் தெரியாமல் இவள் பின்னாடியே வந்து, ஐம்பது ரூபாயைக் கொடுத்து வழியனுப்பிய அண்ணனை நினைத்த போது, இப்போதும் கூட கஷ்டமாக இருந்தது.

இரண்டாவது மகனுக்கு அண்ணியின் தம்பி மகளையே கல்யாணம் செய்து விட்ட சூழ்நிலையில், இனி அங்கே போய்ப் பயனில்லை என்று அங்கே போவதையே நிறுத்திக் கொண்டு விட்டாள். அதனால் தானோ என்னவோ, அண்ணி இறந்த இழவுச் செய்தியைக் கூட அண்ணன் இவளுக்குத் தெரிவிக்கவேயில்லை.

செத்து ஆறு மாதம் ஆன பிறகுதான் துடியலூர்ச் சந்தைக்கு வந்த அருக்காணி மூலம் செய்தி தெரிந்தது. அத்தனை நாள் கழித்துப் போனால் அண்ணன்தான் என்ன நினைப்பார்? இந்த நினைப்பிலேயே வாளாவிருந்து விட்டாள் கன்னியம்மாள்.

அண்ணனின் வீடு எதிர்பார்த்ததை விடவே ரொம்பவும் மாறிப் போயிருந்தது.


இரண்டு மாடிக் கட்டடமும், அழகழகாய்ப் பூச்செடிகளும், முன்னால் இரண்டு மோட்டார் சைக்கிள்களுமாய்... இவளுக்கு அடையாளமே தெரியவில்லை. இவளைக் கண்டதும் அண்ணன் அப்படியே பாகாய் உருகிப் போய் விட்டார்.

''கன்னியம்மாவா... அடி அம்மாடி... செத்தனா, பிழைச்சனான்னு இப்பவாவது அண்ணனைப் பார்க்க வழி தெரிஞ்சுதே... வாம்மா... வா...!''

அண்ணன் என்றைக்குமில்லாத கரிசன வார்த்தைகளோடு வரவேற்றபோதே இவள் பதிலுக்கு நெஞ்சுருகிப் போனாள். 'ஒ'வென்று ஒரு மூச்சு அண்ணனைக் கட்டிப் பிடித்துக் கொண்டு அழுது தீர்த்தாள்.

தன்னை ஆசுவாசப்படுத்திக் கொண்டு நிமிர்ந்த அண்ணன், ''அட... இது யாரு... அடையாளமே தெரியலை... உம் மகதானே இது... நான் பொடிசுல பார்த்தது... மசமசன்னு உன் தோளுக்கு மேல வளர்ந்து நிக்குதே...!'' - என்றபடி பூஞ்சோலையை அணைத்து உச்சிமோந்த போது ரொம்பவும்தான் புல்லரித்துப் போனாள் கன்னியம்மாள்.

அண்ணன் அப்படியே பழைய அண்ணனாகவே மாறியிருந்தது மிகவும் ஆச்சர்யமா



யிருந்தது. எல்லாம் பூஞ்சோலை பூப் பெய்தின நல்ல நேரம் என்கிற எண்ணம் வந்தது.

என்னதான் அண்ணன் நம்முடன் நல்லவிதமாகப் பேசினாலும் தன் படித்த மகனுக்குத் தன் பட்டிக்காட்டுத் தங்கச்சி பெண்ணைக் கட்டி வைப்பாரா என்ற சந்தேகம் எழுந்தது.

அண்ணனின் கடைசி மகனோ பூஞ்சோலைக்கு நேர்மாறாக நடந்து கொண்டான். அவனிடம் அப்படியே அண்ணனிடம் இல்லாத ஒரு பணக்காரப் போக்கு அட்டையாய் ஒட்டியிருந்தது. காலில் பூட்ஸும் கழுத்தில் இறுக்கிக் கட்டின டையுமாக அவன் நடந்து வந்த போது, இவள் அப்படியே அசந்துதான் போனாள்.

''டேய் சசி... இவ யாருன்னு தெரியுதா...? அடிக்கடி சொல்லுவேனே... உன் ஒரே அத்தை... என் கூடப் பிறந்தவ... பாவம், எங்கியோ காணாத சீமைக்குப் போன மாதிரி ரொம்பக் காலம் கழிச்சு வந்து நிக்கிறா... ரொம்பத்தான் வாழ்க்கையில பட்டுப் போயிட்டா பாவம்...!''

அண்ணன் வார்த்தைகளில் ஆயிரம் 'பாவம்' போட்டுச் சொல்லிய போது கூட அவ்வளவாய் அவன் சட்டை செய்யவில்லை. மும்முரமாய் ஏதோ புத்தகம் படித்துக் கொண்டிருந்தவன் லேசாய்த் தலைநிமிர்ந்து பார்த்ததோடு சரி...

'அதுதான் பார்த்தாலே தெரியுதே...!' இளக்காரமாய்ச் சின்ன முணுமுணுப்போடு அடங்கிப் போய் விட்டான். அதைக் கண்டு இவளுக்கு என்னவோ போலாகி விட்டது என்றால், அண்ணனின் முகமோ பார்க்கச் சகிக்கவில்லை.

இவன் பூஞ்சோலையிடம் அப்படி என்ன இல்லையென்று முகத்தைத் திருப்பிக் கொள்கிறான். நிறம் மாநிறம்தான் என்றாலும் பார்க்க மூக்கும் முழியுமாக லட்சணமாத்தானே இருக்கிறாள்!

கன்னியம்மாளின் மனநிலையை உணராமல் மாமன் வீட்டில் நல்ல தீனியும், டீ.வி. சினிமாவுமாக வளைய வளைய வந்த பூஞ்சோலையை 'அப்படி நடக்காதே...', 'வயசுப் பொண்ணு நடையைப் பாரு... ஒழுங்கா நடடி...' என்று அடிக்கடி அதட்டல் போட்டாள். அம்மாவுக்காக ஆடி அசைந்து ஒரு மாதிரியாக நடந்தால், 'நடக்கிறதப் பாரு... இப்பத்தான் நடை பழகுறாப்பல...!' - எரிச்சலுடன் முணுமுணுத்தாள்.

மகளை அழைத்து வாசனைச் சோப் பால் முகம் கழுவச் சொல்லி அடிக்கடி தலைவாரிப் பூச்சூட்டி விட்டாள். 'அப்படித் திரும்பு...', 'இப்படிப் பார்' என்று ஓயாமல் உத்திரவு வேறு போட்டாள்.

ஆனால் மகளின் எந்த அசைவுக்கும் அண்ணன் பிள்ளை மசிவதாய்க் காணோம். அவன் இவை எதையுமே சட்டை செய்யவில்லை. வீட்டிற்கு வருவதும் போவதும், அவன் நண்பர்களுடன் அரட்டை அடிப்பதுமாக இருந்தவன் திடீரென்று ஒருமுறை அரைக்கால் கவுன் போட்ட பெண்ணொருத்தியைத் தன் மோட்டார் சைக்கிளில் கட்டித் தழுவாத குறையாக அழைத்து வந்த போது, ரொம்பவும்தான் உடைந்து போனாள் கன்னியம்மாள்.

அதே சமயம் இதையெல்லாம் கண்டும் காணாதது போல் அண்ணன் இருந்தது என்னவோ போலிருந்தது. கண்களில் அழுகை முட்டி முட்டி அலைமோதியது. ரொம்பவும் எதிர்பார்த்து ஏமாந்து போனோமோ என்று எண்ணியெண்ணிக் குமைந்து போனாள்.

இவள் குமையாமல் குமைந்து கொண்டிருந்த சமயம் பார்த்துத் தோட்டத்தில் பூத்திருந்த பூக்களைப் பறித்துத் தலையில் வைத்து அழகு பார்த்துக் கொண்டிருந்தாள் பூஞ்சோலை.

கண்ட கண்ட பூக்களையும் பறித்துத் தலையில் வைத்துக் கொள்ளும் அவளைப் பார்க்கப் பார்க்கக் கன்னியம்மாவிற்கு ஆத்திரம் பற்றிக் கொண்டு வந்தது.

''ச்சீ... மூதேவி... சனியனே... கண்டதையும் பறிச்சுத் தலையில வச்சுட்டு.. பைத்தியக்காரி மாதிரி என் மானத்தை வாங்கறியேடி... நட முதல்ல... உன்னைக் கொண்டு போய் மறுபடியும் அந்த மஞ்சக் காட்டுல அழுத்தினாத்தான் புத்தி வரும்...!'' - என்று கத்தியவள் அவள் தலையிலிருந்த பூவைப் பிடுங்கி வாசலில் எறிந்த போது குறுக்கே அண்ணன் வந்து விட்டார்.

''என்ன கன்னியம்மா... பாவம் குழந்தை ஏதோ மாமன் வீட்ல ஆசைப்படுது... அதைப் போய் பெரிசுபடுத்திட்டு...!''

''பின்னே என்னண்ணா...? இன்னும் இவ என்ன குழந்தையா... பெரிய மனுஷியாகி, இனி விட்டா புள்ளையும் பெத்துடுவா... இன்னமும் இப்படி விளையாட்டுத்தனமாத் திரிஞ்சான்னா நாளைக்கு எம் மானம்ல கப்பலேறும்...! உனக்கென்ன தெரியும்...?''

மூக்கைச் சிந்தினாள் கன்னியம்மாள். அண்ணன் இவளையே சிறிது நேரம் வைத்த கண் வாங்காது பார்த்தார்.



(ஆபீஸில்) ஒருவர் : ஏன் எல்லாரும் கிளார்க் குமரேசனைப் பார்த்துச் சிரிக்கிறாங்க?

மற்றவர் : பொய்ப்பல் கட்டிக்கிட்டு இருக்கிற அவர், மறதியாப் பல்வலிக்கு லீவு கேட்டு எழுதிட்டாராம் - மதுரை மணி

பொன் விழா போட்டிக் கவிதை





தாள்

தாளைப் படித்துக் கல்வி முடித்து
தாளைப் பெற்று வெளியில் வந்து
தாளைப் பார்த்துத் தாளைப் பார்த்து
தாளில் எழுதி அஞ்சல் செய்து
தாளில் விழுந்து தாளைப் பெற்றும்
தாளைக் கொடுத்து ஆளைப் பிடித்தும்
தாளை நோக்கித் தவமாய்க் கிடந்தும்
தாளாத் துன்பம் அடைந்து தவிக்கும்
தாளே நெஞ்சம் குப்பைத் தாளே!

- மலர்தமிழ்

"கன்னியம்மா... உம் மனசுல என்ன இருக்குன்னு என்னால உணர முடியுதும்மா... ஆனா என்னால இதுல என்ன செய்ய முடியும்னு நினைக்கிறே...? இவனுகளை பெத்துப் போட்ட உன் அண்ணிக்காரி எப்படியோ போய்ச் சேர்ந்துட்டா. மூத்தவனுக ரெண்டு பேரும் குடியும் குடித்தனமுமா வேற வீடு கட்டிப் போயிட்டாங்க... இவன் என்னடான்னா சுத்தமா யாரையுமே சட்டை செய்யாம கோடு மீறித் திரியறான். அதைத் தட்டிக் கேட்டா பத்து நாள், பதினஞ்சு நாள் வீட்டுப் பக்கமே எட்டிப் பார்க்க மாட்டான். பொம்பளையில்லாத வீட்ல வெந்ததும், வேகாததுமாச் சாப்பிட்டுக் காலத்தைக் கழிச்சிட்டு வர்றேன்... நீயும் அப்படி திடீர்னு வந்து எம் மனசை நோகடிக்கட்டுப் போனீன்னா எப்படிம்மா...?"

நாத்தழுதழுப்போடு கேட்டவர் கண்களைத் தம் தோள் துண்டால் துடைத்துக் கொண்டார்.

பின்பு, "வேணும்ன்னா ஒண்ணு செய்... நீ அப்படி அண்ணன் வீட்ல சம்பந்தம் வச்சுக்க ரொம்பவும்தான் ஆசைப்பட்டேன்னா... நீ தப்பா நினைக்கலேன்னா நான் ஒண்ணு சொல்றேன்... கேட்பியா...?"

பரிதாபமாய்க் கேட்டு விட்டுச் சுற்று முற்றும் பார்த்துக் கொண்டே தயங்கித் தயங்கி இவளை நெருங்கி வந்தார்.

"பேசாம உம் பொண்ணை நானே கட்டிக்கலாம்னு பார்க்கறேன்... நீ என்ன சொல்றே...?" காதோரமாய்க் கிசுகிசுக்க, கன்னியம்மாளுக்குப் பகீரென்றது.

அடப்பாவி... இந்த அண்ணன் மனசுக்குள்ளும் இப்படியொரு வக்கிர புத்தியா...? தான் வந்தவுடன் அண்ணன் பூஞ்சோலையை உச்சிமோந்த காட்சி இப்போது வந்து நினைவில் ஆட மனசு அருவருப்பாய் ஆடியது. அங்கே அதற்கு மேலும் நிற்கத் திராணியில்லை கன்னியம்மாளுக்கு. விடுவிடுவென அந்த இடத்தை விட்டு வெகு வேகமாக நடந்தாள்.

தலை கிறுகிறுத்தது. உலகமே தலைகீழாகச் சுழல்வது போலிருந்தது. தான் பிறந்த பிறப்பின் மீது - வாழ்க்கைப்பட்ட வாழ்க்கையின் மீது வெறுப்பு வந்தது. எல்லாவற்றுக்கும் காரணம் தனது வறுமை தானே...

முட்டி மோதிக் கொண்டு மூர்க்கமாய்க் கிளர்ந்தெழுந்த கோபத்தினூடே, "இன்னும் என்னடி ரோசனை வேண்டிக் கிடக்கு...? வாடி போவலாம்..." என்று பூஞ்சோலையை உரக்கக் கூவி அதட்டல் போட்டாள் கன்னியம்மாள்.

காந்திஜியை மறக்காத இளைஞர்கள்!



காந்திஜி சமூக சேவை மையத்தினர்

சினிமா நடிகர்கள் பெயரில் நற்பணி மன்றங்கள் நடத்திக் கொண்டிருக்கும் இந்தக் காலத்தில் காந்திஜி பெயரில் - அதுவும் கல்லூரி மாணவ - மாணவியர் ஒரு சமூக சேவை மையம் நடத்துவது என்றால், நம்ப முடியாத சமாசாரம்தான் என்று முதலில் தோன்றியது.

பூந்தமல்லி நெடுஞ்சாலையில் கொஞ்சம் உள்வாங்கி, இறக்கமாகச் செல்லும் என். எஸ். கே. நகரில் இதன் தலைவி, செல்வி ஜெயந்தியைச் சந்தித்து உரையாடிய போது, நமது சந்தேகம் எல்லாம் மறைந்து போய் விட்டது.

''வந்தவாசி அருகே தின்னனூரில் இருந்து கன்னிகா என்றொரு பெண் என் தாயாரைத் தேடி வந்தார். கணவரால் கைவிடப்பட்டு, வாழ்விழந்த பெண் அவர் என்று தெரிந்து கொண்டோம். அங்கேயே நேரில் போய் அவர் கணவருடன் பேசிச் சம்மதிக்க வைத்தோம். நீங்கள் இஷ்டப்பட்டால் அவருடன் போய் வாழ்க்கை நடத்தலாம் என்று கன்னிகாவிடம் சொன்னோம். அவர் இப்போது நல்லபடியாகக் கணவருடன் வாழ்க்கை நடத்துகிறார்'' என்றார் ஜெயந்தி; எதிராஜ் கல்லூரி பி.காம். மாணவி. அந்தச் சம்பவம்தான் இப்படியொரு நற்பணி மன்றத்திற்கான அஸ்திவாரமாக அமைந்ததாம்.

''உங்கள் சங்க உறுப்பினர்கள் எல்லாருமே எதிராஜ் கல்லூரி தானா?''

''அல்ல. பிரசிடென்ஸி கல்லூரி, கலைக் கல்லூரி, பச்சையப்பன், வைஷ்ணவா, லாயலா என்று எல்லாக் கல்லூரிகளிலுமிருந்தும் மாணவ - மாணவிகள் அங்கத்தினராக இருக்கிறார்கள். ஐ. சி. எஃப். டிரெயினிங் இன்ஸ்டிட்யூட் மாணவர்கள் கூட ஐந்து பேர் உறுப்பினர். எனக்கு எல்லா விதத்திலும் உதவியாக இருப்பவர் கலைக் கல்லூரி மாணவி அருணி. இவர்தான் துணைத் தலைவியும் கூட.''

''உங்கள் பொது நலச் சேவைக்கு நிதிக்கு என்ன செய்வீர்கள்?''

''விழியிழந்த கலைஞர்களை வைத்து ஓர் இசை நிகழ்ச்சி நடத்தினோம். அதில் ஏழாயிரம் ரூபாய் கிடைத்தது. அவர்களுக்குச் சன்மானமாக 3,200 ரூபாய் கொடுத்தது போக மீதியைப் பயன்படுத்துகிறோம். தவிர எங்கள் சொந்தப் பணத்தையும் அவ்வப்போது அளிப்பதுண்டு.''

முதியோர் கல்வியை முக்கியப் பணியாகக் கருதி, இவர்கள் பகுதி பகுதியாகச் சுற்றி எழுதப் படிக்கத் தெரியாதவர்களின் பட்டியல் ஒன்றைத் தொகுத்திருக்கிறார்கள். அரசாங்கப் புள்ளி விவரம் கூட இத்தனை அக்கறையாகச் சேர்க்கப்பட்டிருக்குமா என்பது சந்தேகம் தான். பிறகு அந்தந்த ஏரியாவில் உள்ள, எழுதப் படிக்கத் தெரியாத முதியோரை அங்கங்கேயே கல்வி கற்க ஏற்பாடு செய்திருக்கிறார்கள்.

ஏழை மாணவர்களுக்கு நோட்டுப் புத்தகங்கள் அளிப்பதும்; உடல் ஊனமுற்றோருக்குச் செய்யும் உதவிகளும், இந்த உற்சாகம் மிகுந்த கல்லூரி மாணவ - மாணவிகளின் பாராட்டத்தக்க பணிகள்.

– சித்தார்த்

சிவகாமியின் சபதம்

பதினோராம் அத்தியாயம்
கனவும் கற்பனையும்

செம்பியன் வளவன் தன் மகளை அணைத்துக் கொண்டு, ''அம்மா! கண்ட கனவு எல்லாம் எப்போதும் பலிப்பது இடையாது. சில சமயம் பலிப்பதும் உண்டு. கனவுகளின் உண்மைக் கருத்தைக் கண்டு பிடித்துத் தெரிந்து கொள்வதோ மிக்க கடினம். ஆயினும், நீ கண்ட கனவைக் கூறு. நான் அறிந்த சொப்பன சாஸ்திரத்தை யனுசரித்து உன்னுடைய கனவு பலிக்குமா, பலிக்காதா என்று பார்த்துச் சொல்கிறேன்'' என்றான்.

மகள் கண்டது ஏதாவது துர்ச்சொப்பனமாயிருந்தால் அதற்கு ஏதாவது நல்ல அர்த்தம் கற்பனை செய்து கூறி, அவளுக்குத் தைரியம் சொல்லி விட்டுப் போகலாம் என்று செம்பியன் நினைத்தான்.

மங்கையர்க்கரசி, ''அப்பா! அந்தக் கனவை நினைத்தால் எனக்குச் சந்தோஷமாயுமிருக்கிறது; பயமாகவும் இருக்கிறது. இதோ பாருங்கள், இப்போது கூட என் தேகமெல்லாம் சிலிர்த்திருப்பதை...!'' என்று முன் கையில் ஏற்பட்டிருந்த ரோமச் சிலிர்ப்பைச் சுட்டிக் காட்டி விட்டு, மேலும் கூறுவாள்:

''சில காலமாகவே என்னுடைய கனவில் அடிக்கடி ஒரு சுந்தரமான யௌவன புருஷர் தோன்றி வருகிறார். அவர் என்னை அன்பு கனிந்த கண்களினால் அடிக்கடி பார்க்கிறார். வெளி உலகத்தில் அத்தகைய ஒருவரை நான் பார்த்ததேயில்லை. நமது மாமல்ல சக்கரவர்த்தியைக் காட்டிலும் அவருடைய முகம் களையானது. அவர் என்னைப் பார்க்கும்போதெல்லாம் 'நீ எனக்கு உரியவள் அல்லவா? ஏன் என்னுடன் இன்னும் வந்து சேரவில்லை?' என்று கேட்பது போலத் தோன்றும். அப்போது என் நெஞ்சு படபடக்கும்! உடம்பெல்லாம் பதறும். நேற்று நான் கண்ட கனவிலும் அந்தச் சுந்தர புருஷர் தோன்றினார். ஆனால், மிக்க பயங்கரமான சூழலுக்கு மத்தியில் அவரை நேற்றிரவு நான் கண்டேன். அவரைச் சுற்றிலும் பத்துப் பன்னிரண்டு பிசாசுகள் அம்மணமாக நின்று ஏதோ கோரமான சப்தம் போட்டுக் கொண்டு கூத்தாடின. அந்தப் பிசாசுகள் ஒவ்வொன்றின் கையிலும் மயில் இறகுக் கத்தை ஒன்று இருந்தது. சில சமயம் அப் பிசாசுகள் தங்கள் மத்தியில் நின்ற சுந்தர புருஷர் மீது மயில் கத்தைகளை வீசி அடிப்பது போல் தோன்றியது! அவர் பாவம், ஏதோ ஒரு தேக உபாதையினால் கஷ்டப்படுகிறவர் போல் காணப்பட்டார். இதற்கிடையில் அவர் என்னைப் பரிதாபமாகப் பார்த்து, 'இந்தப் பிசாசுகளிடம் நான் அகப்பட்டுக் கொண்டு விட்டேனே? என்னை நீ காப்பாற்ற மாட்டாயா?' என்று கேட்பது போலிருந்தது.

''நான் உடனே திரும்பி ஓட்ட ஓட்டமாக ஓடினேன். எங்கே ஓடுகிறோம் என்ற நினைவே இன்றி நெடுந்தூரம் ஓடினேன். கடைசியாக ஒரு கோயில் தென்பட்டது. அதற்குள் பிரவேசித்தேன். கோயிலுக்குள் அப்போது யாரும் இல்லை. அம்பிகையின் சந்நிதியை அடைந்து முறையிட்டேன். 'தாயே! என் உள்ளங் கவர்ந்த புருஷரை நீதான் காப்பாற்ற வேண்டும்!' என்று கதறினேன். 'குழந்தாய்! பயப்படாதே!

அமரர் கல்கி

என் குமாரனை அனுப்புகிறேன். அவன் உன்னுடன் வந்து உன் விருப்பத்தை நிறைவேற்றுவான்!' என்று ஒரு அசரீரி பிறந்தது. அசரீரி சொல்லி நின்றதோ இல்லையோ, அம்பிகை விக்கிரகத்தின் அருகில் திவ்ய மோகன ரூபங்கொண்ட ஒரு பாலன் நின்றதைப் பார்த்தேன். 'என் குமாரனை அனுப்புகிறேன்' என்று தேவி சொன்னபடியால் வள்ளி நாயகன்தான் வரப் போகிறார் என்று எண்ணினேன். ஆனால், அங்கே நின்ற பிள்ளையோ விபூதி ருத்ராட்சம் தரித்த சிவயோகியாகக் காணப்பட்டார். இனிமையும் சாந்தமும் நிறைந்த குரலில் அந்தப் பிள்ளை, 'தாயே! என்னுடன் வா! உன் நாயகனைக் காப்பாற்றித் தருகிறேன்!' என்றார். அந்தத் தெய்வீகக் குழந்தையின் திருவாயில் 'உன் நாயகன்' என்ற வார்த்தைகள் வந்ததும், எனக்கு மெய்சிலிர்த்தது. உடனே உறக்கம் நீங்கி எழுந்து விட்டேன்! அந்தச் சுந்தர புருஷர் காப்பாற்றப்பட்டாரோ இல்லையோ என்ற சந்தேகத்தினால் இன்னமும் என் உள்ளம் துடித்துக் கொண்டிருக்கிறது. நான் கண்ட கனவின் பொருள் என்ன, அப்பா? அதனால் எனக்கு ஏதேனும் தீமை விளையுமா? அல்லது நன்மை ஏற்படுமா?'' என்று புதல்வி கேட்டு வாய்மூடு முன்னே, ''கட்டாயம் நன்மைதான் ஏற்படும்!'' என்று செம்பியன் உறுதியாகக் கூறினான்.

சற்று நேரம் சிந்தனையில் ஆழ்ந்திருந்துவிட்டு அச் சோழர் பெருந்தகை மேலும் கூறியதாவது : ''நீ கண்ட கனவு ஏதோ தெய்வீகமாகத் தோன்றுகிறது. உன் மனதுக்கிசைந்த சுந்தர மணவாளனை நீ இங்கேயே அடையப் போகிறாய். அப்படி நீ அடையும் மணாளனுக்கு ஏதோ பெரிய கஷ்டங்கள் நேரலாமென்றும், நமது குல தெய்வமாகிய முருகப் பெருமானின் அருளால் அந்தக் கஷ்டங்கள் எல்லாம் நீங்கும் என்றும் உன்னுடைய கனவிலிருந்து ஊகித்து அறிகிறேன். என் அருமை மகளே! ஒரு விஷயத்தில் நீ உறுதியாக இருக்க வேண்டும். நான் இல்லாத சமயத்தில் உன்னைத் தேடி அதிர்ஷ்டம் வந்தால் அதை நீ வேண்டாமென்று தள்ளாதே! இராஜகுலத்தில் பிறந்தவன் எவனாவது உன்னைக் கரம்பிடிக்க விரும்பினால், அப்படிப்பட்டவனை மணந்து கொள்ள இப்போதே உனக்கு நான் அனுமதி கொடுத்து விடுகிறேன். போர்க்களத்திலிருந்து நான் உயிரோடு திரும்பி வந்தால் உன்னையும் உன் மணாளனையும் பார்த்து ஆனந்தக் கண்ணீர் சொரிந்து ஆசீர்வதிப்பேன். ஒருவேளை போர்க்களத்தில் உயிர் துறக்கும்படி நேரிட்டால், ஆவி வடிவத்திலே திரும்பி வந்து உங்களை ஆசீர்வதித்து விட்டு அப்புறந்தான் வீர சொர்க்கத்துக்குப் போவேன்.''

இவ்விதம் கூறிய போது செம்பியன் வளவனின் கண்களிலிருந்து கண்ணீர் தாரையாகப் பெருகியது. மங்கையர்க்கரசியும் தந்தையின் விசால மார்பில் முகத்தைப் பதித்துக் கொண்டு விம்மினாள்.

பன்னிரண்டாம் அத்தியாயம்

நெடுமாறன்

மங்கையர்க்கரசி கண்ட கனவின் பொருள் இன்னதென்று செம்பியன் வளவனால் கண்டுபிடிக்க முடியவில்லையல்லவா?

இவள் தன் கனவைச் சொல்லிக் கொண்டிருந்த அதே நேரத்தில் காஞ்சிக்குத் தெற்கே பத்து காத தூரத்தில் வராக நதிக்கரையில் என்ன நடந்து கொண்டிருந்தது என்பதைப் பார்த்தோமானால், ஒருவேளை அந்தக் கனவின் பொருளை நாம் ஊகித்தறிந்து கொள்ளலாம்.

நடுநிசியில் நிலவொளியில் வராக நதிக்கரையானது அதுவரையில் என்றும் கண்டறியாத காட்சி அளித்தது. மாபெரும் பாண்டிய சைனியம் அந்த நதிக்கரையில் தண்டு இறங்கி இருந்தது. ஆங்காங்கு அமைந்திருந்த கூடாரங்கள் மீது பறக்க விட்டிருந்த மீனக் கொடிகள், இளங்காற்றில் படபடவென்று அடித்துக் கொண்டிருந்தன. யானைகளும் குதிரைகளும் ரதங்களும் வண்டிகளும் கண்ணுக்கெட்டிய தூரம் காணப்



பட்டன. குளிர் அதிகமில்லாத புரட்டாசி மாதமாகையால், வீரர்கள் பெரும்பாலும் திறந்தவெளியில் படுத்து உறங்கிக் கொண்டிருந்தார்கள்.

தூக்கம் வராதவர்கள் ஆங்காங்கே கும்பல் கூடி உட்கார்ந்து, கதை பேசிக் கொண்டிருந்தார்கள். நடுநிசியின் நிசப்தத்தைக் கலைத்துக் கொண்டு சில சமயம் அவர்களுடைய சிரிப்பின் ஒலி கேட்டது. அத்தகைய கூட்டம் ஒன்றின் அருகில் சென்று அவர்கள் என்ன விஷயத்தைப் பற்றிப் பேசுகிறார்கள் என்று தெரிந்து கொள்வோம்.

பொதுவாக அவ்வீரர்கள் சிறிது கவலையுடனேயே பேசிக் கொண்டிருந்தார்கள். மேலே காஞ்சியை நோக்கிப் போகாமல் மூன்று நாளாக அந்த வராக நதிக்கரையில் சைனியம் தங்கியிருப்பதைப் பற்றியும், அவர்களுடைய சேனாதிபதி நெடுமாற பாண்டியனுக்கு என்ன உடம்பு என்பது பற்றியும் அவர்கள் பேசினார்கள். ''உடம்பு ஒன்றும் இல்லை; வேறு ஏதோ காரணம் இருக்கிறது!'' என்று சிலர் காதோடு காதாகச் சொன்னார்கள். ''இளவரசருக்கு மோகினிப் பிசாசு பிடித்திருக்கிறது!'' என்று ஒருவன் சொன்ன போது இலேசாகச் சிரிப்பு உண்டாயிற்று.



''என்ன சிரிப்பு வேண்டிக் கிடக்கிறது? நாளைக் காலையில் காஞ்சியிலிருந்து பல்லவர் படை கிளம்பப் போகிறது. நாம் நடுவழியில் உட்கார்ந்திருக்கிறோம்!'' என்றான் இன்னொருவன்.

''இங்கிருந்து திரும்பி மதுரைக்குத்தான் போகப் போகிறோமோ, என்னவோ?'' என்றான் இன்னொருவன்.

''அப்படித் திரும்பிப் போவதைக் காட்டிலும் இந்த வராக நதியில் விழுந்து உயிரை மாய்த்துக் கொள்ளலாம்!'' என்றான் இன்னொருவன்.

''ஆகா! உயிரை மாய்த்துக் கொள்ள நல்ல வழி கண்டுபிடித்தாய்! இந்த வராக நதியில் தலைகீழாக நின்றால் தண்ணீர் மூக்கு வரையில் வரும். இந்த நதியில் மூழ்கி உயிரை மாய்த்துக் கொள்ள ரொம்பக் கெட்டிக்காரத்தனம் வேண்டும்'' என்றான் இன்னொருவன்.

''எது எப்படியிருந்தாலும் நான் திரும்பிப் போகப் போவதில்லை. வாதாபியிலிருந்து அதைக் கொண்டு வருகிறேன்; இதைக் கொண்டு வருகிறேன் என்று என் காதலியிடம் சொல்லி விட்டு வந்திருக்கிறேன். வெறுங்கையோடு போனால் அவள் என்ன சொல்லுவாள்?'' என்றான் வேறொருவன்.

''வீர பாண்டியர் குலத்தில் பிறந்தவருக்கு இப்படிப்பட்ட விளக்கெண்ணெய்ச் சுபாவம் எப்படி வந்ததோ?'' என்று ஒருவன் கூறிப் பெருமூச்சு விட்டான்.

இவ்வாறெல்லாம் மேற்படி வீரர்கள் அலுத்துச் சலித்துப் பேசுவதற்குக் காரணமாயிருந்த பாண்டிய இளவரசன் நெடுமாறனை வராக நதிக்கரையோரமாக அமைந்திருந்த அவனுடைய கூடாரத்துக்குச் சென்று பார்ப்போம்.

ஆம்! இதோ வீற்றிருக்கும் இந்தக் கம்பீரமான சுந்தர புருஷன்தான் நெடுமாறன். பல்லவ குலம் தோன்றியதற்கு எத்தனையோ காலத்துக்கு முன்னாலிருந்து வாழையடி வாழையாக வளர்ந்து வந்த பாண்டிய மன்னர் குலத்திலே பிறந்தவன்.

அவனுக்கு எதிரில் ஒரு திகம்பர சமணர் உட்கார்ந்திருக்கிறார். அவருக்கு அருகில் மயிலிறகுக்கத்தை, சுருட்டிய பாய், கமண்டலம் ஆகியவை இருக்கின்றன.

கட்டையாகவும் குட்டையாகவும் மொட்டைத் தலையுடனும் விளங்கிய அந்தத் திகம்பர சமணரைப் பார்த்து நெடுமாறன், "சுவாமி! இன்னும் எத்தனை நேரம் காத்திருக்க வேண்டும்?" என்று கேட்டான்.

அவன் கேட்டு வாய் மூடுவதற்குள்ளே எங்கேயோ வெகுதூரத்திலிருந்து ஒரு மெல்லிய கம்பனசப்தம் - உடுக்கு அடிப்பது போன்ற சப்தம் - வரலாயிற்று. 'தரிரிம்' 'தரிரிம்' என்று ஒலித்த அந்தச் சப்தம் மெல்லியதாயிருந்தபோதிலும் காது வழியாக உடம்பிற்குள்ளே புகுந்து உடம்பின் ஒவ்வொரு அணுவையும் ஒரு குலுக்குக் குலுக்கியது.

"அதோ! நமக்கு அழைப்பு வந்து விட்டது! இளவரசே, கிளம்புங்கள்!" என்றார் அந்தச் சமண முனிவர்.

நெடுமாறன் மறுமொழி கூறாமல் புறப்பட்டான். இருவரும் கூடாரத்திலிருந்து வெளியில் வந்து நதிக்கரையோரத்தை அடைந்தனர்! அங்கே ஒரு படகு காத்திருந்தது. அதன் இரு முனையிலும் இரு வீரர் துடுப்புடன் காத்திருந்தனர்.

நெடுமாறன் படகில் ஏறுவதற்கு முன் ஒருகணம் தயங்கினான். அதைப் பார்த்த சமணர் "இளவரசே! தங்களுக்கு அச்சமாயிருக்கிறதா? அப்படியானால் வர வேண்டாம்! திரும்பிப் போய் விடுங்கள்!" என்று கூறவும், நெடுமாறன் அவரைப் பார்த்து ஒரு தடவை அலட்சியமாக 'ஹூம்' என்று சொல்லி விட்டுப் படகில் முன்னதாகப் பாய்ந்து ஏறினான்.

சமண முனிவரும் ஏறிக் கொண்டார்.

வீரர்கள் சப்தம் அதிகமாகக் கேட்காத வண்ணம் துடுப்பை மெதுவாகப் போட்டு ஜாக்கிரதையாகப் படகைச் செலுத்தினார்கள்.

படகு அக்கரையை அடைந்தது.

வீரர் இருவரையும் அங்கேயே படகுடன் காத்திருக்கும்படி சொல்லி விட்டு, நெடுமாறனும் சமண முனிவரும் மேலே சென்றார்கள்.

போகப் போக உடுக்கையின் ஒலி அதிகமாகிக் கொண்டு வந்தது. அந்த ஒலி யானது ஒருவகைக் காந்த சக்தியைப் போல் நெடுமாறனைக் கவர்ந்து இழுத்தது. இனிமேல் அவன் விரும்பினாலும் திரும்பிப் போக முடியாதபடி அதன் சக்தி கணத்துக்குக் கணம் அதிகரித்துக் கொண்டிருந்தது. நெடுமாறனின் நடையும் விரைவாகிக் கொண்டு வந்தது. கடைசியில் அவனுடைய நடை ரொம்ப வேகமாகி ஓட்டமாகவே மாறியது.

"இளவரசே! நில்லுங்கள். நாம் சேர வேண்டிய இடம் இதுதான்!" என்று சமண முனிவர் கூறியது கனவிலே கேட்பது போல் நெடுமாறன் காதில் கேட்டது.

நெடுமாறன் நின்றான். அவனுக்கு எதிரே பாறையில் குடைந்த குகை ஒன்று காணப்பட்டது. குகையின் வாசலில் இரண்டு துவாரபாலர் நின்றார்கள். உண்மையில் கல்லில் செதுக்கிய சிலைகள் தாம் அவை. எனினும் மயக்கத்தில் ஆழ்ந்திருந்த இளவரசன் ஒருகணம் அவர்கள் உண்மையான காவலர்கள் என்றே நினைத்தான்.

குகைக்குள்ளேயிருந்து மங்கலான வெளிச்சம் வந்து கொண்டிருந்தது. உடுக்கையின் சப்தமும் அக் குகைக்குள்ளிருந்து தான் வந்தது.

ஆம்! இந்தப் பாறையும் குகையும் துவாரபாலர் சிலைகளும் நாம் ஏற்கெனவே பார்த்தவைதாம்.

ஒன்பது ஆண்டுகளுக்கு முன்னால் ஆயனச் சிற்பியார் குடைந்தெடுத்த குகைதான் அது. அந்தக் குகையைத் திகம்பர சமணர்கள் கைப்பற்றிக் கொண்டிருந்தார்கள்.

(தொடரும்)



ஒட்டிக் கொள்ள ஒரு செருப்பு!

கோடைக்கு உதவியாக மேல் பட்டை (வார்) யில்லாத செருப்புக்களைத் தயாரிக்கிறது அமெரிக்க நிறுவனம் ஒன்று. இந்த ரப்பர் செருப்பில் பாதம் ஒட்டிக் கொள்ள வசதியாக ஒரு பசை தடவப்பட்டுள்ளது. செருப்பு தேவைப்படாத போது கழற்றுவதற்குப் பதில், உரித்து எடுத்துவிடலாம். மறுபடி உள்ளங்காலைப் பதித்தால் ஒட்டிக் கொள்ளும்! அவ்வப்போது அலம்பி வைத்தால் பசைத் திறன் ஓராண்டுக்கு நீடிக்கும். மேல் பட்டை காரணமாகப் பலருக்கு வியர்த்து விடுகிறது; சிலருக்கு அலர்ஜி உண்டாகிறது. இவற்றைத் தவிர்க்கலாம் என்பதுடன், வெறும் காலுடன் நடப்பது போன்ற பிரமையை ஏற்படுத்தலாம். இது புதிய ஃபாஷனாகவும் - குறிப்பாகக் கடற்கரையில் கருதப்படுகிறது.

- நியூஸ்வீக்



பாடசாலை வித்யார்த்திகளின் ஒரு பகுதி

மஹான் ஸ்ரீ கோவிந்த தீக்ஷிதரவர்களால், 1542-இல் ஸ்தாபிக்கப்பட்டு, தொடர்ந்து நடந்து வரும் வேத பாடசாலையை ஸமிதியானது தாய் போல் இயங்கிக் காப்பாற்றி வருகிறது. தற்போது பாடசாலையில் 90 மாணாக்கர்கள் வேதாத்யயனம் செய்து வருகின்றனர். அவர்களுக்கு ஒரு நாள் உணவளிக்க, உணவு வகையினை அனுசரித்து சுமார், முறையே ரூ.300/- அல்லது 500/- ஆகிறது. இந்தத் தர்மம் நிரந்தரமாய் நடக்க ரூ. 3000/- அல்லது 5000/- மூலதனம் ஏற்படுத்தியோ, அவ்வப்போது தொகை அனுப்பியோ, ஒரு குறிப்பிட்ட தினத்தில் உணவளிக்கும் கைங்கர்யத்தில் பங்கு கொள்ளக் கோருகிறோம். நன்கொடை அனுப்பவேண்டிய பெயரும் முகவரியும்:

அத்வைத வித்யாசார்யா மஹாராஜா ஸாஹேப் ஸ்ரீ கோவிந்த தீக்ஷிதர் புண்ய ஸ்மரண ஸமிதி,
D-76, மூன்றாவது கிராஸ் தெரு, ஸ்ரீநகர் காலனி,
கும்பகோணம்—612 001.

****** இந்த நன்கொடைக்கு 80-G விதியின்படி வருமான வரிவிலக்கு உண்டு *****

வேத வைதிக நூல்கள் (விலை தபால் செலவு உட்பட)

I 1. ரிக்வேத ஸம்ஹிதா - நாகராக்ஷரம் - 10 மண்டலங்கள் - ரூ. 265/-
2. யஜுர்வேத ஸம்ஹிதா - நாகராக்ஷரம் - 7 காண்டங்கள் - ரூ. 165/-
3. ஸாமவேத ஸம்ஹிதா - கிரந்தாக்ஷரம் - 2 பாகங்கள் (முதல் பாகம் - ரூ. 185/-, இரண்டாம் பாகம் - ரூ. 210/-)
4. ஸாமவேத அஷ்டப்ராம்மணம் - நாகராக்ஷரம் - 3 பாகங்கள் (முதல் பாகம் - ரூ. 210/- இரண்டாம் பாகம் - ரூ. 110/- மூன்றாம் பாகம் - ரூ. 85/-
5. ஸாமவேத பூர்வாபர ப்ரயோகம் - கிரந்தாக்ஷரம் - ரூ. 80/-

II கிரந்தாக்ஷரத்தில் காரிகையுடன் பிரம்மஸ்ரீ முத்துச்ரௌதிகளால் பதிப்பிக்கப்பட்ட கிரந்தங்களின் மறுபதிப்புகள்

1. போதாயன பூர்வாபர ப்ரயோகம் - ரூ. 95/-
2. ஆபஸ்தம்ப பூர்வாபர ப்ரயோகம் - ரூ. 90/-
3. ஆபஸ்தம்ப ச்ராத்த ப்ரயோகம் - ரூ. 55/-
4. ஆச்வலாயன பூர்வாபர ப்ரயோகம் - ரூ. 85/-
5. ஆச்வலாயன ச்ராத்த ப்ரயோகம் - ரூ. 50/-
6. கல்ப சிந்தாமணி - ரூ. 55/-

III 1. மனாசேச்லோக - ராமமந்த்ராசே ச்லோக - ரூ. 25/- (மராத்தி மூலம் தமிழ் பதவுரை)
2. ஸ்ரீ ராதாக்ருஷ்ண பூஜாவிதானம் - ரூ. 25/- (ஸம்ஸ்க்ருதமூலம் - தமிழ் பதவுரை)
3. நளோதந்தம் - நைஷதகாவ்யத்தின் சுருக்கம் - ரூ. 25/- (ஸம்ஸ்க்ருத மூலம் - ஆங்கில பதவுரை)
4. வடமொழிச் சொற்கடல் - ஸம்ஸ்க்ருதம் - தமிழ் Dictionary ரூ. 80/-
5. வேதபாட வழிமுறை (syllabus) ரிக், யஜுர், ஸாம - ரூ. 25/-

V.P.P. யில் அனுப்புவதில்லை. முழுத்தொகையையும் M.O. (or) Draft மூலம் கீழே குறிப்பிட்டுள்ள முகவரிக்கு அனுப்பவும். செக் மூலம் அனுப்ப வேண்டாம்.

பிரஸிடெண்ட் & டிரஷரர் - A.V.M.S.G.D.P.S. ஸமிதி, D-76, மூன்றாவது கிராஸ் தெரு, ஸ்ரீநகர்காலனி, கும்பகோணம் - 612 001.

நேரில் வாங்க விரும்புவோர் கீழ்க்கண்ட விலாசத்தில் பெற்றுக் கொள்ளவும் ராஜா வேத காவ்ய பாடசாலை, யாகசாலை தெரு (சக்கரை படித்துறை அருகில்) கும்பகோணம் - 612 001.

இனியாவுக்கு ஒரு பொம்மை

அன்புள்ள டாடிக்கு,

இனியா எழுதும் லெட்டர். மம்மி நான் நலம். நீ நலமா? நீ அடுத்த மாதம் இங்கு வரப் போவதாக மம்மி சொன்னது. நீ வரும் போது எனக்குக் கண் சிமிட்டிப் பாட்டுப் பாடும் பொம்மை வாங்கி வர வேண்டும். உன்னைப் பார்க்க ஆசையாக உள்ளேன். மம்மி அடிக்கடி அழுகிறது. நீ சீக்கிரம் வா. மம்மி அழுவதைப் பார்த்தால் எனக்கும் அழுகை வருகிறது. பொம்மை அவசியம் வாங்கி வா.

இப்படிக்கு,

உன் அன்பு இனியா.

கோணல்மாணலான ஒழுங்கில்லாத எழுத்து என்றாலும் பிழையில்லாமல் இருந்தது. பெரிது பெரிதாக எழுதியிருந்தாள். ஜானகி சொல்ல எழுதியிருக்கிறாள் போலும்! கடிதத்தின் ஓரத்தில் கிறுக்கலாகப் பொம்மை படம்.

கடிதத்தைப் படித்து முடித்ததும் என் நெஞ்சை அடைத்தது. கண்கள் கலங்கின.

மூன்று வருடங்கள். மூன்று யுகங்கள். நான் சௌதிக்குக் கிளம்பிய போது இனியாவுக்கு ஒரு வயது. தத்தித் தத்தி நடக்க ஆரம்பித்திருந்தாள். 'ப்ப்பா...' என்று மழலையால் என்னைக் கிறங்க அடிக்கத் தொடங்கியிருந்தாள். பிரிந்து வர எனக்கு மனமே இல்லை. ஆனாலும் போய்த்தான் ஆக வேண்டும். ஐந்து வருட கடும் முயற்சிக்குப் பின் விசா கிடைத்திருக்கிறது. மூன்று வருடங்கள் பல்லைக் கடித்துக் கொண்டு கஷ்டப்பட்டால் எதிர்காலம் நன்றாக இருக்கும் என்பதாலேயே ஜானகியை, இனியாவை விட்டுப் பிரிந்து, நெஞ்சு பொங்கும் துயரத்துடன் சௌதிக்கு விமானம் ஏறினேன். விமானத்தில் அழுது கொண்டே வந்தேன்.

எதற்காகப் பல்லாயிரம் மைல்கள் தள்ளி வந்தேனோ... அது நிறைவேறி விட்டது. ஒரு ஷாப்பில் சேல்ஸ்மேன் உத்தியோகம்தான் என்றாலும் சம்பாத்தியத்துக்குக் குறைவில்லை. இரண்டு லட்சங்கள் அனுப்பியிருக்கிறேன். இப்போது கையில் ஒரு லட்சம் இருக்கிறது. போதும். இது போதும். பத்து ஏக்கர் நிலத்திலிருந்து கிடைக்கும் வருமானமே, குடும்பம் நிர்வகிக்கப் போதும். இது சேமிப்பு. வளமையான எதிர்காலத்திற்கு. இனியாக் குட்டியின் படிப்புக்கு. திருமணத்திற்கு.

இன்னும் முப்பதே நாட்கள். அடுத்த பத்தாம் தேதி இந்தியா செல்ல விமானம் ஏறியிருப்பேன். பதின்மூன்றாம் தேதி... இனியாக் குட்டி... அப்பா வாங்கி வரும் பொம்மையைப் பார்த்துப் பூரித்து நிற்பதைச் சந்தோஷமாகப் பார்ப்பேன்.

விளையாடத் தெரியாத வயதிலேயே இனியாவுக்கு நான் வாங்கித் தந்த விளையாட்டுப் பொம்மைகள் ஏராளம். அவ்வளவு பொம்மைகள். விதம் விதமாக, ஒரு பீரோ நிறைய. காரணம் என் சிறு வயதில் எனக்கு ஏற்பட்ட ஏமாற்றம். வாயில் வைத்து ஊதினால் பலூன் பெரிதாகிப் பிறகு வாயிலிருந்து எடுத்ததும் 'கீ' என்று சத்தம் போடுமே.. அந்த ஒரு ரூபாய் ஊதலை வாங்குவதற்கு நான் சாப்பிடாமல் இருந்திருக்கிறேன்.

காரணம்... ஒரு ரூபாய் கொடுத்துப் பிள்ளைக்குப் பொம்மை வாங்கிக் கொடுக்க முடியாத அளவுக்கு ஏழைமை இல்லை. சின்னக் குழந்தையின் மனநிலை புரியாதது. 'நாம் இதையெல்லாம் வைத்தா விளையாடினோம். இவனுக்கு எதற்கு இது?' என்று அப்பா நினைத்ததுதான். குழந்தையோடு கலந்து அதன் மகிழ்ச்சியை... ஆனந்தத்தைப் பகிர்ந்து கொள்ளும் பக்குவம் எல்லாத் தகப்பனுக்கும் வந்து விடாது. ஒரு ரூபாய் ஊதலால் கிடைக்கும் சுகம் அனைவருக்கும் புரிந்து விடாது.

கேட்பதை, தனது சக்திக்கு உட்பட்டதைக் குழந்தைகளுக்கு வாங்கிக் கொடுத்து, அதைப் பார்த்துப் பூரித்துப் போகும் குழந்தையை ஆனந்தம் பொங்கப் பார்க்கும் உணர்வு ஒரு சில பெற்றோருக்குத்தான் உண்டு.

எனக்கு அது உண்டு.

சௌதிக்கு வந்த ஆறு மாதத்திலேயே பேட்டரி ஹெலிகாப்டர்... இன்றும் சில விளையாட்டுச் சாமான்களை வாங்கி ஊருக்குச் செல்பவர்களிடம் கொடுத்து அனுப்பினேன்.

திருவாரூர் பாபு

புதிதாக அறிமுகமாகி யிருக்கும் பொம்மை இது. ஏதோ சினிமாவில் காட்டியதை இனியா பார்த்துக் கேட்க, ஜானகி முன்பே எனக்குக் கடிதம் எழுதியிருந்தாள். வாங்கி அனுப்பலாம் என்றுதான் நினைத்தேன். அனுப்பினால் ஒழுங்காகப் போய்ச் சேருமோ என்கிற சந்தேகத்தில், அதுதான் சில மாதங்களில் திரும்பப் போகிறோமே என்பதால் நேரில் கொண்டு செல்லலாம் என்று இருந்து விட்டேன்.

இனியாக் குட்டி....... பொம்மையோடு வருகிறேன்!



பொம்மை வாங்கப் புறப்பட்டேன்.

'யுவர் ஷாப்பி' ரியாத்தின் மிகப் பெரிய ஷாப்பிங் சென்டர். பன்னிரெண்டு மாடிக் கட்டடம். உள்ளே நுழைந்ததுமே ஏதோ வேறு உலகத்துக்கு வந்து விட்ட பிரமை.

பொம்மை பகுதிக்கு வந்தேன். திரும்பிய பக்கமெல்லாம் பொம்மைகள். எலெக்ட்ரானிக் உந்துதலில் விசித்திரங்கள் செய்தன. இனியாக் குட்டியை அழைத்து வந்து காட்டினால் எப்படியிருக்குமென்று அவளின் சந்தோஷ முகத்தை ஓரிரு விநாடிகள் கற்பனை செய்து மகிழ்ந்தேன்.

பொம்மை விவரத்தைச் சொல்ல... எடுத்துத் தந்தாள் அந்தப் பெண்.

இனியாக் குட்டியின் சந்தோஷத்திற்காக நம் ஊர் விலையில் நாலாயிரம் கொடுத்துப் பொம்மையை வாங்கிக் கொண்டு மகிழ்ச்சியாக விமானம் ஏறினேன்.

கிட்டத்தட்ட ஐம்பதாயிரத்துக்குப் பொருட்கள் இருந்தபோதிலும் இந்த பொம்மை மட்டுமே எனக்கு அதிமுக்கியமாகப்பட்டது. அதன் மதிப்பின் பொருட்டு அல்ல... அதைப் பார்த்ததும் இனியாக் குட்டி அடையப் போகிற சந்தோஷம் குறித்து.

பம்பாயில் நள்ளிரவில் இறங்கினேன். கஸ்டம்ஸில் கொண்டு வந்திருந்த பொருட்களின் பட்டியலைக் கொடுத்தேன். எல்லாவற்றையும் பிரித்துப் பார்த்தார்கள். இரண்டு டெக், நாலு டேப் ரிகார்டர்கள். ஒரு ஹோம் கம்ப்யூட்டர். புடைவைகள்.

பெட்டியைப் பிரித்துப் பொம்மையைப் பார்த்த அந்த அதிகாரி கண்களை விரித்து ''ப்யூட்டிஃபுல்!'' என்றார். சக அதிகாரியிடம் ஏதோ சொன்னார்.

பொம்மையை டேபிளில் வைத்துப் பட்டனை அழுத்த... பொம்மை மெலிதாகப் பாடியது. பாடலுக்கு ஏற்றாற்போல் கண்களை உருட்டிக் கையை ஆட்டியது.

''வொண்டர்ஃபுல்!'' என்றவர் தனியாக அழைத்துச் சென்று என்னிடம் கிசுகிசுப்பாகச் சொன்னார்.

''கிட்டத்தட்ட ஐம்பதாயிரத்துக்குப் பொருள்கள் கொண்டு வந்திருக்கீங்க... விதிப்படி லட்ச ரூபா டியூட்டி போடணும். நான் வெறும் பத்தாயிரம் மட்டும் போடறேன்.''

நான் மகிழ்ந்து போய், ''தாங்க் யூ ஸார்'' என்றேன். ஒரு கணிசமான தொகையைத் தனியாகக் கேட்பார்களோ என்று நான் நினைத்திருக்க அவர் சொன்னார் : ''இந்த பொம்மையை மட்டும் எனக்குக் கொடுத்திடுங்க. என் வீட்டில் டாட்டருக்கு வேணும்.''

எனக்குத் தூக்கி வாரிப் போட்டது. பட்டென்று சொன்னேன் : ''ஸாரி ஸார்.. அதை மட்டும் கேட்காதீங்க.. என்னோட குழந்தைக்கு வாங்கிட்டுப் போறேன்.. வேற என்ன வேணும்னாலும் தர்றேன். டெக் தரவா... ஹோம் கம்ப்யூட்டர் வேணுமா?''

''நோ! உன் டெக்கும் கம்ப்யூட்டரும் யாருக்கய்யா வேணும்... பொம்மையைக் கொடு.''

நான் கண்டிப்பாக மறுத்தேன்.

''முடியாது ஸார்... நீங்க எனக்கு எந்த விதச் சலுகையும் காட்ட வேணாம். விதிப்படி எவ்வளவு டியூட்டி போடணுமோ... போடுங்க கட்டறேன்...''

பட்டென்று அந்த அதிகாரி முகம் சூம்பிப் போனது. ஓர் ஏமாற்றம் முகத்தில் அப்பட்டமாய்த் தெரிந்தது. சக அதிகாரியைக் கலந்தார்.

பட்பட் என்று எலக்ட்ரானிக் மெஷினைத் தட்டிப் பேப்பரைக் கிழித்துக் கொடுத்தார்கள். அதைப் பார்த்த எனக்கு தூக்கி வாரிப் போட்டது. பொம்மைக்கு மட்டும் எட்டாயிரம் டியூட்டி போட்டிருந்தார்கள்.

நான் அதிர்ந்து போய், ''ஸார்... இவ்வளவு...''

''எலக்ட்ரானிக் ஐட்டம்... டூ ஹண்ட்ரட் பர்சன்டேஜ்''

''வேணாம்... நீங்களே வச்சிக்குங்க'' என்று பொம்மையை நான் கொடுத்து விடுவேன் என்று அவர்கள் நினைத்திருக்க, ''ஓ.கே. கட்டறேன்'' என்றதும் அவர்கள் முகத்தில் ஆச்சரியம் ஓடியது.

நான் அலட்சியமாக கௌண்டரை நோக்கிச் செல்ல.. ஓர் அதிகாரி என்னை அழைத்தார். நான் திரும்பினேன். இப்போது அவரது முகத்தில் ஓர் அதிகார தோரணை இருந்தது.

''கொஞ்சம் உள்ளே வருகிறீர்களா...?'' என்றவர் பொம்மையை எடுத்துக் கொண்டு சோதனை அறைக்குள் நுழைய, நானும் 'எதற்கு?' என்று ஆச்சரியமாகப் பின்னால் சென்றேன்.

கதவைச் சாத்தி விட்டு அந்த அதிகாரி சொன்னார் : ''பொம்மைக்கு உள்ளே வைரம் இருப்பதாக நாங்கள் சந்தேகப்படறோம்.''

நான் அதிர்ந்து போனேன்.

''ஸார்.. இது அபாண்டம்.''

''சோதனை செய்தால் தெரிகிறது அபாண்டமா... உண்மையா என்று!''

பொம்மையை ஸ்கேன் செய்து பார்க்கப் போகிறார் என்று நினைத்திருக்க... அவரோ பொம்மையை இப்படியும், அப்படியும் திருப்பிப் பார்த்து விட்டு, பொம்மையை மேஜை மேல் படுக்க வைத்து வயிற்றில் வேகமாகத் தட்ட... பொம்மை இரண்டாகப் பிளந்தது.


என் இதயம் வெடித்து விடும் போல இருந்தது. உடல் நடுங்க ஆரம்பித்தது. அந்த அதிகாரியை ஓங்கி அறைய வேண்டும் என்று கைகள் துடித்ததைக் கஷ்டப்பட்டு அடக்கினேன். பிரச்னையாகி விடும். நான் உறைந்து போய்ப் பார்த்துக் கொண்டிருக்கும்போதே.. பொம்மையை பீஸ் பீஸாகக் கழற்றினார்கள்.

பிறகு அலட்சியமாக ''ஓ! ஸாரி... உள்ள ஒண்ணுமில்ல.. நீங்க போகலாம்...'' என்றார்.

நான் துண்டு துண்டாகக் கிடந்த பொம்மையைச் சேகரித்துக் கொண்டு அறையை விட்டு வெளியே வந்தேன்.

பொம்மையை எதிர்பார்த்து ஆவலாகக் காத்திருக்கும் இனியாக்குட்டியின் முகம் நினைவில் ஓடியது. அவள் எழுதியிருந்த கடித வரிகள் உள்ளுக்குள் ஓடின.

நொறுங்கிப் போன இதயத்துடன் சூட்கேஸைத் தூக்கிக் கொண்டு லவுஞ்சில் கிடந்த நாற்காலியில் அமர்ந்து சப்தமில்லாமல் விசும்பினேன்.



''ஞாபக மறதிக்கு அளவே இல்லாமல் போயிடுச்சு போங்க.''

''ஏன் சார்... என்னாச்சு...?''

''பையில பணம் இருந்தது கூட ஞாபகமில்லாமல் ஹோட்டல்ல மாவாட்டிட்டு வந்திருக்கேன்னா பார்த்துக்கோங்க...!''

- சீர்காழி வி. ரேவதி



''பொதுக் கூட்டத்தில் மந்திரி பேசிக் கொண்டிருக்கும்போதே ஏன் 'மைக்'கை 'ஆஃப்' பண்ணிட்டாங்க?''

'' 'மந்திரி பதவி பறிபோய் விட்டதாக இப்போதான் 'போன்' வந்ததாம்!''

- எஸ். ப்ரியா


முதல்வருடன் மோதிய எம்.எல்.ஏ.

ரேஷன் கார்டுக்கும், சர்ட்டிபிகேட்டுக்கும், பள்ளி - கல்லூரி அட்மிஷனுக்குமாக, பொது மக்கள் மொய்த்துக் கொண்டிருந்த காலை வேளையில், அண்ணாநகர் தொகுதி எம். எல். ஏ. செல்லக்குமாரைச் சந்தித்தோம்.

நிமிஷத்துக்கு ஒரு போன் கால். ('டாக்டர் பேசுகிறேன்' என்றுதான் சொல்லுகிறார், இந்த எம். பி. பி. எஸ். படித்த இளைஞர்.)

மாநில இளைஞர் காங்கிரஸ் தலைவராக இருந்து வந்த செல்லக்குமாருக்கு, அவரது சொந்த ஊரான நாகர்கோயிலில் ஸீட் கொடுக்காமல், சென்னை அண்ணா நகரில் மூப்பனார் போட்டியிடச் சொன்னாராம்.

மேத்தா நகர் மூங்கில் பாலத்தைப் பற்றிப் பேச்சு எடுத்ததுமே, ''என் சட்டசபை முதல் பேச்சிலேயே இதைத்தான் குறிப்பாக எடுத்துப் பேசினேன். பணம் ஒதுக்கியிருக்கிறார்கள், பாலம் கட்டப் போகிறார்கள் என்பதெல்லாம் ஆதாரமற்ற செய்தி. எப்படி அடிக்கல் நாட்டினார்கள் என்பதே புரியாத புதிராக இருக்கிறது. அ. இ. அ. தி. மு. க. ஆட்சியிலும், பிறகு தி. மு. க. ஆட்சியிலும் இரண்டு முறை அடிக்கல் நாட்டினார்கள் என்றும் கேள்விப்பட்டேன். ஒவ்வொரு தேர்தலிலும் அவர்கள் பாலத்தைக் கட்டித் தருவதாக உறுதி அளித்ததாகவும் சொன்னார்கள். இந்த பிரச்னை பற்றி நான் சட்டசபையில் முதலில் பேசிய போது, சி. எம். கவனமாகக் கேட்டுக் கொண்டிருந்தார்.



''எனக்கு வரும் புகார்கள் பெரும்பாலும் சிவிக் அமெனிடீஸ் குறைபாடுகள்தாம். கார்ப்பரேஷன் தேர்தல் நடத்தாமல், கவுன்சிலர்கள் தேர்ந்தெடுக்கப்படாமல் இருப்பதால் இவற்றை எல்லாம் இப்போது எம். எல். ஏ.க்கள்தான் கவனிக்க வேண்டியிருக்கிறது. தண்ணீர் வராமை, விளக்கு எரியாமல் இருப்பது, சாக்கடை அடைப்பு என்று தினசரி ஏராளமான குறைகள். சாலைகள் சுத்தமாகப் பராமரிக்கப் படுவதில்லை என்று ஒரு மணி நேரத்துக்குச் சட்டசபையில் முதல்வருடன் விவாதித்தேன். எட்டு அமைச்சர்கள் என் பேச்சில் அப்போது குறுக்கிட்டுக் குறுக்கிட்டுப் பேசினார்கள். 'கடற்கரைச் சாலை சுத்தமாக இல்லையா? மவுண்ட் ரோடு சுத்தமாக இல்லையா?' என்றெல்லாம் சி. எம். பதிலளித்தார். ஆனால் அது மட்டும் போதுமா?'' என்கிறார் செல்லக்குமார்.

கிட்டத்தட்ட எல்லா ஞாயிற்றுக் கிழமைகளிலும், தொகுதியில் ஏதாவது ஒரு பகுதியைப் பார்வையிடக் கிளம்பி விடுகிறார்.

''எல்லா திங்கட் கிழமைகளிலும், டெய்லர்ஸ் ரோடில் இருக்கும் கார்ப்பரேஷன் அலுவலகத்தில் மாலை நாலரை மணிக்கு நிச்சயம் இருப்பேன்!'' என்கிறார் இந்த எம். எல். ஏ.

''தொகுதியில் பயணம் செய்யும் போது, வீடு வீடாகச் சென்று குறை கேட்பதுண்டு. பல முறை அங்கேயே ஏதாவது ஒரு வீட்டில், அவர்கள் போடும் சாப்பாட்டையே சாப்பிட்டு விட்டுப் பயணத்தைத் தொடருவதுண்டு'' என்கிறார் இந்தப் 'பந்தா' இல்லாத எம். எல். ஏ.

புறம்போக்கு நிலத்தில் குடிசை போட்டுக் கொண்டு, பிறகு பட்டாவும் பெற்ற பின், மின்சார இணைப்புக்கு மனுச் செய்து பணமும் செலுத்திய பிறகு, எம். எம். டி. ஏ. வின் பிளான் அனுமதியையும் கொண்டு வந்தால் மட்டுமே, மின் இணைப்பு என்றார்களாம். நூற்றுக்கு மேற்பட்ட இக் குடிசைவாசிகளை அப்படியே அழைத்துக் கொண்டு, மின்சார வாரியத் தலைவரைச் சந்தித்தாராம். ''குடிசைக்கு எப்படிங்க பிளான் போட்டு சாங்ஷன் வாங்க முடியும்?'' என்று இவர் கேட்பதில் நியாயம் இருக்கிறது.

கார்ப்பரேஷன் ஒத்துழைப்புடன், ரோடு இல்லாத பல இடங்களுக்கு, குறிப்பாகப் பல ஆண்டுகளாக ரோடு வசதி இல்லாத குடிசைப் பகுதிகளுக்கு, ரோடு அமைத்துக் கொடுத்திருக்கிறார்.

பிரம்மசாரியான டாக்டர் செல்லக்குமார், காலை ஆறு மணிக்குத் தம் பணிகளைத் துவங்கி விட்டால், இரவு பன்னிரண்டு மணிக்கு மேல்தான் படுக்கச் செல்கிறார். ''ஆனால், முடிந்தவரை நம்மால் பலருக்கு உதவ முடிகிறது என்ற ஆத்ம திருப்தி இருக்கிறது!'' என்கிறார்.

– எஸ். வி. என்

ஆட்சியாளர்களே, கொஞ்சம் அயனாவரத்தையும் கவனியுங்கள்!

கூட்டுக் கட்டாக ஃபைல்கள்.

ஒன்றில் குடிநீர்-வடிகால் வாரியத்துக்கு எழுதிய கடிதங்கள்;

இன்னொன்றில் மின்வாரியத்துக்கு.

மற்றொன்றில் மாநகராட்சிக்கு.

அடுத்ததில் மாவட்ட ஆட்சியருக்கு.

அலுக்காமல், சலிக்காமல், போராட்டம் நடத்தி அமைதியாகச் செயல்படும் அயன்புரம் பொதுநலச் சங்கத்தில் சுமார் 369 உறுப்பினர்கள். மிகக் கட்டுக் கோப்பான அமைப்பு.

''இந்தியாவுக்கே பெருமை சேர்க்கும் ஐ.சி.எஃப்; இருதய அறுவைச் சிகிச்சையில் புகழ்பெற்று விளங்கும் ரெயில்வே மருத்துவமனை; 'ஆவின்' பால் துணைப் பொருட்கள் தயாரிப்பு நிலையம் என்று எத்தனையோ சிறப்புகள் இருக்கும், எங்கள் அயனாவரத்தின் அத்தியாவசியத் தேவைகளை ஆட்சியாளர் உணருவதில்லையே!'' என்று அங்கலாய்த்தார் செயலர் ராமதாஸ்.

பரசுராம ஈசுவரன் கோவில் மேற்கு மாடத் தெருவிலுள்ள இவர்களது சங்கத்தில், அத்தனை கோப்புகளையும் பொறுமையோடு பார்த்தோம்.

''நியூ ஆவடி ரோடு பகுதியிலிருந்து பைபாஸ் இணைப்புக் கொடுக்கலாம். அல்லது 87ல், இருபத்து மூன்று லட்சத்துக்குப் போடப்பட்ட ஃபீடர் மெயின் திட்டத்தை அமல் செய்தால் கூடப் போதும். இந்தப் பகுதியில் உள்ள அத்தனை குடும்பங்களுக்கும் சரி சமமாகத் தண்ணீர் கிடைக்கும்!'' என்கிறார் ராமதாஸ்.

''பொது மக்கள் குறை தீர்க்கும் குழுக்கள் முன்பு கூடி, அதில் மின்வாரியம், மாநகராட்சி, மெட்ரோ வாட்டர் அதிகாரிகள் பங்குகொண்டனர். இப்போது இந்த கமிட்டிகளே கூடுவதில்லை! கேட்டாலும் ஆட்கள் போதவில்லை என்கிறார்கள். சாக்கடைத் தண்ணீர் அடைத்துக் கொண்டு நிற்கிறதே என்றாலும் இதுதான் எங்களுக்குப்

தாகூர் நகர் நுழைவு...





அனைவரும் பொதுநலச் சங்கத்தினர்

பதிலாகக் கிடைக்கிறது!'' என்று சொல்கிறார்கள் இச் சங்கத்தினர்.

''மின்கட்டணம் செலுத்தவும், மின் தடைகளைக் களையவும் முன்பு கொன்னூர் நெடுஞ்சாலையில் ஓர் அலுவலகம் இருந்தது. இப்போது அது வில்லிவாக்கத்துக்கு மாற்றப்பட்டு விட்டது! ஃப்யூஸ் போய் விட்டால், திண்டாட்டம்தான். 'போன் செய்து சொல்லுங்களேன்?' என்கிறார்கள். எத்தனை பேரால் போன் செய்ய முடியும்?'' என்கிறார் ராமதாஸ். ''ஒரு ஜே. இ. அல்லது ஏ. இ. இங்கே இருக்கக் கூடாதா?'' என்று கேட்கிறார்கள்.

சங்கத்தைச் சேர்ந்த கண்ணபிரானும், கண்ணப்பனும், ராமனும், குருசாமியும், ராமதாசுடன் நம்மோடு பல இடங்களுக்கும் வந்து குறைகளைக் கட்டிக்காட்டினர்.

மழைத் தண்ணீர் வெளியேற அமைக்கப்படும் ஸ்டார்ம் வாட்டர் டிரெயினேஜ் மாநகராட்சியின் கீழும், வடிகால்கள் எல்லாம் மெட்ரோ வாட்டர் அமைப்பின் கீழும் இயங்குகின்றன. இருவருக்கும் இடையே ஒத்துழைப்பே கிடையாது. அதனால் இருவருமே கவனிப்பதில்லையாம்!

தெரு விளக்குகள்?

''எழுபத்தைந்து சதவிகிதம் எரியாது!''

ஆதி ஆந்திரா குடியிருப்புக்குப் போன போது, ''ரொம்ப நாள் சொல்லிச் சொல்லி ஒரு கழிப்பறை மட்டும் கட்டிக் கொடுத்தார்கள். ஆனால் அதில் தண்ணீர் வசதியே கிடையாது! என்ன பிரயோசனம்?''

சதர்ன் ரெயில்வே காலனிக்கு எதிரேயே இருக்கும் தாகூர் நகரில், மூன்றாவது தெருவுக்குள் நுழைகையிலேயே தேங்கிக் கிடக்கும் பிரம்மாண்டமான சாக்கடைதான் நம்மை வரவேற்கிறது.

''முழுக்க முழுக்க தாழ்த்தப்பட்ட மக்கள் வசிக்கும் பகுதி. ஏதோ ஒன்றிரண்டு குடும்பங்களில் இருந்துதான் ரெயில்வே வேலைக்குச் செல்கிறார்கள். மற்ற வீடுகளில் எல்லாம் சாதாரணத் தொழிலாளர்கள்தாம்'' என்றார் சுப்பிரமணியம் என்பவர்.

''டிரெயினேஜ் வசதி இல்லை என்பது ஒருபுறம் இருக்க, குடிநீரில் டிரெயினேஜ் தண்ணீரும் கலந்து வருகிறது'' என்று குறைப்பட்டார் இன்னொருவர்.

ரயில்வே காலனி குடியிருப்பு!



''மந்திரி, எம். எல். ஏ., அதிகாரிகள் எல்லாரும் வந்தும், ஒண்ணும் நடக்கல்லே. அப்படியேதான் இருக்குது!'' என்றார் சுப்பிரமணியம்.

''175 ஐ. ஏ. எஸ். ஆபீசர்களுக்கு மேல் குடியிருக்கும் அண்ணாநகரைக் கவனிக்கவே எங்களுக்கு நேரம் இருப்பதில்லை!'' என்றார்களாம், மெட்ரோ வாட்டர் தலைமை அலுவலகத்தில் மணிக்கணக்காகக் காத்திருந்த பிறகு!

தென்னக ரெயில்வே குடியிருப்பு களுக்குப் போன போது, பல வீடுகளின் நிலைமை பரிதாபகரமாக இருந்தது. ரெயில்வே நிர்வாகம் கூடவா இப்படி இருக்கும்?

''1934ல் கட்டியது. இன்ஸ்பெக்டர் அஃப் ஓர்க்ஸ் இருக்கிறார். அவர் கவனிப்பதே இல்லை. கேட்டால் மேசன் இல்லை. சிமெண்ட் இல்லை என்கிறார்கள். பாருங்கள், எத்தனை வீடுகள் இடிந்து கிடக்கின்றன. இந்த லட்சணத்தில் புதிய வீடுகள் சில கட்ட ஆரம்பித்திருக்கிறார்கள்!'' என்றார் டீக்காராம். இவர் பழம்பெரும் ரெயில்வே ஊழியர் தலைவர்.

''மின்சாரக் கோளாறு நிறைய இருக்கிறது. பல வீடுகளில் விளக்கே எரியாது. ஆபீசர்கள் வீட்டில் மட்டும் 24 மணிநேரமும் விளக்கு எரிவது எப்படி?'' என்று கேட்கிறார். ''விளக்கு இல்லாததால் திருட்டும் போகிறது!''

கே. சந்தானம் ரெயில்வே அமைச்சராக இருந்த போது இங்கே வந்திருக்கிறாராம். இப்போதைய அமைச்சர் ஜாஃபர் ஷெரீஃப்? ''அவரெங்கே இங்கே எல்லாம் வரப் போகிறார்?''

அயனாவரம் மக்களும் வரி செலுத்துகிற மக்கள்தாம். குடிநீருக்கும், வடிகால் விஷயத்திலும், மின்சாரப் பராமரிப்பிலும் அவர்களை மட்டும் அல்லாட வைப்பது நல்லதுதானா?

– எஸ். வி. என்.

மத்திய சென்னை தொடர்பான
புகைப்படங்கள் : ஆர். பாலாஜி

அருள்வாக்கு



ஒருத்தன் பீரோ நிறையத் துணி வைத்திருப்பதாலோ, கண்ட வேளைகளில் ஹோட்டலுக்குப் போய்க் கண்டதைத் தின்பதாலோ, வீட்டை ஏர்-கண்டிஷன் செய்து கொண்டு விட்டதாலோ, அவனுடைய வாழ்க்கை தரமாகி விடாது. மனம் நிறைந்திருந்தால், அதுவே வாழ்க்கைத் தர உயர்வாகும்.

மனநிறைவு வெளி வஸ்துக்களால் ஒருநாளும் கிடைக்காது. வெளி வஸ்துக்களைச் சேர்க்கச் சேர்க்க மேலும் மேலும் சௌகரியத்துக்கு ஆசைப்பட்டுக் கொண்டு, புதுப்புது வஸ்துக்களைக் கண்டுபிடித்து வாங்கிக் கொண்டேதான் இருப்போம். நாம் இப் படி இருப்பதைப் பார்த்து, வசதியில் லாதவர்களுக்கும் இதே ஆசை வெறியை உண்டாக்கி விடுகிறோம். இதனால் போட்டி, சண்டை எல்லாம் உண்டாகின்றன. வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதாக ஏக முஸ்தீபுடன் இறங்கிய பின்தான் சகலருக்கும் எப்போது பார்த்தாலும் எதையாவது வாங்கிக் கொண்டேயிருக்க வேண்டியிருக்கிறது. நமக்கு அது வேண்டும், இது வேண்டும் என்று சதா அரிப்பு இருக்கிற வரையில், நாம் தரித்திரர்கள்தான். இப்போது கோடீஸ்வரனிலிருந்து எல்லோருக்கும் இந்தக் குறை இருப்பதால், எல்லோருமே தரித்திரர்களாகத்தான் ஆகியிருக்கிறோம். பணம் இல்லா விட்டால் தான் தரித்திரம் என்பதில்லை. பணம் அதிகமாகி விட்டதாலேயே, எல்லோரும் தரித்திரர்களாகியிருக்கிறோம்.

– ஜகத்குரு காஞ்சி காமகோடி ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி சங்கராச்சாரிய சுவாமிகள்.

இன்லண்ட் லெட்டர் சிறுகதை



செகரடேரியட் விஷயம்!

காலை மணி பத்து. வினோத் எக்ஸ்போர்ட்ஸ் சுறுசுறுப்பாக இயங்கத் துவங்கியது.

''எஸ்... ரீஜனல் மானேஜர் ஸ்பீக்கிங்.''

''ஹலோ... நான்தான் எம். டி. பேசறேன்...'' மறுமுனையிலிருந்து கேட்டது.

''குட்மார்னிங் சார்...''

''எஸ்... குட்மார்னிங்.. இன்னிக்கு ஈவினிங் ப்ளைட்டிலே டில்லி போறேன்! அதுக்கு வேண்டிய எல்லா ரிகார்ட்டையும் ரெடி பண்ணி வையுங்க... அப்புறம் முக்கியமா டெல்லி செக்ரடேரியட்டிலே கேட்ட விஷயம்...! என்ன ஆச்சு? அதையும் ரெடி பண்ணிக் கையோட எடுத்துக்கிட்டுப் போவணும்!''

''சார்... அது வந்து இன்னும் ரெடியாகலை...''

''என்னய்யா... இது... நீங்க என்னதான் செய்யறீங்க? போன வாரமே சொன்னேனே.. இன்னுமுமா முடியலை...?''

''சார் அது விஷயமா காஞ்சிபுரம் பிராஞ்ச் மானேஜர்கிட்டே சொல்லியிருக்கேன். இன்னமும் அவர்கிட்டேயிருந்து தகவல் இல்லை...''

''என்ன செய்வீங்களோ... ஏது செய்வீங்களோ எனக்குத் தெரியாது! இன்னிக்கு மத்தியானம் மூணு மணிக்கெல்லாம் என் டேபிளுக்கு வந்தாகணும்... என்ன புரிஞ்சுதா...''

ரீஜனல் மானேஜர் பதறினார். ''சரி சார்... முயற்சி செய்யறேன்...''

டக்கென்று மறுமுனையில் ரிஸீவர் வைக்கப்பட்டது. முகத்தைத் துடைத்துக் கொண்ட ரீஜனல் மானேஜர், போன் எண்களைச் சுழற்றினார்.

''ஹலோ... காஞ்சிபுரம் பிராஞ்ச் மானேஜரா... நான்தான் ஆர். எம். பேசறேன்! போன வாரம் சொல்லியிருந்தேனே... டில்லி செக்ரடேரியட் சமாசாரம்! என்ன ஆச்சு?''

''சார்... அது இன்னும் ரெடியாகலை.. சீக்கிரம் அனுப்பி விடறேன்.''

''அப்படியெல்லாம் சொன்னால் போறாது! இன்னிக்குச் சாயங்கால ப்ளைட்டிலே எம்.டி. டில்லி போறார்! அதுக்குள்ளே அதை அவர் கையில் கொடுத்தாகணும்! எப்படியாவது உடனே ஸ்பெஷல் மெசஞ்சர் மூலமாகக் கொடுத்து அனுப்புக்கடுங்க...!''

''சார் இவ்வளவு அர்ஜென்டா கேட்டா எப்படி சார்? எனக்குக் கையும் ஓடலை... காலும் ஓடலை...''

''நோ... நோ... அதெல்லாம் வேண்டாம்! செக்ரடேரியட் விஷயம். அதனாலே உடனே ஏற்பாடு பண்ணுங்க... என்ன சரிதானே...''

''சரி சார்...''

மாலை மணி மூன்று. எம். டி. அறை. ஆர். எம். குட்டி போட்ட பூனையாக அங்கும் மிங்கும் ஓடிக் கொண்டிருந்தார்.

எம்.டி. ''என்ன ஆச்சு? இன்னும் ஒரு மணி நேரத்திலே நான் ஏர்போர்ட் கிளம்பணும்... காஞ்சிபுரத்திலிருந்து ஆள் வந்தானா?''

''சார் ஆள் கிளம்பிட்டானாம்... இன்னும் கொஞ்ச நேரத்திலே வந்திடுவான் சார்...'' சொல்லி முடிப்பதற்குள் வியர்க்க விறுவிறுக்கக் கையில் ஒரு பெரிய பார்சலுடன் ஒருவர் வேகமாக நுழைந்தார்.

''அப்பாடா... கவலை விட்டது... போன தடவை டில்லி போன போது டெபுடி செக்ரடரி அவர் சம்சாரத்துக்கு அசல் காஞ்சிபுரம் பட்டுப் புடைவைகள் வேணுமின்னு சொன்னார்! அது கொண்டு போகலைன்னு சொன்னா நம்ம காரியம் சீக்கிரம் முடியாதே...'' என்று சொல்லிக் கொண்டே எம். டி. ஏர்போர்ட் செல்ல ஆயத்தமானார்!

– ஏ. இராமசுப்பிரமணியன்

'சேர்ந்தாரைக் கொல்லி'

கோபம் -

இது ஒரு தாற்காலிகப் பைத்தியக்காரத்தனம். ஒருவகை மனோ வியாதி. ஆசையின் வளர்ப்பு மகன்.

கோபத்தை விட்டவர்கள், வென்றவர்கள், பூமிக்குச் சொர்க்கத்தை இழுத்து வரும் புண்ணியவான்கள்.

எப்போதும் கோபம் ஆசையை அடுத்தே வரும். இராமனைத் தொடர்ந்த இலக்ஷ்மணனை இராமானுஜன் என்றாற் போல, காமத்தைத் தொடரும் கோபத்தைக் காமானுஜன் என்பர் வடமொழியார். ஆசைகள் தடைப்படும் போது - அல்லது உடைபடும் போது கோபம் பிறக்கும்.

சூதாடி வாழ்வை இழந்த தருமருடன் வனவாசத்தில் வாதாடிப் பார்த்தாள் பாஞ்சாலி. ''உமக்குக் கோபமே வராதா? 'கொல்லுங்கள்' என்று ஆணையிட்டால் துரியனைப் பீமர் பிசைந்து விடுவார். கர்ணனை அர்ஜுனர் காணாமல் போனவர் பட்டியலில் சேர்ப்பார். ஐயா... கோபப்பட மாட்டீரா?'' என்றாள். தருமர் அமைதி காத்தார். க்ஷாத்திரம் என்ற கோபம்தான் க்ஷத்திரிய தர்மம் என்றும் தருமரின் சாந்தம் சந்தனத்தின் குளிர்ச்சி அல்ல; பிணத்தின் குளிர்ச்சி என்றும் ரோஷம் ஊட்டினாள். பயன் இல்லை. வாக்குத் தவறி வனவாசம் முடியும் முன் போர் தொடுக்க அவர் மறுத்தே விட்டார். நூற்றுக்கணக்கான தருமங்களை விட ஆயிரக்கணக்கான யாகங்களை விட பொறுமை மேலானது என்று அமைதி காத்தார். உண்மைதான். பொறுமை இல்லை என்றால் வாழ்க்கையில் எதையுமே சாதிக்க முடியாது.

குட்டிக் குரங்கு ஒன்று தோட்டம் போட்டது. எதுவுமே விளையவில்லை. தன்னைப் பார்க்க வந்த முதிய குரங்கிடம் இந்த வேதனையைச் சொல்லி அழுதது. ''விதை போட்டால் போதுமா? தண்ணீர் ஊற்றி இருக்க மாட்டாய். அதனால்தான் முளைக்கவில்லை!'' என்று கடிந்(த்)தது பெரிய குரங்கு. குட்டிக் குரங்குக்கு வந்ததே கோபம்...

''ஒரு விதைக்குப் பத்து வாளி வீதம் தினம்தோறும் ஊற்றி இருக்கிறேன்'' என்று கத்தியது.

''அடாடா பத்து வாளியா? போச்சு... போச்சு... இவ்வளவு தண்ணீர் ஊற்றினால் விதைகள் அழுகி இருக்குமே! விதைகள் அழுகியதால் முளைக்கவில்லை'' என்றது பெரிய குரங்கு.

''ஒரு விதை கூட அழுகவில்லையாக்கும்!'' கு. கு. பெருமையோடு கூறியது.

''அது எப்படி உனக்குத் தெரியும்?''

''நான்தான் தினம் தினம் மண்ணில் இருந்து விதையை எடுத்து எடுத்துப் பார்க்கிறேனே'' என்றது கு. கு. விதை விதைத்தால் விளைந்து வரும் காலம் வரை பொறுமை வேண்டும். வாழ்க்கையிலும் அப்படித்தான். உரிய காலம் வரை பொறுமை வேண்டும். அவசரம், ஆத்திரம், அதனால் வரும் கோபம் தவிர்க்கப்பட வேண்டியது.

சில கோபக்காரர்கள் ''கோபம் வந்துட்டா... நான் மனுஷனா இருக்க மாட்டேன்'' என்று சிலிர்ப்பார்கள். எதுவாக மாறுவார் என்று அவருக்கே தெரியாதாம். இதிலிருந்தே தெரிகிறதே; கோபப்படுகிறவன் மனிதனே இல்லை என்று!

இருப்பினும் ஒரு சந்தேகம்!

வீட்டில் கொஞ்சம் கண்டிப்பும் கோபமும் இல்லை என்றால் பிள்ளைகள் பெற்றோருக்குப் பயப்படுவார்களா? மதிப்பார்களா? நியாயமான கேள்வி. பிள்ளைகளிடம் கோபப்படவில்லை என்றால் அவர்கள் நண்பர்களிடம் பேசுகிற போது ''எங்கப்பாவுக்கு ரோஷம், மானம் எதுவும் கிடையாது... எருமை மாதிரி'' என்று பட்டம் கட்டி விடுவார்கள். அதே சமயம் ஓயாமல் கோபப்பட்டால் ''அது... அப்படித்தான்.. பிளட் பிரஷர்ல கத்தும். நாங்க யாரும் கண்டுக்கறதே இல்லை'' என்பார்கள். அடிக்கடி கோபப்பட்டால் கோபத்துக்கு மரியாதை இல்லை. கோபமே இல்லை என்றால் நமக்கே மரியாதை இல்லை!

இந்தப் பிரச்னைக்கு விடை கந்த புராணத்தில் உண்டு. பிரமனை முருகன் சிறையில் அடைத்ததும் விடுதலை வேண்டி நந்தி வந்தார். பிறகு சிவனே வந்தும்

சுகிசிவம்

முருகன் மறுத்தார். சிவனை வணங்கிய பின்னும் அகந்தை விடாத பிரமனைச் சிறைவிருந்து விட முடியாது என்றார். உடனே முருகனைச் சிவபெருமான் கோபித்துக் கொண்டாராம். ''மைந்த நின் செய்கை என்னே'' என்று உரக்க சப்தமிட்டு ''கந்தனை வெகுள்வான்'' என்றார் கச்சியப்பர்.

சிவபெருமானா கோபப் பட்டார்! அதுதான் இல்லை. பாட்டை ஆழமாகப் பார்த்தால் ''கந்தனை வெகுள்வான் போலக் கழறினான்'' என்றார் கச்சியப்பர். போல என்ற வார்த்தையைப் போட்டு, அந்தக் கோபமே போலி என்று புரிய வைத்தார் கச்சியப்பர். நாம் பிள்ளைகளிடம் கோபப்படக் கூடாது. ஆனால் கோபப் படுவது போல் நடிக்க வேண்டும் என்கிறது கந்தபுராணம்.



இராமகிருஷ்ணரும் இதே கருத்தை ஒரு கதை மூலம் விளக்கினார். ஒரு கிராமத்தில் பாம்பு ஒன்று எல்லோரையும் கடித்துத் துன்புறுத்தியது. எல்லோரும் அதைப் பார்த்துப் பயந்தார்கள். அப்போது அந்தப் பாம்பு செழிப்பாக - இளம் வயதில் பதவி பெற்ற அரசியல்வாதி போல - காட்சி அளித்தது. ஒரு முனிவரிடம் எல்லோரும் முறையிட அவர் அந்தப் பாம்பை அழைத்தார். 'யாரையும் கடிப்பதில்லை' என்ற சத்தியத்தையும் பெற்றார். சில நாள் கழித்துத் துறவி அந்த வழியாக வந்த போது, மெலிந்த நாராகக் கிடந்தது அந்தப் பாம்பு. பதவி இழந்த அரசியல்வாதி மாதிரி இருந்தது. முனிவர் வருந்தி விசாரித்தார். ''உங்களால் வந்த வினை. நான் கடித்த போது எல்லோரும் என்னிடம் பயந்தார்கள். இப்போது யாரும் என்னை மதிப்பதே இல்லை'' என்றது.

''பாம்பே... உன்னைக் கடிக்கக் கூடாது என்றுதான் சொன்னேன். சீறக்கூடாது என்று சொன்னேனா? கடிக்க வருவது போல் சீறினால் போதும், எல்லோரும் ஓடி விடுவார்களே'' என்றார் துறவி. இது உண்மை. நீங்களும் கோபம் கூடாது. கோபப்படுவது போல் நடித்தால் குற்றம் இல்லை.

இந்த அர்த்தத்தில்தான் 'ரௌத்திரம் பழகு' என்றார் பாரதியார்! ''ரௌத்திரப்படு'' என்று அவர் சொல்லவில்லை.

அப்படியென்றால் சமூக அநீதிகளை, அநியாயங்களைக் கண்டு கோப்பட வேண்டாமா? அநீதிகளை எதிர்த்துப் போராடும் போதுதான் கோபம் அறவே கூடாது. வைராக்கியத்தோடு - அறிவுத் தெளிவோடு எதிர்க்கலாமே ஒழிய கோப உணர்ச்சியோடு எதிர்க்கலாகாது. அந்தக் கோபம் போராட்டத்துக்கான காரணத்தையே பாழாக்கி விடும். தொண்டர்களை உணர்ச்சிவசப் படுத்தும் வகையில் நடைபெறும் போராட்டங்கள் தேவையற்ற விளைவுகளையே ஏற்படுத்தும்.

வள்ளுவர் வழியில், ''சினம் சேர்ந்தாரைக் கொல்லி.''

எனவே, ''நான் பெரிய கோபக்காரனாக்கும்'' என்று யாரும் மார்தட்ட வேண்டாம். கூனிக்குறுகி அவமானப்பட வேண்டிய விஷயம் அது!

அட, அப்படியா?

தேனீ-ஒரு பளுதூக்கும் சாம்பியன்!



!! சுவிட்சர்லாந்திலுள்ள பெர்ன் நகரின் நாஷனல் மியூசியத்தில் ஒரு தேசிய ஹீரோவின் சிலை வைக்கப்பட்டுள்ளது. 'பாரி' என்ற பெயருடைய அந்த ஹீரோ ஒரு நாய்! தன் ஆயுட் காலத்தில் நாற்பது பேரின் உயிரைக் காப்பாற்றியது பாரி (Barry).

!! உலகின் மிகச் சிறிய தனித்து வாழும் உயிரினம் பாக்டீரியாதான். ஒரு சொட்டு திரவத்தில் ஐம்பது மில்லியன் பாக்டீரியா வரை இருக்கும்.

!! கொசுவுக்கு நாற்பத்தேழு பற்கள் உண்டு. அதன் இறகுகள் விநாடிக்கு ஆயிரம் முறை என்ற விகிதத்தில் படபடக்கின்றன. அது நம்மைக் கடிப்பதில்லை; ஊசி போன்ற உறுப்பினால் ஓட்டை போட்டு நம் ரத்தத்தை உறிஞ்சுகிறது. ஒரு தடவைக்குத் தன் உடல் எடையைப் போல் ஒன்றரை மடங்கு எடையுள்ள ரத்தத்தை உறிஞ்சவல்லது கொசு.

!! ஒரு அவுன்ஸ் எடையுள்ள சிலந்தி வலையைப் பிரித்து, நூலாக இழுத்தால், அந்த நூல் அட்லாண்டிக் சமுத்திரத்தைக் கடக்கும் அளவுக்கு நீளும்.

!! சிலந்திகள் தங்கள் வலையில் சிக்கும் பிற உயிரினங்களைக் கடித்துத் தின்பதில்லை. அவற்றால் உணவை உறிஞ்சிக் குடிக்க மட்டுமே முடியும். எனவே முதலில், வலையில் மாட்டிக் கொள்ளும் பூச்சிகளின் மீது அவை ஒருவித திரவத்தைப் பூசிக் கரையச் செய்கின்றன. கரைந்து திரவமாகும் ஜந்துக்களைச் சிலந்திகள் உறிஞ்சிக் குடிக்கின்றன.

!! பூவுலகில் வாழும் விலங்கினங்கள் யாவுமே ஒன்றையொன்று தின்று ஜீவிக்கின்றன. எந்த உயிரினத்தாலும் இரையாகக் கொள்ளப்படாதது மின் மினிப்பூச்சி மட்டுமே.

!! ஒரு தேனி தன் உடல் எடையைப் போல் முந்நூறு மடங்கு எடையைச் சுமக்க வல்லது. இந்தச் சாதனையை மனிதன் எட்ட வேண்டுமெனில் 250 பவுண்ட் எடையுள்ள மனிதன் 35 டன் எடையுள்ள லாரியைத் தூக்க வேண்டும்!

!! சுமார் 1,00,000 தாவர இனங்கள் தேனீக்களினால் மகரந்தச் சேர்க்கைக்கு உட்படுத்தப்பட்டு இனவிருத்தியாகின்றன. தேனீக்கள் இல்லையேல் எத்தனையோ பழ வகைகளும் காய் வகைகளும் நமக்குக் கிடைக்காமலே போய் விடும்.

!! பட்டுப் புழுக்கள் முட்டையிலிருந்து வெளிப்படும் போது மிகச் சிறியனவாய் இருக்கும். 7,00,000 புழுக்களை ஒன்று சேர்த்தால் ஒரு பவுண்ட் எடைதான் இருக்கும். ஆறே வாரங்களில் இப் புழுக்கள் 9,500 பவுண்ட் எடையை எட்டி விடும். அதாவது, பிறந்த போது இருந்ததைக் காட்டிலும் 9,50,000 சதவிகிதம் எடை கூடிவிடும்!

தொகுப்பு : உதய்லால்

சார்மினார் சாலை :

வன்முறையைத் தூண்டும் என்.டி.ஆர். பேச்சு!



என். டி. ஆர். விரக்தியின் அளவு!

●● தெலுங்கு தேசத்தின் பத்தாண்டு நிறைவு விழா, என். டி. ஆரின் 70-வது பிறந்த தினவிழா, அவருடைய "சாம்ராட் அசோக்" ரிலீஸ் என நகரைக் குலுக்கினார்கள் தெலுங்கு தேசக் கட்சியினர். தேசிய முன்னணியைப் புதுப்பித்துப் புது ரத்தம் ஊட்டப்போவதாக என். டி. ஆர். சொன்னார். பொம்மை, கருணாநிதி இருவர் மட்டுமே கலந்து கொண்டனர். வி. பி. சிங் உட்பட மற்ற தலைவர்கள் கலந்து கொள்ளவில்லை என்பதில் என். டி. ஆருக்கு ஏமாற்றம். கடந்த இடைத் தேர்தல் பிரசாரத்தில் அவர், "தெலுங்கு தேசத்தினரின் ஒரு தலை உருளுமானால், காங்கிரசாரின் பத்துத் தலை உருளும். அவர்கள் ஒரு பூத்தைக் கைப்பற்றினால் நாம் பத்து பூத்தைக் கைப்பற்றுவோம்" என்றார்! அவருடைய விரக்தி, வன்முறையைத் தூண்டும் பேச்சு அளவுக்குப் போய் விட்டது போலும்!


●● "டெக்கான் கிரானிக்கல்" ஹைதராபாதில் வெளியாகும் ஆங்கிலப் பத்திரிகை. அதன் அலுவலகம் ஒருநாள் மோசமாகத் தாக்கப்பட்டது. மேரி ரவீந்திரநாத் என்ற செக்கந்திராபாத் காங்கிரஸ் எம். எல். ஏ. தம் கும்பலுடன் வந்து தாக்கினார். நிருபர்களைத் துப்பாக்கி காட்டி மிரட்டினார்கள். சேதம் விளைவித்தார்கள். முந்தின தினம் செக்கந்திராபாத் தொகுதியின் மோசமான ரோடுகளை கிரானிக்கல் படம்பிடித்துக் காட்டியதே இதற்குக் காரணம். இத்தனைக்கும் கிரானிக்கல் காங்கிரஸ் ஆதரவுப் பத்திரிகை!

●● எழுபது வயதுக் கிழட்டு அராபிய ஷேக்கால் மணக்கப்பட்டு, விடுதலையான பதினேழு வயது அமினா, இப்போது பெண்களின் மறுவாழ்வு இல்லமொன்றை நடத்துகிறார். அதில் பயிற்சி பெறும், பணிபுரியும் அறுபது பேரில் முப்பத்தைந்து பெண்கள் அராபியக் கணவர்களால் கைவிடப்பட்டவர்கள்!

●● இரு வருடங்களுக்கு மேலாக ஹுசேன் சாகர் ஏரியில் கிடந்த புத்தர் சிலை மீட்கப்பட்டு, ஏரியின் மத்தியப் பகுதியில் நிறுத்தப்படும் ஆயத்தப் பணி இரண்டு மாதங்களாய்த் தூங்கிக் கொண்டிருக்கிறது. மீட்ட காண்ட்ராக்ட் கம்பெனிக்கு வர வேண்டிய பணத்தை அரசு செலுத்தினால்தான், பீடத்தில் நிறுவப்படும் என்ற காரணத்தால் அப்படியே கிடக்கிறது!

●● "கேடி கண்மணி" தெலுங்கில் டப் செய்யப்பட்டது. சரியாக ஓடவில்லை. சமீபத்தில் எஸ். பி. பாலசுப்பிரமணியம், கேடி கண்மணி போல பிரதான பாத்திரத்தில் நடித்துள்ள படம்; "பெல்லன்டே நூறெழ பெண்டா". டைவர்ஸ் கேஸ்களில் பிரசித்தி பெற்ற வக்கீலாக எஸ். பி. பி. நடித்துள்ளார். தம் மகளுக்கு அது போன்ற சூழல் வரும் போது, அவர் அடையும் வேதனை படத்தின் மையம். வெகு இயல்பான நடிப்பு.

— அப்பன்



எஸ். பி. பி. : இயல்பான நடிப்பு

ஒரு வித்தியாசமான தொண்டர்!



வி. ஆர். சந்திரன்

பொது மக்களின் குறைகளை, நாளிதழ்களில் 'ஆசிரியருக்குக் கடிதங்கள்' பகுதியில் எழுதி விட்டு, அத்தோடு விட்டு விடுவார்கள் பலர். ஆனால் வி. ஆர். சந்திரன், பத்திரிகைகளுக்குக் கடிதம் எழுதுவதோடு நின்று விடுவதில்லை. காரணம், அவர் கையாளும் பிரச்னைகள் அப்படி.

இந்திரா காங்கிரஸ் பிரமுகராயிருந்த போது, 1969-ல், தூய்மையான பொது வாழ்க்கை நடத்த வலியுறுத்தவும், மக்களின் குறைகளைக் கூடிய மட்டும் தீர்க்கவும் நேருஜி ஜனநாயக சோஷலிசப் பேரவையை உருவாக்கினார் சந்திரன். வி. பி. சிங், காங்கிரசை விட்டு வெளியேறிய போது, வி. ஆர். சந்திரனும் வெளியேறினார்; ஜனதா தளத்தில் சேர்ந்தார். இப்போது?

''சாதாரண மக்களுக்கு இந்த அரசியல் கட்சிகளால் எந்தப் பயனும் இல்லை என்று உணர்ந்து கொண்டேன். அவர்களுக்கு வேண்டியதெல்லாம் ஓட்டுக்கள்தாம்! மக்களின் அடிப்படைத் தேவைகளை அவர்கள் அறவே மறந்து விடுகிறார்கள்!'' என்று நொந்து போய்ச் சொன்னார் சந்திரன். சிவாஜி அழைப்பு விடுத்தும் கூட, ஜனதா தளத்தில் மறுபடி சேரவில்லையாம்.

''அமைப்புகள் ஏதும் இல்லாத முடி திருத்தக் கலைஞர்கள், கட்டுமானப் பணித் தொழிலாளர்கள் போன்றவர்களின் கடைசி நாட்களைச் சிரமமின்றித் தள்ள, முன்பு ஒரு நிதி திரட்டப்பட்டது. பல லட்சங்கள் இதற்காக வசூல் செய்யப்பட்டது. எம்.ஜி.ஆர். காலத்தில் இதை இன்னும் விரிவுபடுத்தினார்கள். ஆனால் கருணாநிதி காலத்தில் திட்டமே மூட்டை கட்டி வைக்கப்பட்டது. நியாயமாகக் கிடைக்க வேண்டிய தொழிலாளர் எவருக்கும் ஒரு காசு கூடக் கிடைக்கவில்லை! ஒவ்வொரு முதலமைச்சருக்கும் தனிப்பட்ட கடிதம் எழுதினேன். கடைசியாக முதல்வர் ஜெயலலிதா அவர்களுக்கும் எழுதினேன். இப்போதுதான் இரண்டு - மூன்று பேருக்குக் கொடுத்திருக்கிறார்கள்! மீதிப் பேருக்காக இப்போது கலெக்டரிடம் முறையிட்டுக் கொண்டிருக்கிறேன். ஏனென்றால் திரட்டப்பட்ட பணம் ஏராளம். உரியவருக்கு, உரிய சமயத்தில் கிடைக்காது போனால் எப்படி?'' என்கிறார் வி. ஆர். சி.

கோயில் இடங்களில் கட்டடங்கள் கட்டி, எந்த ஆளும் கட்சி இருக்கிறதோ அதன் 'தாதா'க்கள் அவற்றை ஆக்கிரமித்துப் பணம் பண்ணும் முறையை நினைத்து வருந்துகிறார் சந்திரன்.

''ஆட்சி அமைக்க வரும் போது, ஊழலற்ற, திறமையான அரசு அமைப்போம் என்றுதான் எல்லாருமே சொல்லுகிறார்கள். அப்புறம் என்ன ஆகிறது? திறமை அமுங்கிப் போய் ஊழல் மட்டுமே பரவுகிறது. இந்தக் கரு மேகத்தில் ஒரு வெள்ளிக் கோடு தெரிகிறது என்றால், கன்ஸ்யூமர் மூவ்மென்ட் காரணமாக, மக்களிடையே சிறிதளவாவது விழிப்பு உணர்ச்சி ஏற்பட்டிருப்பதுதான்!'' என்று சொல்லும் இவர், ''இந்தப் பகுதிக்கு (அயனாவரம்) ஒரு நல்ல உயர்நிலைப் பள்ளி தேவை. சாலைகள் மிகவும் சீர்கேடான நிலையில் உள்ளன. மிகவும் வருத்தமான செய்தி என்னவென்றால், எங்கே பார்த்தாலும் ரௌடியிசம் தலைவிரித்தாடுவதுதான்!'' என்று குறைப்பட்டுக் கொள்கிறார்.

– சாருகேசி

'**எம்.** ஜி. ஆருக்கென்று ஸ்பெஷலாக எழுதப்பட்ட கதையில் வேறு யாரை யாவது நடிக்க வைத்தால் சரியாக வருமா? சர்ச்சை ஏதாவது கிளம்பி படத்தை அது பாதிக்குமோ?' என்றெல்லாம் சித்ராலயா பார்ட்னர்கள் யோசிக்கத்தான் செய்தார்கள். நானும் அவர்கள் கவலையைப் பகிர்ந்து கொண்டேன் என்றாலும் அந்தக் கதையை அப்படியே ஒதுக்கித் தள்ளி விட்டு வேறு கதை எழுத நான் விரும்பவில்லை. இரவோடு இரவாகச் சிந்தனை செய்து, 'அன்று சிந்திய ரத்தம்' கதையிலிருந்து உணர்ச்சி பூர்வமான சில கட்டங்களை மட்டும் எடுத்துக் கொண்டு, வேறு சம்பவங்கள் சேர்த்துப் புதுக் கதை உருவாக்கி விட்டேன்!

மறுநாள் சித்ராலயா காரியாலயத்தில் பார்ட்னர்கள் கூடிய போது 'புது முலாம் பூசப்பட்ட பழைய கதை' என்பதை மறைக்காமல் கதையைக் கூறினேன். கதை ஓ. கே. ஆனதுடன் சிவாஜியை ஹீரோவாக நடிக்கக் கோருவது என்பதும் முடிவாயிற்று.

இந்தத் தருணத்தில் எனக்கு இன்னொரு 'ஐடியா' தோன்றியது : 'படம் என்னவோ நிறையச் செலவு செய்து பிரும்மாண்டமான தயாரிப்பாக இருக்கப் போகிறது என்பது தீர்மானமாகி விட்ட விஷயம். பின்னால் இதையே சித்ராலயா பேனரில் ஹிந்தியில் எடுக்கவும் முடிவு செய்யலாம். அப்படியிருக்கும் போது லொகேஷன்களை... ஸெட்டுகளை தமிழ்ப் படத்துக்கு ஒரு தடவை, ஹிந்தி படத்துக்கு ஒரு தரம் என்று போடுவானேன்? ஒரே ஸெட்டில் இரு மொழிப் படங்களையும் அடுத்தடுத்து எடுத்து விட்டால் ஸெட் செலவு மட்டுமின்றி, வேறு எத்தனையோ பல செலவுகளும் குறையுமே!'

'ஒரு கல்லில் இரண்டு மாங்காய்' என்ற என் யோசனையைப் பார்ட்னர்கள் உற்சாகமாக வரவேற்றார்கள்.

கனவுக்கன்னி எண்படத்தில் நடிப்பது கனவுதானா?

தமிழில் ஹீரோ சிவாஜி என்று முடிவாகி விட்டது. ஹிந்தியில்? என் மனைக்குப் பிடித்தவர் ராஜேந்திரகுமார். அவரும் ஒத்துழைப்புத் தர சம்மதம் அளித்து விட்டார். அடுத்து, 'கதாநாயகி யார்?' என்ற கேள்வி எழுந்தது. நான் சொன்னேன் : ''இரு மொழிப் படங்களுக்கும் இரண்டு கதாநாயகிகளைத் தேடுவதைக் காட்டிலும் இரு மொழிப் படங்களிலும் நடித்து ரசிகர்களின் ஒப்புதலைப் பெறக்கூடிய ஒரே கதாநாயகியாக இருந்தால் நல்லது. படப்பிடிப்பும் அந்த அளவுக்கு எளிதாகி விடும்.''

''யோசனை நன்றாகத்தான் இருக்கிறது. ஆனால் அப்படிப்பட்ட கதாநாயகி யார் இருக்கிறார்?'' என்று பார்ட்னர்கள் கேட்க, நான் புன்னகையுடன்,

''ஏன், என்னால் ஏற்கெனவே நிராகரிக்கப்பட்டு இன்று புகழேணியின் உச்சியில் இருக்கிறாரே ஒருவர்! அவரைப் போடலாமே'' என்றேன்.

''யார்? ஹேமமாலினியா!'' என்று பார்ட்னர்கள் வியப்புடன் கேட்டனர். ''சரிதான் போ! நடந்த கதையையெல்லாம் மறந்து விட்டாயா!''

'**ந**டந்த கதை' என்று அவர்கள் குறிப்பிட்டது இதுதான் :

வெண்ணிற ஆடை படத்துக்கு அவரைக் கேமிரா டெஸ்ட் நடத்தி நான் நிராகரித்த பிறகு ஹேமமாலினி, ஹிந்தி பட உலகில் பெரிய நட்சத்திர அந்தஸ்து பெற்று விட்டார். அப்போது ஒரு சமயம் அவர் அளித்த பத்திரிகை பேட்டியில், ''தமிழில் என்னை ஒரு பிரபல டைரக்டர் நடிக்க லாயக்கு இல்லை என்று ஒதுக்கித் தள்ளினார்; ஆனாலும் நான் என் திறமைகளை நிரூபித்து வெற்றி பெற்றுள்ளேன்'' என்று குறிப்பிட்டிருந்தார்.

தேவையின்றி ஹேமமாலினி என்னை 'இன்ஸல்ட்' பண்ணுவதாக எனக்குத் தோன்றியது. ஆனாலும் நான் பதிலடிக்கை ஏதும் தராமல் ஒரு சந்தர்ப்பத்துக்குக் காத்திருந்தேன். அந்த வாய்ப்பும் வந்தது. ஹேமமாலினியை விமான நிலையத்தில் யதேச்சையாகச் சந்திக்க நேர்ந்த தருணத்தில் நான் சொன்னேன் : ''உனக்கு நான் மேக் அப்

டெஸ்ட் செய்த போதும், காமிரா முன் நிறுத்திப் பரீட்சித்துப் பார்த்த போதும் நீ எப்படி இருந்தாய் என்பதற்கு என்னிடம் புகைப்படங்கள் உள்ளன. அதன்பின் உன் தோற்றத்தை 'இம்புரூவ்' செய்து கொண்டு ஹிந்தி பட உலகில் நீ நுழைந்தாய். இப்போது என்னிடம் உள்ள பழைய படங்களை நான் பத்திரிகைகளில் வெளியிட்டு, 'இப்படி ஒல்லிக் குச்சியாகக் கவர்ச்சியற்று உள்ள பெண்ணை எப்படி என்னால் அறிமுகப்படுத்தியிருக்க முடியும்?' என்று கேள்வி எழுப்பலாம்; பேட்டியும் தரலாம்; செய்யவா?'' என்று கேட்டேன் - புன்னகையோடு தான்.

ஹேமமாலினி, என்னுடைய நல்லெண்ணத்தை உடனே புரிந்து கொண்டவராக ''அதை மறந்துருங்க ஸார்; இனிமே பேட்டி கிட்டின்னு யாராவது வந்தா ஜாக்கிரதையா இருக்கேன்'' என்று வருத்தம் தெரிவித்துப் பேசினார். நானும் விஷயத்தை அத்துடன் விட்டு விட்டேன்.

இந்தச் சம்பவங்களைத்தான் ''மறந்து விட்டாயா?'' என்று பார்ட்னர்கள் இப்போது கேட்டார்கள். நான் சொன்னேன் : ''பழைய கசப்பான சம்பவங்களை மறந்து விடுவதுதான் நல்லது; புதிய அத்தியாயம் தொடங்குவதுதான் முன்னேற வழி. இன்று ஹேமமாலினி படங்கள் ஹிந்தியில் சக்கைப் போடு போடுகின்றன. எல்லா ஹிந்தி ஹீரோக்களும் அவருடன் சேர்ந்து நடிக்கும் வாய்ப்புக்குக் காத்திருக்கிறார்கள். தவிர, 'கனவுக் கன்னி' என்று கருதப்படும் ஹேமமாலினி, தமிழ் நாட்டுப் பெண் என்பதால் இங்கேயும் அவருக்கு நல்ல வரவேற்பு இருக்கும். தமிழில் அவரை அறிமுகப்படுத்திய பெருமை நமக்குக் கிடைக்கும்.''

''எல்லாம் சரிதான். ஆனால் உன்னைப் போலவே பெருந்தன்மையுடன் ஹேமமாலினியும் எண்ண வேண்டுமே?'' என்று பார்ட்னர்கள் யோசனை செய்தனர்.

''முயற்சி செய்து பார்த்து விடுவோம்'' என்று கூறினேன். சென்னைக்கு வந்த ஹேமமாலினியின் தாயாரைச் சந்தித்துப் பேசினேன். அவர் முதலில் தயங்கினா



ஓம், பிறகு ஒப்புதலளித்தார். ஹேமமாலினிக்கும் என் இயக்கத்தில், சிவாஜிக்கு ஜோடியாகத் தமிழில் அறிமுகமாவதில் மகிழ்ச்சி. ஹிந்தியில் அன்று டாப் ஹீரோ ராஜேந்திரகுமார் ஆனதால் அதிலும் திருப்தி.

எல்லாம் நல்லபடியாக முடிந்து எனக்கும் சித்ராலயா பார்ட்னர்களுக்கும் ரொம்ப சந்தோஷம் ஏற்பட்டது. ஆனால்...

'வெண்ணெய் திரளும் சமயம் தாழி உடைந்த கதை'யாக ஒரு புதிய சிக்கல்! அது சட்டபூர்வமான ஒரு பிரச்னை! அனந்தசாமி ஐயங்கார் என்பவர் கட்டுப்பாட்டில் ஹேமமாலினி இருந்தார். அவர் அனுமதி இல்லாமல் ஹேமமாலினி படங்களை ஒப்புக் கொள்ளவோ கால்ஷீட் கொடுக்கவோ முடியாது! எனக்கு ஆரம்பத்தில் இந்த விஷயமெல்லாம் தெரியாது. கால்ஷீட் பற்றிப் பேச்சு வந்த போதுதான் ஹேமமாலினியின் அம்மா, ஜெயா சக்கரவர்த்தி, அனந்தசாமி ஐயங்கார் பற்றிக் குறிப்பிட்டார். எனக்குத் தூக்கிவாரிப் போட்டது! கனவுக் கன்னியை என் படத்தில் நடிக்க வைக்கும் எண்ணம் கனவாகிப் போக வேண்டியதுதானா?

புரிந்து செயல்படுவாரா கலைஞர்?

◆ கலைஞர் மீண்டும் தி. மு. க. தலைவராகத் தேர்ந்தெடுக்கப் பட்டிருக்கும் இத் தருணத்தில், தற்போது அவருக்குரிய பொறுப்புணர்ச்சியைத் தலையங்கம் மூலம் எடுத்துரைத்திருக்கும் விதம் மிக அருமை! கலைஞர் புரிந்து செயல்படுவாரா?
முத்துப்பேட்டை,
தஞ்சைத் தரணியன்.

◆ தலையங்கம் மூலம் கலைஞரின் குறை நிறைகளை நடுநிலைமையுடன் சுட்டிக்காட்டியிருப்பது பாராட்டுக்குரியது.
முருங்கப்பேட்டை,
பொன். ராஜேந்திரன்.

◆ போகிற போக்கைப் பார்த்தால் முதல்வர் 'ஜெ'யின் கட்-அவுட்... மதுரை மீனாட்சியையே மறைத்து விடும் என்பதை விளக்கும் கார்ட்டூன் தான்...!
கோட்டூர் அணை - 2,
ஆர். கருணாகரன்.

◆ ''திரையுலகுக்கு ஒரு டிக்கெட்!'' - வித்தியாசமான கட்டுரை. கலைத் தொழிற்சாலையின் கதவுகள் திறக்கும் என்ற நம்பிக்கையில் எத்தனை கனவு முகங்கள்! இவர்களின் பயிற்சியும், முயற்சியும் வெற்றி பெறும் என்ற நம்பிக்கையோடு, ஏராளமான யுவதிகளும், இளைஞர்களும்.... காலம் நல்ல தீர்ப்பை எழுதட்டும்.
குமாரபாளையம்,
நெல்லை. சங்கர் குமார்.

◆ சினிமா உலகில் கிரீடமும் கிடைக்கும். தோல்விகளும், சோதனைகளும், அவமானங்களும் கூட வாய்க்கும் என்ற தேவேந்திரன் (நடன) மாஸ்டரின் வார்த்தை உண்மையிலும் உண்மை.
தஞ்சாவூர் - 1. முத்து. சரவணன்.

◆ 'சுகப்பிரசவம் இருக்க சிசேரியன் எதற்கு?' கட்டுரை படித்தேன். 1978-ல் என் மனைவிக்கு பெங்களூரில் Air Force Hospital -ல் பிரசவம். இத்தனைக்கும் மூன்றாவது பிரசவம். மூன்று நாட்கள் பிரசவ வலியால் துடித்துக் கடைசி நாளில் என் கையைப் பிடித்துக் கொண்டு, 'என்னை எப்படியாவது டிஸ்சார்ஜ் செய்து கூட்டிக் கொண்டு போய் விடுங்கள். உங்கள் மடியிலேயே சாக விரும்புகிறேன்' என்று சொன்ன என் மனைவியை அடக்கி வைத்தார்கள். மூன்று நாட்கள் பிரசவ வேதனையில் துடிக்க வைத்து, சிசேரியன் இல்லாமல் நாலாவது நாள் பத்து பவுண்டு எடையுள்ள ஆண் குழந்தை பிறந்தது. அட்டெண்ட் செய்த விங் கமாண்டர் (திருமதி) ராமனா, 'பிரசவ வேதனையை அனுபவித்தே தீர வேண்டும்' என்றார். அந்த டாக்டர் ராமனா எங்கே? இப்போதைய வியாபார டாக்டர்கள் எங்கே?
பெங்களூர்,
டி. எஸ். வெங்கடராமன்.

◆ நம் அனைவரையும் 'ஒட்டடை' அடிக்கக் கூப்பிடும் செல்வேள் பாராட்டுக்குரியவர். அவர் குறிப்பிட்டது போல் அழுகல் புழுக்களை அடியோடு அகற்ற வேண்டும். கவிதைக்குரிய படத்திலுள்ள 'கூட்டமும்' இப் புனிதப் பணிக்காக ஒன்றுபடுவோம் என்பதை வலியுறுத்துகிறது.
மதுரை - 20, ''அன்பா''
என். ஜவஹர்லால்.

◆ ''எம். கே. ஜி.க்கு என்ன இண்டர்வியூ?'' மிகச் சரியான கேள்வி.
மயிலாடுதுறை,
டி. பி. சரோஜா சம்பந்தம்.

◆ உதாதிபன் எழுதிய ''செய்கைகள்'' என்ற சிறுகதை, காலில் விழுகின்ற செய்கையானது ஏழை குமரேசன் செய்கிற போது தன்மானம் இல்லாததாகவும் வெட்கம் கெட்டதாகவும் கருதப்படுகிறது; அதையே வசதி படைத்த விக செய்யும் போது பக்தியாகவும், மரியாதையாகவும் கருதப்படுகிறது என்கிற யதார்த்தத்தை வெளிச்சம் போட்டுக் காட்டியது.
இலால்குடி,
எம். இராஜேந்திரன்.

◆ சந்திரப்ரியன் எழுதிய, ''காதல்... மாறுபடும் தருணங்கள்'' சிறுகதை அருமையான படைப்பு. இளைய சமுதாயத்திற்குச் சிறந்த படிப்பினை ஊட்டும் வண்ணம் அமைந்துள்ளது.
திருத்துறைப்பூண்டி,
கா. இராமசாமி.

◆ கல்கி ஜூன் 7 இதழில் 'சுகிசிவம்' எழுதிய கட்டுரையின் இறுதியில், ''நாளை நாளை என்பீராகில்...'' என்று தொடங்கும் மூன்று வரிகள் மேற்கோளாகக் காட்டப்பட்டுள்ளன. இதனை ''ஆழ்வார் அறிவுறுத்துகிறார்'' என்று கூறப்பட்டுள்ளது. இவ் வரிகள் கபிலரகவல் எனப்படும் தனிப் பாடலில் காணப்படுவன. சங்க காலத்துக் கபிலர் வேறு. இவர் வேறு. ஆழ்வார் இயற்றியதாக எழுதியிருப்பது தவறு.
சென்னை - 4,
அ. வெ. சுப்பிரமணியன்.

திருத்தத்தில் ஒரு திருத்தம்!

◆ கல்கி 14.6.92 இதழில் பக்கம் 46-ல் ஒரு திருத்தம் வெளியிட்டிருக்கிறீர்கள். ''மகாநதி - காவேரி இணைப்பு ஏற்பட்டால் தஞ்சையில் முப்பது லட்சம் ஏக்கரில் இரு போகம் விளைய நீர் கொண்டு வர முடியும்'' என்று உள்ளது. அது, ''தமிழகத்தில் முப்பது லட்சம் ஏக்கர்'' என்று இருக்க வேண்டும். தஞ்சையில் அல்ல. இது என். எம். செய்த தவறாக இருக்கவே முடியாது. கல்கி காரியாலயத்தில்தான் ஏதோ குளறுபடியாகியிருக்கிறது!
சென்னை - 28, ரவி.
(தெண்டல் அப்! - ஆசி.)



அயல் நாட்டுக்
கடன் வளர, கச்சா
எண்ணெய் இறக்குமதி
முக்கிய காரணம்.
உள்நாட்டில்
அதிகப்படியாக
உற்பத்தியாகும்போது,
கொஞ்சம் பெல்ட்டை
இறுக்கிக் கொண்டு
நம்மால்
இருக்க முடியாதா?

சைக்கிளில் போகலாம்; நச்சுப்புகையைக் குறைக்கலாம்!

நா. மகாலிங்கம்

பஸ் போக்கு வரத்தில் - மாநில அரசுக்கு 56 கோடி ரூபாய் நஷ்டம் என்று சொல்கிறார்கள். டயர் விலை அதிகம்.... டீசல் விலை கட்டுபடியாகவில்லை. பணியாளர்களின் ஊதியச் சுமை என்றெல்லாம் சமாதானம் சொல்லிச் சமாளிக்கிறார்கள்.

பஸ் போக்கு வரத்தை மறுபடியும் தனியார் மயமாக்கினால் நிலைமை சீரடையுமா? இந்தக் கருத்து ஒன்றும் சரியில்லை. வேண்டுமானால் கொஞ்சம் நிர்வாகச் செலவு குறையும். பழைய வண்டிகளைச் செம்மைப்படுத்தி ஓடவைக்கலாம். ஓவர் ஹெட் செலவுகளில் சிக்கனம் சாத்தியமாகலாம். அவ்வளவு தான்.

நகரங்களின் போக்குவரத்துப் பிரச்னை சிக்கலானது. மாணவர்களும் உத்தியோகத்திலிருப்பவர்களும் அடிக்கடி வெளியே போய் வரவேண்டியிருக்கிறது. போக்குவரத்தில் கொஞ்சம் கட்டண உயர்வு என்றாலும் அதிகம் செலவாகிறது என்று எல்லோரும் எதிர்க்கிறார்கள். போதாக் குறைக்கு இப்போது மொபெட், மோட்டார் சைக்கிள்கள், ஆட்டோக்கள், கார்கள் என்று எல்லாம் சேர்ந்து நகரங்களில் 'பொல்லூஷன்' (சுற்றுப்புறம் மாசுறுதல்) அதிகமாகிவிட்டது.

எல்லாவற்றுக்குமான நிர்வாக நான், நீண்ட காலத்துக்கு முன்பிருந்தே சொல்வது என்னவென்றால், நகரங்களில் கார்கள் மற்ற வாகனங்களின் எண்ணிக்கையைக் குறைக்க வேண்டும் என்பதுதான். பத்து வயதுக்குக் கீழேயுள்ள குழந்தைகளும் ஐம்பது, ஐம்பத்தைந்து வயதுக்கு மேலேயுள்ள பெரியவர்களும் தான் பஸ்ஸில் போக வேண்டும். மற்றவர்கள் சைக்கிளில் போய்வரலாம். இது மேலை நாடுகளில் - கிழக்கு ஐரோப்பிய நாடுகளிலும் சீனாவிலும் இன்றும் பின்பற்றி வரப்படும் பழக்கம்தான். உடம்புக்கும் நல்லது.

இதைவிடச் சிறந்தது, நதி வழிப் போக்குவரத்தும் கரையோரக் கப்பல் போக்குவரத்தும். இப்படிச் சரக்குகளை அனுப்புவது முன்பு நடைபெற்றதுண்டு. கல்கத்தாவிலிருந்து காசிக்குக் கங்கை நதியில் பெரிய படகுகளில் எல்லாம் சரக்குகளை ஏற்றி அனுப்பினார்கள். இப்போது சிறு படகுகள் கூடப் போய்வர முடியவில்லை. நகரங்களின் ஊடே ஓடும் நதிகளை மக்கள் போக்குவரத்துக்கும் பயன்படுத்தலாம். சிக்கனமானதும் கூட.

நேரு காலத்தில் நாம் பயன்படுத்தியதைப் போல் மூன்றுமடங்கு அதிகமாகக் குரூட் ஆயிலை இன்று பயன்படுத்து



அடுத்த இதழில் ....

●● "பாட்டு இருக்க பாலிடிக்ஸ் எதற்கு?"

- வாணி ஜெயராம் சிறப்புப் பேட்டி

கிறோம். அப்போது உள்நாட்டில் உற்பத்தி செய்ததை விட எட்டு மடங்கு அதிகமாக இன்று உற்பத்தி செய்கிறோம். ஆனாலும் நமது குரூட் ஆயில் இறக்குமதி ஆண்டுக்கு ஆண்டு அதிகரித்து, இந்த ஆண்டு பத்தாயிரம் கோடி ரூபாயாக உயர்ந்து விட்டது.

நம்முடைய அயல் நாட்டுக் கடன் பெருவாரியாக வளர்வதற்குக் கச்சா எண்ணெய் இறக்குமதி ஒரு முக்கிய காரணம்.

ஏன், உள்நாட்டில், அதிகப்படியாக இவ்வளவு கச்சா எண்ணெய் உற்பத்தியாகிற போது, அதற்குள்ளே கொஞ்சம் பெல்ட்டை இறுக்கிக் கட்டிக் கொண்டு நம்மால் இருக்க முடியாதா என்று சிந்திக்க வேண்டும்.

லாரிகள், வாகனங்களை விட ரயில்கள் மூலம் அதிகமான மக்களும் சரக்கும் இடம்மாறிச் செல்ல முடியும். ஆனால் நாம் புதிய ரெயில் பாதைகள் அதிகம் போடவில்லை. தண்டவாளங்களை மட்டும்தான் புதுப்பித்துக் கொண்டிருக்கிறோம். அதிலும் பயணிகள் ரெயில் அளவுக்குச் சரக்கு வண்டிகள் போக்கு வரத்தை வளர்க்கவில்லை. சரக்கு வண்டிகள் பயணிகள் ரெயில் இரண்டும் ஒரே வேகத்திலேயே செல்ல அனுமதிக்க வேண்டும்.

இன்னும் ஒரு காரணம், 'பிரயாணம் செய்யுங்கள்' என்று சொல்லி அரசாங்கமே விடுப்புக்காலப் பயணச் சலுகை எல்லாம் கொடுத்து, அதற்கும் மேலாகக் கேள்விப்படாத திருவிழாக்களுக்கெல்லாம் பெரிதாக விளம்பரம் செய்து, அவற்றுக்கு வேண்டிய உதவிகள் செய்து - இவ்வாறெல்லாம் வீண் பிரயாணத்தை அதிகப்படுத்துகிறார்கள். யுத்த காலங்களில் என்றால் 'இது போன்ற வீண் பிரயாணங்கள் அவசியமா?' என்று எண்ணிப் பார்க்கும்படி பிரசாரம் செய்வார்கள்.

இப்படியெல்லாம் யோசித்தால்தான் பயண நெருக்கடியைக் குறைக்க முடியும்.

அது என்ன, "ஸ்டாக் இன்வெஸ்ட்?"

சமீப காலமாக ''ஸ்டாக் இன்வெஸ்ட்'' என்ற பெயர் அடிக்கடி அடிபடுகிறது. என்ன விஷயம்?

புதிதாகத் தொழில் தொடங்குவோர் அல்லது விரிவாக்கம் செய்வோர், மக்களிடம் முதலீடு கோரி பங்கு மார்க்கெட்டுக்கு வருகின்றனர். புதிய தொழில்களில் முதலீடு செய்யும் பழக்கம் மக்களிடையே நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. தங்களுக்குப் பங்குகள் ஒதுக்கப்பட்டால் அவற்றின் மதிப்பு சீக்கிரமே உயர்கிறது என்பதைக் காணும் மக்கள், பங்குமார்க்கெட்டில் - குறிப்பாகப் பிரதம மார்க்கெட்டில்- அதிக சிரத்தை கொண்டிருக்கின்றனர். இதன் விளைவு என்னவெனில், ஒரு நிறுவனம் கோடி ரூபாய் கேட்டால் அறுபது கோடி ரூபாய் கூடத் திரள்கிறது. அதாவது 50-60 மடங்கு அதிகப்படியாக மக்கள் முதலீடு செய்கின்றனர். எல்லாருக்கும் பங்குகளை விநியோகிக்க முடியாது. குலுக்கல் முறையில்தான் அதிர்ஷ்டசாலிகள் தேர்ந்து எடுக்கப்படுகின்றனர். மற்றவர்களுக்கு, அவர்கள் விண்ணப்பத்துடன் சேர்த்து அனுப்பிய பணம் திருப்பி அனுப்பப்படுகிறது. இப்படி லட்சக்கணக்கான பேர்களுக்குக் காசோலைகள் திருப்பி அனுப்பப்பட இரண்டு மூன்று மாதங்களுக்கு மேல் ஆகிறது. இந்தக் காலகட்டத்தில் பணம் முழுவதும் குறிப்பிட்ட நிறுவனம், அது கணக்கு வைத்துள்ள வங்கி ஆகியவற்றின் ஆதிக்கத்துக்கு உட்பட்டு இருக்கிறது. சில சமயம் தேவைக்கு அதிகமான காலம் இந்தப் பணத்தை அவர்கள் ஆண்டு அனுபவித்து வருவதாகப் புகார்களும் கிளம்பியதுண்டு. அவர்களுக்கு வட்டியில்லாமல் கிடைக்கிறது இந்தப் பணம். ஆனால் பொது மக்களோ அந்தக் காலகட்டத்தில் வட்டி இழக்கின்றனர். அது மட்டுமல்ல, இந்த நிறுவனத்தில் ஷேர் கிடைக்காது போனால் வேறு ஒரு நிறுவனத்துக்கு விண்ணப்பிக்கும் வாய்ப்பும் மத்தியதர வகுப்பினரில் பெரும்பாலோருக்குக் கிடைக்காமல் போய் விடுகிறது. காரணம், இவர்களிடம் உள்ள சேமிப்புத் தொகையே மிகவும் குறைவு.

நாலைந்து நிறுவனங்கள் ஒரே சமயத்தில் பங்கு மார்க்கெட்டுக்கு வந்தால் இந்த விதமாக மக்களின் பணம் 1,500 கோடி முதல் 2000 கோடி ரூபாய் வரை மூன்று நாலு மாதங்களுக்கு முடங்கி விட வாய்ப்பு உள்ளது. இப்படி முடங்கி விடுவதால் வட்டி நஷ்டமாவது பற்றிப் பொது மக்களில் பலர் முணுமுணுக்கவே, அரசு, வங்கிகளுக்கு ''ஸ்டாக் இன்வெஸ்ட்'' என்ற முறையை அமுல்படுத்துமாறு யோசனை சொன்னது.

இதன்படி கிருஷ்ணனிடம் பன்னிரண்டாயிரம் ரூபாய் இருக்குமானால் அவன் அத்தொகைக்கு வங்கியில் சேமிப்புக் கணக்கு அல்லது ஃபிக்ஸட் டெபாஸிட் கணக்கு வைத்துக் கொள்ளலாம். ''ஸ்டாக் இன்வெஸ்ட்'' வசதி கோரலாம். அப்போது அவனுக்கு ரூ. 500, ரூ. 1000; ரூ. 2000, ரூ. 5000 மதிப்புள்ள ''ஸ்டாக் இன்வெஸ்ட்'' பத்திரங்கள் வழங்கப்படுகின்றன. கிருஷ்ணன், தான் விரும்பப்படும் நிறுவனத்தின் பங்குகளைப் பெற விண்ணப்பத்துடன் காசோலைக்குப் பதிலாக ''ஸ்டாக் இன்வெஸ்ட்'' பத்திரங்களை அனுப்புகிறான். வங்கியில் அவன் வைத்திருக்கும் பணத்துக்



குத் தொடர்ந்து வட்டி கிடைத்து வரும். இவன் கோரிய பங்குகள் இவனுக்கு ஒதுக்கப்படுமானால் குறிப்பிட்ட நிறுவனம் ''ஸ்டாக் இன்வெஸ்''டை வங்கிக்கு அனுப்பி, பணம் பெற்றுக் கொள்ளும். கிருஷ்ணன் கணக்கில் அத் தொகை கழித்துக் கொள்ளப்படும். கிருஷ்ணன் கேட்ட பங்குகள் கிடைக்கவில்லையெனில் 'ஸ்டாக் இன்வெஸ்ட்' பத்திரம் அவனுக்கே திரும்பி வந்து விடுகிறது. அதை அவன் மறுபடி பங்குகள் வாங்கப் பயன்படுத்தலாம்; அல்லது வங்கிக்குத் திருப்பித் தந்து தனது பணத்தைத் தனக்கு இஷ்டமான இதர செலவுகளுக்குப் பயன்படுத்தலாம்.

இந்த விதமாகப் பங்கு மார்க்கெட்டில் முதலீடு செய்யும் மக்களின் ஒரு முக்கியமான குறை தீர்த்து வைக்கப்பட்டுள்ளது. இது ஆரம்ப கட்டமானதால் சில சில்லறைச் சிக்கல்கள் உள்ளன. அவையும் காலப்போக்கில் சீர்ப்பட்டு விடும் என்பது நிச்சயம்.

- வி. கோபாலன்

புள்ளி விவரப்புலி புரசைவாக்கம் எம்.எல்.ஏ.

'விவரங்கள் எல்லாம் விரல் நுனியில் வைத்திருப்பது' என்பார்களே, புரசைத் தொகுதி இ. காங்கிரஸ் கட்சிச் சட்ட மன்ற உறுப்பினர் ப. ரங்கநாதனைப் பொறுத்த வரை அது மிகச் சரியான வர்ணனை.

''தூக்கத்தில் எழுப்பிக் கேட்டால் கூட என் தொகுதி பற்றிய விவரங்களை என்னால் சொல்ல முடியும்'' என்றார் ரங்கநாதன்.


''கடைசியாக உங்கள் தொகுதிக்கு எப்போது விஜயம் செய்தீர்கள்?'' என்று கேட்டோம்.

''கடைசியாகவா! என் தொகுதியில் ஏதாவது ஒரு பகுதிக்குத் தினசரி விசிட் செய்கிறேன்!'' என்றார்.

''உங்கள் வீட்டுக்குப் பக்கத்திலேயே இருக்கிற திரு. வி. க. நகர் தொழிலாளர் குடியிருப்பு, எந்த அடிப்படை வசதியும் இல்லாமல் இருப்பதை உங்கள் 'விஸிட்' டின் போது காணவில்லையா?''

''ஏன் இல்லை என்று அவர்களைக் கேட்டுப் பார்த்தீர்களா? இந்தியா முழுக்க இது மாதிரி தொழிலாளர் காலனிகள் இருக்கின்றன. தமிழ்நாட்டிலேயே வியாசர்பாடி சர்மா நகர், மதுரை, சிவகாசி, கோவில் பட்டி, சிங்காநல்லூர் என்று இதுபோன்ற தொழிலாளர் குடியிருப்புகள் இருக்கின்றன. வீட்டு வசதி வாரியம் உருவாவதற்கு முன் கட்டப்பட்டவை. மத்திய அரசும், தொழிலாளர் நல இலாகாவும் பங்கு கொண்டு கட்டியவை இவை. வாடகையாகப் பத்து ரூபாய் வசூலித்துக் கொண்டிருந்த போது, பராமரிப்பு ஒழுங்காகத்தான் இருந்தது. ஹவுசிங் போர்டு உருவானதும் அதன் கீழ் இதைக் கொண்டு வந்தார்கள்.

''1978ல் இந்திய அரசு அவரவருக்கே உரிமை செய்து கொடுத்து விட உத்தரவு பிறப்பித்தது. கர்நாடகத்தில் 1984லும், பாண்டிச்சேரியில் அதற்குப் பிறகும் இப்படி ரெஜிஸ்ட்ரேஷன் செய்து கொடுத்தார்கள். தமிழ்நாட்டில் 87-ல் ஒரு ஜி.ஓ.வும், 92-ல் ஒரு ஜி.ஓ.வும் வெளியிட்டார்கள். அந்த சமீபத்திய ஜி.ஓ.வில், அடிமனை நீங்கலாக, வெறும் கட்டடத்தை மட்டும் அவரவருக்கே பதிவு செய்து கொடுத்து விடுமாறு குறிப்பிடப்பட்டிருந்தது. 78லிருந்து இன்று வரை, நிதிவசதி இல்லாமை காரணமாக எந்தப் பராமரிப்பும் செய்ய முடியவில்லை. இந்த நிலை இப்படியே இருக்கிறது.



''அடுத்தது பஸ் ஸ்டாண்டு. ஹவுசிங் போர்டு வசம் இருக்கும் அந்த இடத்தைக் கொடுத்தால் பல்லவன் பஸ் ஸ்டாண்டு கட்டிக் கொள்ளத் தயார் என்கிறது. கழிவுநீர் வடிகால் வாரியம், 'எங்களுக்கும் இடம் தரட்டும். வசதிகளைச் செய்து தருகிறோம்' என்கிறது. சென்ற மாதம் வரை, இடத்தை வழங்க அரசாங்க க்ளியரன்ஸ் வரவில்லை. ஹவுசிங் போர்டின் பிரதம இஞ்சினீயர் நாகராஜன் அவர்களைச் சந்தித்துப் பேசியிருக்கிறேன். இந்த மாதத்திற்குள் இடத்தை ஒப்புவித்து விடுகிறேன் என்று சொல்லியிருக்கிறார். மேற்படி குடியிருப்பில் உள்ளவர்கள் சுமார் 3200 ரூபாய் வரை கொடுத்து, இட உரிமை பெறலாம். இதையும் இன்ஸ்டால்மென்ட்டாகக் கொடுக்க வசதி செய்து கொடுப்பார்கள்!'' என்ற நல்ல சேதியைச் சொன்னார் ரங்கநாதன். ''வெவ்வேறு இலாகாக்கள் இதில் சம்பந்தப்பட்டிருப்பதால் தான் இத்தனை குழப்பம்!'' என்றார்.

''தாகூர் நகரில் டிரெயினேஜ் வசதி...''

''ஒரு தெருவில்தான் இல்லை. இன்னொரு தெருவில், அதாவது மூன்றாவது தெருவில், அடுத்த மாதம் டிரெயினேஜ் அமைக்கும் பணி ஆரம்பமாகி விடும்.''

''அயன்புரம் குடியிருப்போர் நலச் சங்கம் அந்தப் பக்கம் தண்ணீர் பிரச்னை இருக்கிறது என்கிறார்களே?''

''பொதுவாகவே இப்போது பிரஷர் குறைவு. ஆனால் சில சந்துகளிலும், தெருக்களிலும் சுமார் 30 வருடங்களாகவே

தண்ணீர் சரியாக வருவதில்லை. (எந்தெந்த தெருக்கள் என்று மளமளவென்று பட்டிய லிடுகிறார்.) பழைய குழாய்கள் ஆனதால் பழுதடைந்து, அடைப்பு ஏற்பட்டிருக் கிறது. இப்போது 85 சதவிகிதம் அந்த பைப்புகளை எடுத்து விட்டு, புது பைப் புகள் போடும் வேலை நடக்கிறது. பரகராம ஈசுவரன் கோவில் தெருவுக்கும் போடப் போகிறார்கள். இந்தக் கோடையில் பிரஷர் குறைவாக இருப்பதால், அதிக அளவு வர வாய்ப்பில்லை. ஆனால் எங்கே எல்லாம் மிக மிகக் குறைவாக இருக்கிறதோ, அங்கே பூஸ்டர்கள் வைத்திருக்கிறார்கள்.''

''மாநகராட்சி மற்றும் அரசுத் துறையி லிருந்து உங்களுக்குப் போதுமான ஒத்து ழைப்புக் கிடைக்கிறதா?''

''எல்லா அதிகாரிகளும் முழு ஒத்து ழைப்புத் தருகிறார்கள். பொது மக்களும் சரி வர ஒத்துழைத்தால் நல்லது! குப்பை அகற்ற, 50 ஆவது வட்டத்தில், 203 வீதி களுக்கு ஒரே ஒரு வண்டிதான் மாநகராட்சி தருகிறது. இது எப்படிப் போதும்? இப் போது, பொது மக்களின் புகார்களைக் கவ னிக்க முடியாமல் போனதற்குக் காரணம், அதிகாரிகள் அதிகமாகவும், கீழ்மட்டத்தில் பணி செய்யும் ஆட்கள் குறைவாகவும் மாநக ராட்சியில் இருப்பதுதான். சுமார் பன் னிரண்டு வருடங்களாக நியமனங்களே இல்லை!

''சாதாரணமாக மார்ச் மாதத்திலேயே பணிகளுக்கான டெண்டர் விட்டு, ஏப்ரல் 15க்குள் காண்ட்ராக்ட்கள் முடிவு செய்து, 16 ஆம் தேதியே வேலை தொடங்கி விடு வார்கள். இந்த 92-93 ஆம் வருடத்துக்கான டெண்டர்களே இன்னும் கோரப்பட வில்லை! நாலு மாதமாக எந்தவித ஆரம்ப வேலையும் ஏன் தொடங்கப்படவில்லை? மாநகராட்சி இதற்கு என்ன பதில் வைத் திருக்கிறது?'' என்று கேட்கிறார் ரங்கநாதன்.

''உங்கள் தொகுதியைப் பொறுத்த வரை என்ன மேம்பாட்டுத் திட்டங்கள் வைத்திருக்கிறீர்கள்?''

''என் தொகுதியில் எட்டு இடங்களில் (மறுபடி பட்டியல் படிக்கிறார்) மொத்தம் 2,946 குடிசைக் குடியிருப்புகள் இருக்கின் றன. இவை எல்லாம் இருபது வருடங் களுக்கு முன்னால் கட்டப்பட்டவை. முறை யான பராமரிப்பு இல்லாததால் பாழ டைந்து, சுகாதார வசதி, ரோடு, விளக்கு, தண்ணீர், படிகள், கதவு - ஜன்னல்கள் எதுவும் இல்லாமல் படு மோசமாக இருக் கின்றன. வாடகையை ஒழுங்காகக் கட்டி னால், ரிப்பேர் பண்ணி விடலாம் என்கி றார்கள் அதிகாரிகள். இதற்கு முயற்சிகள் எடுத்து வருகிறேன். இது தவிர, எஸ். எஸ். புரம், அம்பேத்கார் நகர், லாக்மா நகர், வசந்த கார்டன், தாகூர் நகர் (ஒரு பகுதி), ஜேபி நகர், காமராஜ் நகர் - இங்கே பட்டா வாங்கிக் கொடுக்க முயற்சி செய்து வரு கிறேன்.

''என் தொகுதியில்தான் நானூறு கிர வுண்ட் கார்ப்பரேஷன் டம்ப்பிங் யார்டு இருக்கிறது. இதில் அரசுத் துறை சார்ந்த கல்லூரி வர வேண்டும் என்பதால் கஷ்டத் தைச் சகித்துக் கொண்டிருக்கிறோம். கல் லூரி இல்லை எனில் என் தொகுதியிலேயே இருக்கிற மெட்ரோ வாட்டருக்குச் சொந்த மான இடத்தில் வசிப்பவர்களோடு, கொன் னூர் நெடுஞ்சாலையில் வாழ்ந்து கொண் டிருக்கிற குடிமக்களுக்கும் அதை வீட்டு மனைகளாகப் பகிர்ந்து கொடுக்க வேண் டும். இதற்கான முயற்சிகளையும் மேற் கொள்ளுவேன்!''

- சாருகேசி




கே. ஏ. கே. –
அன்றும் இன்றும்!

மத்திய சென்னை சட்டமன்ற உறுப்பினர்களில் ஒருவரும், மாநில அமைச்சருமான கே. ஏ. கே., முன்பு தமது தொகுதிக்கு அடிக்கடி விசிட் அடிப்பார். பத்திரிகைகள் இவருக்கு மிகுந்த முக்கியத்துவம் கொடுத்துப் படங்களுடன் செய்தியைப் பிரசுரித்து வந்தன. இதெல்லாம் பழங்கதை என்று தோன்றுகிறது.

அமைச்சரை மத்திய சென்னைப் பிரச்னைகள் சம்பந்தமாகச் சந்திக்கத் தொடர்பு கொண்ட போதெல்லாம் சாதகமான பதில் கிடைக்கவில்லை. தொகுதி விஷயம் 'அவர் வந்து மாசக் கணக்கில் ஆச்சே?' என்றார்கள்.

மதுரை மாநாட்டு அலுவல்களில் மூழ்கி இருப்பதாகவும், தொகுதி பற் றிய பிரச்னைகளுக்குக் கோவையாகப் பதில்கள் சொல்ல இயலாத நிலையில் அமைச்சர் இருப்பதாகவும், அமைச்சர் கே.ஏ.கே. சார்பில் தெரிவிக்கப்பட்ட தால் கே. ஏ. கே.வை நாமே சந்திக்க முடியவில்லை.

பாலம்



●● வித்தியாசமான, புதுமையான திருமண அழைப்பிதழ்கள் சேகரிக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளேன். எந்த மொழி அழைப்பிதழானாலும் பரவாயில்லை. அனுப்பி வைத்து உதவவும்.

- தா. சித்துகுமார்,
“தாணுபவனம்”,
16/85, திருவட்டார் (போஸ்டு),
குமரி மாவட்டம்
- 629 177

●● நாவலர் ந.கு. வேங்கடசாமி நாட்டார் எழுதிய “கள்ளர் சரித்திரம்” என்ற நூலின் ஒரு பிரதி தேவைப்படுகிறது; ஆய்வுக்காக. விலை நிர்ணயித்து எழுதினால், ரிஜிஸ்தர் செலவு உள்படப் பணம் அனுப்புகிறேன்.

- வி. நடராஜன்,
76, டைப் II,
பாரதி நகர், போர்ட் டிரஸ்ட்,
தூத்துக்குடி - 628 004.

●● எம்.எஸ்ஸி கம்ப்யூட்டர் சயன்ஸ் படித்துவிட்டு தற்போது வேலையின்றி இருக்கிறேன். கம்ப்யூட்டர் புரோகிராமர் ஆக பிராஜெக்ட் செய்த அனுபவம் உண்டு. வாய்ப்பு அளிக்க விரும்புகிறவர் தொடர்பு கொள்ளலாம்.

- டி. புவனேஸ்வரி,
11, சுரேந்திர நகர், முதல் தெரு,
ஆதம்பாக்கம், சென்னை - 600 088.

●● பள்ளிக்கூட நாட்களின் நட்பும் பாசமும் அலாதியானது. என்னுடன் படித்த கச்சாலீஸ்வர அக்கிரஹார மற்றும் கச்சாலீஸ்வர ஆரம்பப் பாட சாலை மாணவர்கள், ஹிந்து தியலாஜிகல் உயர் நிலைப் பள்ளி மாணவர்கள் தொடர்பு கொள்ள வேண்டுகிறேன். (1957 - 1966)

- எம்.வி. சேனாபதி,
2, முதல் அவென்யூ,
பெசன்ட் நகர்,
சென்னை - 600 090.

●● சுமார் 5500 முதல் 6000 வரை பெண்களுக்கான கவர்ச்சிகரமான பெயர்கள், அவற்றின் அர்த்தங்களுடன் சேகரித்து வைத்துள்ளேன். பெயர் வைக்க விரும்பும் பெற்றோருக்கு மட்டுமின்றி வேறு பலருக்கும் பலவிதங்களில் உதவக் கூடிய இந்தத் தொகுப்பைப் புத்தகமாக வெளியிட உதவி தேவை.

- டி.என். ஸ்ரீநிவாசன்,
பிளாட் 32,
இரண்டாவது மெயின்,
டாக்டர் ராமமூர்த்தி நகர்,
கீழ்க்கட்டளை,
சென்னை - 600 043.

●● என்னிடம் AMIE - செக்ஷன் 'B' மெக்கானிகல் இன்ஜினீரிங், புத்தகங்கள் புது மெருகு குன்றாமல் உள்ளன. விலையில் நாற்பது சதம் தள்ளித் தரத் தயாராக இருக்கிறேன்.

- தே. ஸ்ரீநிவாஸ்,
68, காந்தி தெரு,
மேற்கு மாம்பலம்,
சென்னை - 600 033

●● அழகு மீன், மற்றும் பறவை வளர்ப்பவர்கள் சந்திக்கும் பிரச்னைகள் தொடர்பாக எனக்கு எழுதலாமே? இலவசமாக, விஞ்ஞான அடிப்படையில் தீர்வு அளிக்கிறேன். தபால் மூலம் மட்டுமே தொடர்பு கொள்ளவும். பதில் பெற தபால் தலை இணைக்கவும். ஆங்கிலம் அல்லது தமிழில் எழுதலாம்.

- அஹமத் ஷா,
“அக்வா ஃபன்”
1261-B, ஆர்.ஜி. வீதி,
கோவை - 641 001.

●● மனநோயினால் பாதிக்கப்பட்டவர்களுக்காக இயங்கி வரும் தொண்டு நிறுவனம் ஆஷா, ரிஜிஸ்தர் செய்யப்பட்டு பதினேழு உலக நாடுகளின் பிரதிநிதிகளால் அங்கீகரிக்கப்பட்டது. ஆஸ்பத்திரி, விடுதி போன்றவை தொடங்க தானமாகவோ குறைந்த வாடகைக்கோ வீடு அல்லது நிலம் தர விருப்பமுள்ளவர்கள் தொடர்பு கொள்க.


- “ஆஷா”,
C 46, 13வது தெரு,
கிழக்கு அண்ணாநகர்,
சென்னை - 600 102.

(பாலம் பகுதி மூலம் இணையும் வாசகர்களின் வெற்றி - தோல்விகளுக்குக் கல்கி காரியாலயம் பொறுப்பு ஏற்க இயலாது.)

புதிய தொடர்கதைகள் ஆரம்பம்!



ஒவ்வொரு ஞாயிறும் தினமலர் நாளிதழுடன் இணைப்பாக வெளிவரும் புத்தகம் வாரமலர்; ஒவ்வொரு செவ்வாயும் இணைப்பாக வெளிவருவது கதைமலர்.



"தண்டிக்கப்படுகிறது எழும்பூர் தொகுதி!"

மத்திய சென்னை பாராளுமன்றத் தொகுதி கொஞ்சம் விசித்திரமான தொகுதி. அதிலிருக்கும் ஆறு சட்டமன்றத் தொகுதிகளில் ஐந்தில் எதிர்க்கட்சியினர் வெற்றி பெற்றனர். என்றாலும் அதில் நால்வர் இ. காங்கிரஸைச் சேர்ந்தவர்கள். எழும்பூர் தொகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட பரிதி இளம்வழுதி மட்டும்தான் தி.மு.க.வைச் சேர்ந்தவர். "ஆளும் கட்சியின் கூட்டணிக் கட்சி என்பதால் காங்கிரஸ் சட்டமன்ற உறுப்பினர்கள் தொகுதிக்குள் ஓரளவு காரியங்களைச் சாதிக்க முடிகிறது. ஆனால் என் நிலைதான் பரிதாபம்!" என்று பேச ஆரம்பிக்கிறார் தி. மு. க. வைச் சேர்ந்த பரிதி இளம்வழுதி.

"என் தொகுதி மக்கள் பெரும்பாலும் வறுமைக் கோட்டுக்குள் இருப்பவர்கள். இரண்டு வருட தி. மு. க. ஆட்சியின் போது பல மக்கள் நலத் திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டன. குறிப்பாகச் சொல்லப் போனால் கே. எம். கார்டன் என்கிற குடிசைப் பகுதி. கொஞ்சம் மழை பெய்தாலே அது வெள்ளக் காடாகி விடும். மழைத் தண்ணீர் வடிவதற்காகப் போடப்பட்ட பாதாள வடிகால்கள் அடைபட்டு இருந்ததால், தண்ணீர் வடியாமல் நெடுநாள் தேங்கிக் கிடக்கும். அந்த கால்வாய் மேல் குடிசைகள் இருந்தன. அந்தக் குடிசை மக்களுக்கு வீடுகள் கட்டித் தருவதற்குத் திட்டம் தீட்டினோம். இதன் மூலம் பாதாளக் கால்வாய் சுத்தம் செய்யவும் வழி பிறக்கும்; மழை பெய்தால் தண்ணீரும் வடிந்து போய் விடும். எங்கள் ஆட்சி கலையும் தருவாயில் 252 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டன. பிறகு ஆட்சி மாறியது. இந்த ஆட்சியில் அந்த வீடுகள் யாருக்காகக் கட்டப்பட்டனவோ அவர்களுக்கு இன்னமும் ஒதுக்கப்படவில்லை! காரணம் லஞ்சம் எதிர்பார்ப்பதுதான்!

"இதே போல் அம்பேத்கார் நகரை ஒட்டிச் சுமார் ஐநூறு குடிசைகள் பல்லாண்டுகளாக ரயில்வே நிலத்தில் இருந்தன. ரயில்வே அவர்களைக் காலி செய்யச் சொன்னதால் எங்கள் ஆட்சியில் அவர்களுக்குக் கொடுங்கையூர் அருகில் நிலம் ஒதுக்கப்பட்டது. ஆனால் முழு நடவடிக்கை எடுப்பதற்கு முன் ஆட்சி கலைக்கப்பட்டு விட்டது. அ.தி.மு.க. ஆட்சி இந்தப் பிரச்னையைக் கண்டுகொள்ளவே இல்லை. என்னைத் தேர்ந்தெடுத்ததற்காக எழும்பூர் தொகுதி தண்டிக்கப்படுவதாகவே கருத வேண்டியிருக்கிறது.

"சட்டசபையில் நான் பேச எழுந்தாலே ஆர்ப்பாட்டம் செய்து வெளியேற்றி விடுகிறார்கள். என் தொகுதியில் நடக்கும் எந்த அரசு நிகழ்ச்சிக்கும் என்னை அழைப்பதில்லை. அழைப்பிதழிலும் என் பெயர் போடுவதில்லை. குடிநீர், சுகாதாரம் பற்றிய பிரச்னைகளை அதிகாரிகளோடு சென்று தீர்க்கலாம் என்றால் என்னுடன் வருவதற்கு அதிகாரிகள் பயப்படுகிறார்கள். ஓர் அதிகாரி என்னிடம், 'ஸார் நான் ஓய்வு பெற சில மாதங்கள்தான் இருக்கின்றன. பிரச்னையில்லாமல் ஓய்வு பெற வேண்டும், தவறாக நினைத்துக் கொள்ளாதீர்கள்' என்று வேண்டிக் கொண்டார். நிலைமை இப்படியிருந்தால் எப்படிச் செயல்படுவது?" என்று கேட்கிறார் பரிதி இளம்வழுதி.

சந்திப்பு : **தில்லப்பா**

தங்கராசு

(ஆசிரியரின் கேள்விகளும் விமர்சகரின் பதில்களும்)

“லேட்டஸ்ட்டா என்ன படம் பார்த்தீங்க?”

“தங்கராசு.”

“யார் யார் நடிச்சிருக்காங்க?”

“நம்பியார், மனோரமா, முரளி.”

“மூணே பேர்தானா?”

“படத்துல நிறையப் பேர் வர்றாங்க, போறாங்க, இருக்காங்க.... நடிச்சிருக்கிறவங்க இவங்க மூணு பேர்தான்.”

“ஓ அப்படியா! அனுபவம் பேசுதுன்னு சொல்லுங்க.”

“அதுவேதான். எவ்வளவு மோசமான கதைன்னாலும், பாத்திரப் படைப்புன்னாலும் நம்பியார், மனோரமா ரெண்டு பேராலயும் மோசமா நடிக்கவே முடியாது. முரளிக்கு மெருகு கூடிக்கிட்டு வருது.”

“அது சரி, கதை என்ன?”

“காண்க, ஏற்கெனவே வெளியாகியுள்ள விமர்சனங்களை.”

“வில்லன் யாரு?”

“கே. பிரபாகரன்.”

“என்ன, சுவாரஸ்யம் இல்லாம பதில் சொல்றீங்க?”

“என்ன சொல்ல? ஊர்த்தலைவர் பணக்காரர். பெண்களைக் கெடுப்பது பொழுது போக்கு. வெல்வெட் சிரிப்பு. உள்ளுக்குள் தேக்கி வைத்திருக்கும் விஷம்.... இப்படி ஏற்கெனவே எழுதினதைத்தான் திரும்பச் சொல்ல வேண்டியிருக்கு. படத்துல எடுத்ததையே திரும்பத் திரும்ப எடுத்துட்டிருக்காங்க. நாம எழுதினதையே திரும்பத் திரும்ப எழுத முடியுமா? ஆகவே, காண்க, ஏற்கெனவே வெளியாகியுள்ள விமர்சனங்களை.”

“நகைச்சுவைப் பகுதில யார் யார் இருக்காங்க?”

“செந்தில், கவுண்டமணிக்குப் பதிலா வெ.ஆ. மூர்த்தி. அது ஒண்ணுதான் வித்தியாசம். மத்தபடி ஒரே கொச்சை. தணிக்கைக் குழுவில அங்கங்கே ஒருசில வசனங்களுக்கு ஆட்சேபம் தெரிவிக்க நீக்கியிருக்கறது தெரியுது. அது மட்டும் போதாது. ஒட்டு மொத்தமான ஓர் அணுகுமுறை இருந்தாத்தான் தமிழ்ப் படங்களில நகைச்சுவை ஓர் ஆரோக்கியமான நிலையைப் பெற முடியும்.”

“பாட்டெல்லாம் எப்படி?”

“ஐம்பது பர்சன்ட் ஆறுதல். ரெண்டு பாட்டு ரொம்பவே நல்லாயிருக்கு.”

“புதுமையா ஏதுவுமே இல்லையா?”

“ஓ. இருக்கே!”

“என்ன அது?”

“பைத்தியம் தெளியறதுக்கு ஒரு புது வழி. என்ன தெரியுமா? ரொம்ப சிம்ப்பிள். நாலு பேராச் சேர்ந்து பைத்தியம் பிடிச்சவனைத் தாக்க வேண்டியது. கும்கும் குத்து. தொம் தொம் உதை. கழியால ணங் ணங்குனு அடி. ரத்தக்காயம். மயக்கம்... தெளியறப்போ பைத்தியமும் தெளிஞ்சுடுது. அவ்வளவுதான். படத்துல முரளிக்கு இப்படித்தான் பைத்தியம் குணமாகுது. அப்புறம் என்ன? வில்லனுக்கு எதிரான போராட்டம்தான்.”

“அவங்க ஏதோ பொழுது போக்கா, கமர்சியலா படம் எடுக்கிறாங்க. அதுல போயி இப்படிக் குத்தம் கண்டு பிடிக்கக் கிட்டு...”

“அப்ப, விமர்சனமே எழுத வேண்டாங்கறீங்களா ஸார்! ஜாலிதான்! ரொம்ப தாங்க்ஸ்.”

“அதெப்படி? இப்ப நம்ப பேசிக்கிட்டிருந்ததையே எழுதிட்டு வந்துடுங்க!”

“போச்சுடா!”

– சி. ஆர். கே.



'ஜெ'யை தொடர்ந்து எதிர்ப்பது நியாயமா?



● சா. அன்பழகன், அணைக்கரை.

? வன்முறை பற்றிய கேள்விக்கு, நீப்பொறி ஆறுமுகம் தாக்கப்பட்டது குறித்து வருத்தம் தெரிவித்துள்ள நீங்கள், அவர் முதல்வரைப் பற்றிப் பேசிய ஆபாசப் பேச்சுக்களைக் கேட்டிருந்தால் அப்படி எழுதியிருப்பீர்களா?

! அப்படித்தான் எழுதியிருப்பேன். அவரது பேச்சு உயர்வானது அல்லதான். அதே போல் அ. தி. மு. க. பேச்சாளர்கள் பலரது பேச்சுக்களும் படு ஆபாசம்தான். இதற்கெல்லாம் முடிவு கட்ட வழி, இரு கட்சித் தலைவர்களும் ஓர் உடன்படிக்கைக்கு வந்து, தத்தமது கட்சிப் பேச்சாளர்களை வரைமுறைப்படுத்துவதே. சட்டத்தையும், தண்டனை வழங்கும் அதிகாரத்தையும் கட்சித் தொண்டர்கள் என்று கூறிக் கொள்ளும் வெறியர்களின் கைகளில் ஒப்படைப்பது ஜனநாயகத்துக்குச் சாவு மணி அடிப்பதாகும்.

● மல்லிகை மன்னன், மதுரை.

? 'இன்று யாரையோ தெய்வம் என்று வழிபாடு செய்கிறார்கள்! ஆனால் தி. மு. க. வுக்குக் கழக உடன்பிறப்புக்கள்தான் தெய்வங்கள்' என்று புகழுரை சூட்டியிருக்கிறாரே, கலைஞர்?

! 'ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காண்போம்' என்று அண்ணா சொன்னது அர்த்தமுள்ள அழகு. இன்றைய கருணாநிதியின் கூற்று அந்த ரகம் அல்ல.

● ஆர். விஜயகுமார், உள்ளி.

? "இந்தியாவின் சிறந்த பெண்மணி"யின் ஆட்சியில் வாச் அப்பில் காவலர்களால் கற்பழிக்கப்பட்ட அபலையின் துயரம் குறித்து...? ஆட்சியின் அலங்கோலம் கண்டீரா?

! காவல் துறையினர் பெரிது குற்றங்கள், கண்டனத்துக்குரிய காரியங்களுக்கு முதல்வர் மீது நேரடியாகப் பழி சுமத்த முடியாது என்றாலும், பொதுவாக ஆட்சித் தலைமையில் உள்ளவரின் போக்கு அடிமட்டம் வரை ஒரு பாதிப்பை ஏற்படுத்தும் என்பதை மறுப்பதற்கில்லை. அந்தவிதமாகப் பார்த்தால் ஜெ பொறுப்பேற்க வேண்டியவராகிறார். ஆனால் விசனம் என்னவெனில் தவறிழைக்கும் கட்சிக்காரர்களைப் போலீஸிலிருந்து காப்பதில் காட்டப்படும் கறுகறுப்பு, இதுபோன்ற அநீதிக்கு உள்ளான ஏழைகளுக்கு நீதி கிடைப்பதில் காண்பிக்கப்படுவதில்லை என்பதுதான்!

● முஸ்தபா, தக்கோலம்.

? 'ஜெ'யைத் தொடர்ந்து எதிர்ப்பது உங்களுக்கு நியாயமாகத் தோன்றுகிறதா?

! அடடா! அவரை ஆதரித்து வாழ்த்தி எழுத வேண்டும் என்றுதானே ஆசைப்படுகிறேன். ஆனால் அவர் வாய்ப்புத் தர மாட்டேன் என்கிறாரே, என்ன செய்ய!

● கே. சோமசேகர், காவேரிப் பட்டினம்.

? தொடர்ந்து இந்திய அதிகாரிகளை பாகிஸ்தான் துன்புறுத்துகிறதே; இதைக் காரணம் காட்டி தூதரக உறவுகளை முறித்துக் கொள்ளலாமே?

! உறவுகளை முறித்துக் கொள்வது வெகு சுலபமான காரியம். அதில் பெருமை இல்லை. முறிந்த உறவுகளுக்குக் கூடக் கட்டுப் போட்டு குணப்படுத்துவதுதான் கெட்டிக்காரத்தனம், புத்திசாலித்தனம் எல்லாம். அதைத்தான் அரசிடம் நாம் எதிர்பார்க்க வேண்டும். அண்டை நாடுகளைப் பகைத்துக் கொண்டால் தேசத்தின் முன்னேற்றம் தடைப்படும். ஏற்கெனவே இங்கே மோசமான பொருளாதார நிலை என்பதை மறப்பதற்கில்லை.


● எஸ். இராஜசேகரன், கொளப்பாடு.

? 'அ. தி. மு. க. வினர் நினைத்தால் கோபால்சாமி மட்டுமல்ல, கோபாலபுரம் கருணாநிதியின் நிலையும் மோசமாகி விடும்' என்கிறாரே, அழகு திருநாவுக்கரசு?

☛ சொல்லி வைத்தேன்!

☛ ரியோ விஜயம்





! அ. தி. மு. க. வில் 'ஜெ'யைத் தவிர பிறருக்கு எதையும் நினைக்கும் உரிமை கூட இருக்கிறதா என்ன! அழகின் அழகற்ற பேச்சாக மேலிடம் கருத வாய்ப்பிருக்கிறது; சொல்லி வைத்தேன்!

● த. சத்தியநாராயணன், அயன்புரம்.

? பந்த் (16ம் தேதி) வெற்றியா?

! 'வெற்றி' என்று அதனை அறிவித்தவர்களும் 'தோல்வி' என்று அரசுத் தரப்பினரும் கூறுகின்றனர். அன்றைய தினம் உற்பத்தி பாதிக்கப்பட்ட அளவில் 300 கோடி நாட்டுக்கு நஷ்டம் என்பதைக் காண, நமது பொருளாதாரத்துக்குத் தோல்வி என்பது மட்டும் உறுதி.

● கே. பட்டு, கும்பகோணம். ❑

? கருணாநிதி எதை வைத்து 'தமிழக அரசியலில் மாறுதலுக்கான அறிகுறிகள் காணப்படுகின்றன' என்று கூறுகிறார்?

இன்னும் பலக்காததைக் காணும் போதும் வெளியே மட்டுமல்ல, வயிற்றிலும் 102 தகிக்கிறது!

● நா. பாலசுப்பிரமணியம், சென்னை.

? பாட்டாளி மக்கள் கட்சி ஆர்ப்பாட்டம் பற்றி?

! எதிர்ப்புத் தெரிவிக்கும் ஜனநாயக உரிமையை நான் மதிக்கிறேன். ஆட்சியில் உள்ளோரின் அடக்கு முறையை வெறுக்கிறேன். ஆனாலும் 'தூக்குக் கயிறு போராட்டம்' என்பது அருவருப்பானது. டாக்டர் ராமதாஸ், பண்ருட்டி போன்ற அறிவாளிகள் இந்த அளவுக்குப் போக வேண்டாம். நாகரிகமான முறையில் தங்கள் தொண்டர்களை அவர்கள் வழிநடத்திச் செல்லட்டும்.

● கலை, இரணியல்.

? 'கழுவிய மீனில் நழுவிய மீன்' என்று இந்திய அரசியலில் யாரைக் குறிப்பிடலாம்?



✱ கேட்கமாட்டார்





✱ எதை வைத்து...?

! அதானே! ஒருவேளை நரசிம்மராவ் ஆட்சி கவிழ, மறுபடி தேர்தல் வர, தேசிய முன்னணி மத்தியில் ஆட்சியைப் பிடிக்க, தமிழக அரசு டிஸ்மிஸ் ஆக, மறு தேர்தல் நடக்க, தி.மு.க. வெற்றி பெற, தாம் முதல்வராவதாகக் கனவு காண்கிறாரா? அல்லது, இன்று ஆட்சியிலுள்ள அ. தி. மு. க. பிளவு பட்டு அதனால் தமக்குச் சான்ஸ் அடிக்கலாம் என்று கற்பனை செய்கிறாரா? ஒருவேளை, இன்றைய அ. தி. மு. க. ஆட்சியே தவறுகளைத் திருத்திக் கொண்டு ஓர் ஆரோக்கியமான பாதையில் இனி செல்லும் என்று ஆசைப்படுகிறாரா? எனக்கென்னமோ மூன்றிலுமே நம்பிக்கையில்லை சுவாமி!

● ஐ. எஸ். வாசு, மாடம்பிள்ளைதர்மம்.

? நரசிம்மராவின் பிரேசில் விஜயம் பற்றி?

! 'ரியோ மாநாடே ஒரு ஏமாற்று வித்தை; அது உருப்படியாக எதையும் சாதிக்காததுடன், சுற்றுப்புறத் தூய்மைக்குத் துரோகம் இழைத்து விட்டது' என்று சர்வதேசப் "பசுமை அமைதி" நிறுவனம் குற்றம் சாட்டியிருப்பதுடன், உச்சி மாநாடு புரிந்துள்ள பாவங்களைப் பட்டியலிடுகிறது. இதைப் பார்க்கும் போதும், பருவ மழை

! வர்மா கமிஷன் விசாரணையின் போது பலமான சந்தேகங்களுக்கு உள்ளான சில பெருந்தலைகளின் உறவினர்கள், ராஜீவ் கொலை வழக்கில் அரசு தாக்கல் செய்துள்ள குற்றச்சாட்டில் இடம்பெறவில்லை; அந்தச் சம்பவங்கள் இருட்டடிப்புச் செய்யப்பட்டுள்ளன என்பதைப் பொறுப்புள்ள வழக்கறிஞர் குழுவே எடுத்துக்காட்டியிருப்பதைக் கண்டிருப்பீர்களே!

● கி. ராமதாஸ், சென்னை.

? தங்களை அதிர்ச்சிக்குள்ளாக்கிய சமீபத்திய நிகழ்ச்சி?

! அமைச்சர் ரமேஷுக்கு பங்காரப்பா வக்காலத்து வாங்குவதுதான். குற்றச்சாட்டு பயங்கரமானது. அமைச்சரின் ராஜினாமாவைக் கோரிப் பெற்று, அவர் குற்றமற்றவர் என்று நிரூபணமான பிறகு திரும்ப அமைச்சரவையில் இடம் தருவதே சிறந்த வழி. அமைச்சருக்கு முதல்வர் கேடயமாகிறார் எனில் உண்மைகள் உறங்கப் போகும்.

❑ ரூ 25 பரிசு பெறுபவர் :
கே. பட்டு,
"அனுக்ரஹா"
அண்ணாநகர் விரிவாக்கம்,
கும்பகோணம் - 612 001.

இளையராஜாவின் குரு கிருஷ்ணானந்தின் சீடர்

இசைஞானி இளையராஜாவின் குரு என்று ஒரு காலத்தில் அறியப்பட்ட இசைக் கலைஞர் டி. வி. கோபாலகிருஷ்ணன்.

அதிகாலை வேளையிலேயே, இசை பயில இளையராஜா டிவிஜியின் பெசன்ட் நகர் வீட்டுக்கு வந்து போவார் அப்போது.



மிருதங்க வாசிப்பு மட்டும் போதாது என்று, கர்நாடக இசையிலும் ஒரு முக்கிய இடத்தைப் பிடித்த டி. வி. ஜி. இந்துஸ்தானி இசையும் படிக்க ஆசைப்பட்டார். குரு கிருஷ்ணானந்த் டிவிஜியின் வீட்டுக்கு வருவார்.

எப்போது?

இரவு 10 மணி, 11 மணிக்கு!

இசைப் பயிற்சி முடிந்து, குருவை அவரது வீட்டில் தமது காரிலேயே கொண்டு போய் விட்டு விட்டு வருவார் டி.வி.ஜி. ('தெருவில் குறுக்கும் நெடுக்குமாகப் படுத்திருக்கும் எருமை மாடுகளை விரட்டி விட்டுத்தான் காரை ஓட்ட முடியும்!')

மிருதங்கக் கலைஞராகப் பத்து வயதில் மேடை ஏறி, இந்த ஐம்பது வருடங்களாக மிருதங்கக் கலைஞராகவும், கர்நாடக இசைப் பாடகராகவும், பிறகு அதுவும் போதாதென்று இந்துஸ்தானி இசையையும் முறைப்படி கற்று அதிலும் வல்லவராகவும் பரிமளித்துக் கொண்டிருக்கும் டிவிஜியின் மணி விழா சென்ற வாரம் நடைபெற்ற போது, அவரது குரு கிருஷ்ணானந்த் அவர் சுபாவப்படி, கடைசி வரிசை நாற்காலி ஒன்றில் அமர்ந்திருந்தார்!

டிவிஜியின் குரல் சில திரைப்படங்களிலும் அவ்வப்போது பின்னணியில் ஒலித்ததுண்டு. (உதாரணம்: கமலின் 'ராஜபார்வை')

இசையில் புதிய புதிய முயற்சிகளை மேற்கொள்ளுவதில் டிவிஜிக்கு அசாத்திய ஆசை. கர்நாடிக் ஜால் நிகழ்ச்சிகள் நிறைய ஏற்பாடு செய்து நடத்தியதை டீவியிலும் நிறையப் பார்த்திருக்கலாம்.

செம்பை வைத்தியநாத பாகவதரைப் போலவே டிவிஜியும் இளையவர்களைத் தட்டிக் கொடுத்து ஊக்குவிப்பவர். ''ஒரு கச்சேரியில் அவர் மிருதங்கம் வாசித்தார். நான் கடம். ஒரு கட்டத்தில் கடம் 'இறங்கி' விட்டது. அது அவருக்கும் எனக்கும் மட்டும் தான் தெரியும். 'பயப்படாமல் வாசி; நான் பார்த்துக் கொள்ளுகிறேன்' என்றார். கூடவே வாசித்து உற்சாகப்படுத்தினார்!'' என்றார் கடம் வாசிக்கும் அவர் சீடர் சுரேஷ். சுஜாதா எழுதிய, பூர்ணம் விசுவநாதனின் சிங்கமய்யங்கார் பேரன் நாடகத்துக்குப் பின்னணி இசை டிவிஜி தான்.

- எஸ். வி. என்.

பரதன் அச்சகத்தில் அச்சிடுபவர் வி. முரளி. பரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் சார்பாக வெளியிடுபவர்: வி. வைத்தியநாதன். ஆசிரியர் : கி. ராஜேந்திரன். இணை ஆசிரியர் : சீதா ரவி.
முகவரி : ரேஸ்கோர்ஸ் சாலை, கிண்டி, சென்னை - 600032. தொலை பேசி - ஆசிரியர் குழு அலுவலகம் : 2345624; சர்குலேஷன் மானேஜர் : 2345623; விளம்பரம் - சந்தா : 2345622; டைரக்டர் : 2345621.
ஆண்டுச் சந்தா - உள்நாடு : ரூ. 156/-; வெளிநாடு - கப்பல் தபால் : ரூ. 400/-; விமானத் தபால் ரூ. 1050/-.
ஆறு மாதச் சந்தா - உள்நாடு : ரூ. 78/-; வெளிநாடு - கப்பல் தபால் ரூ. 200/-; விமானத் தபால் ரூ. 525/-.


அழகொளிரும் மேனி. ஸிந்தால் சாண்டல் மேனி.
CINTHOL
இப்போது நீங்கள் ஸிந்தால் சாண்டல் மூலம் பெற்றிடலாம் குறைபாடற்ற, மாசில்லா மேனியை. ஸிந்தாலில் மட்டுமே உண்டு – மேனியில் மாசு மற்றும் துர்நாற்றத்தை உண்டாக்கும் பாக்டீரியாவை அழிப் பதற்கான TCC. மென்மையான, அழகொளிரும் மேனிக்கு தொன்றுதொட்டு பயன்படுத்தப்பட்டுவரும் சந்தனத்தின் நன்மைகள்.
இன்றைய நங்கையர்க்கான இன்றைய சாண்டல் சோப்.
Godrej
CINTHOL
Sandal
Madison-G-366-Tam

REGISTERED NO. M. 4392
Registered as Newspaper in Srilanka